15 பிப்ரவரி 1994 ரூ. 3.00
www.padippakam.com


ஜெயா-சென்னா நாய்ச்சண்டையில் நாறுது 'ஜனநாயகம்'

# புதிய ஜனநாயகம்



## தலித்மக்கள் மீது பாயும் சிவசேனா வெறிநாய்

P'RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE : FRANCE



படிப்பகம்

www.padippakam.com

# பண்ணை ஆதிக்கம் ஒழிய போர்தொடுக்கும் வி.வி.மு.

மதுரை - உத்தமபாளையம் தாலுகா முழுவதும் வயல், தோட்டம், தோப்பு என்று ஏராளமான சொத்துக்களை குவித்து வைத்திருக்கும் பண்ணையார் கருத்த ராவுத்தரின் மகன் குலாம் மைதீன் குடும்பத்தின் ஆதிக்கமும் சுரண்டலும் நாராயணத் தேவன்பட்டி விவசாயிகளை பெரிதும் பாதித்துள்ளது. இவர்களுக்குள்ள சுமார் 200 குழி நிலத்தை சுருளிப்பட்டி, நாராயணத் தேவன்பட்டி, கே.கே.பட்டியைச் சேர்ந்த விவசாயிகள் 70 வருடத்திற்கும் மேலாக குத்தகைக்கு உழுது வருகிறார்கள். குத்தகை விவசாயி மலையாண்டித் தேவர்மகன் சுந்தரம் என்பவரின் நிலத்தில் '4 குழி காட்டை கிரயம் செய்து இருப்பதாக' ஏமாற்றி பிடுங்கிக் கொண்டார், குலாம் ராவுத்தர். இவரின் வாரிசு நத்தரோ இன்று மீதமிருக்கும் காட்டையும் பறித்துக் கொண்டு நிலத்தைவிட்டே விரட்டியடிக்க முயற்சிக்கிறார். இவருக்கு கணக்கராக உள்ள சுலைமான் எனும் குட்டிபண்ணையார், கருக்கோடைமுத்து என்பவன் தலைமையில் ரவுடிகளைத் திரட்டிக் கொண்டு வந்து சுந்தரம் நிலத்தில் உழுதபோது உள்ளூர் விவசாயிகள் விடுதலை முன்னணியினர் தலையிட்டுத் தடுத்தனர். ஆனால் மீண்டும் கத்தி, கம்பு, அரிவாளுடன் 150 அடியாட்களைத் திரட்டி வந்து வாழைக் கன்றுகளை நட்டனர்.

இதற்கெதிராக போலீசிடம் புகார் கொடுக்கப்பட்டும் எவ்வித நடவடிக்கையும் இல்லை. ''பேசித் தீர்த்துக் கொள்வோம்'' என்று கூறியே போலீசு நாட்களை இழுத்தடித்து பண்ணையாருக்கு விசுவாசமாக உள்ளது. இங்கு சுந்தரம் மட்டுமல்ல, 23 குத்தகை விவசாயிகள் இதுவரை பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் பாளையத்தியிலுள்ள 20 ஏக்கர் நிலத்தை பூமிதான இயக்கத்திற்குத் தானமாக கொடுத்தது, பண்ணையார் குடும்பம். இதை அரசு, 24 தாழ்த்தப்பட்ட குடும்பத்தினருக்குப் பத்திரம் முடித்து கொடுத்தும், தாழ்த்தப்பட்டவர்கள் அதைப் பயன்படுத்த விடாமல் பண்ணையார்தான் இந்நிலத்தில் உழவடை செய்து வருகிறார். தமக்கு விவசாயிகளால் எதிர்ப்பு வந்தால் அதே சாதியைச் சேர்ந்த பக்கத்து ஊர்க்காரர்களைத் திரட்டிவந்து மோதவிடுவது பண்ணையாரின் நரித்தந்திரமாக உள்ளது.

இவற்றையெல்லாம் அம்பலப்படுத்தி பகுதி வி.வி.மு. சார்பாக பிரசுரம் விநியோகித்து பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. நடவடிக்கை எடுக்கக்கோரி கொடுத்த புகார்களுக்கு எல்லாம் தாசில்தார் தரப்பிலிருந்து பதில் இல்லாததால் தாலுகா அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம் செய்ய வி.வி.மு.வினர் தீர்மானித்தனர். பகுதியில் பிரச்சாரம் செய்து 27-12-93 அன்று வட்டாரச் செயலர் தோழர் மோகன் தலைமையில் ஆர்ப்பாட்டமும் நடத்தினர். தோழர்கள் செல்வராசு, பழனிச்சாமி, தேவராஜ், இருளப்பன் ஆகியோர் உரையாற்றினர். பின்னர் கோரிக்கை மனுவை தாசில்தாரிடம் நேரில் கொடுப்பதற்காக மூவர் அலுவலகத்திற்குள் சென்றனர். இதை வாங்கிக் கொண்ட தாசில்தார், (கலெக்டருக்கு) மேலதிகாரிக்கு அனுப்புவதாகக் கூறி தட்டிக் கழித்தார். மேலும் வெளியில் முழக்கமிட்டுக் கொண்டிருந்தவர்களைப் பற்றி கிண்டலடித்து இழிவாகப் பேசினார்.



தோழர்கள் மூவரும் முறையான பதில் கிடைக்கும்வரை வெளியே போக மாட்டோம் என உட்கார்ந்துவிட்டனர். தாசில்தார் உத்தரவிட போலீசு மூவரையும் கைது செய்ய முனைந்தது. ''ஆர்ப்பாட்டத்திற்கு அனுமதி வாங்கித்தான் வந்துள்ளோம்; எங்களை அதிகாரிகளிடம் பேச அனுமதியுங்கள்'' என்று வாதாடி தாசில்தாரின் நடவடிக்கையை அம்பலப்படுத்தினர். ஆத்திரமான அவர் ''வெளியே போ'' எனக் கத்தினார். இதனால் வெளியிலிருந்த தோழர்களும் அலுவலக வாயிலை நெருங்கி ஆர்ப்பாட்டம் நடத்தவே போலீசு எல்லோரையும் கைதுசெய்தது. குழந்தைகளோடு சிலரை மட்டும் விட்டுவிட்டு 26 பேரை கைது செய்து அதிகாரியை வேலை செய்ய விடாமல் தடுத்ததாக இரு பிரிவுகளின் கீழ் பொய்வழக்குப் போட்டு நீதிமன்றம் அழைத்துச் சென்றது, போலீசு. வழியில் அறிவிக்கப்படாத ஊர்வலம் போல் முழக்கமிட்டவண்ணம் சென்று பகுதியில் பிரச்சாரம் செய்தனர். மதுரை சிறையிலடைக்கப்பட்ட தோழர்கள், அமைப்பு ஆதரவு வழக்கறிஞர்களின் முன்முயற்சியால் இரண்டு நாளில் பிணையில் வெளிவந்தனர். இப்போராட்டம் பகுதி மக்களிடையே நம்பிக்கையை உருவாக்கியது.

**தலையங்கம் தொடர்ச்சி...**

பாக ஏற்கனவே படித்த மாணவர்களது சான்றிதழ்களை வாங்கிவிடுவது; ஒரு வேளை அம்பேத்கர் பெயர் வைப்பதைத் தடுக்க முடியாமல் போனால் இதுவரை மரத்வாடா பல்கலைக் கழகத்தில், அப்பிராந்தியத்தில் உள்ள எல்லாக் கல்லூரிகளையும் புதிதாக உருவாக்கப்படும் நாண்டட் பல்கலைக் கழகத்துக்கு மாற்றுவதன் மூலம் அம்பேத்கர் பல்கலைக் கழகத்தினை பெயரளவிலானதாக்கிவிடுவது என்று தமக்கே உரிய சதித்தனமான முறையில் மேல்சாதியினர் தீர்மானித்துள்ளனர்.

அம்பேத்கர் இந்த நாட்டுக்கும் மக்களுக்கும் ஆற்றிய பணிகளை இவ்வளவு காலமும் நேரு - இந்திரா - ராஜீவ் பரம்பரை காங்கிரசு ஆட்சி புறக்கணித்தே வந்தது. மரத்வாடாவிலேயே சமூக சீர்திருத்தங்கள் மட்டுமின்றி, முதன்முதலாக பள்ளி, கல்லூரிகள் திறந்து சேவைகள் புரிந்தவர், அம்பேத்கர். 1989 இல் தேசிய முன்னணி ஆட்சிக்கு வந்த பிறகுதான் — அதுவும் தனக்கென ஒரு ஓட்டு வங்கியை உருவாக்கிக் கொள்வதற்காகத்தான் என்றாலும் — அவருக்கு ''பாரத ரத்னா'' விருது வழங்கி, இரண்டு வருடங்களுக்கு நூற்றாண்டு விழாக்கள் நடத்தியும், படைப்பு நூல்கள், நினைவு விருதுகள் மற்றும் பிறவும் செய்து உரிய மரியாதை காட்டத் துவங்கியது. வேறு வழியின்றி காங்கிரசு அதைப் பின்பற்றுகிறது; தலித்துக்களை முஸ்லீம்களுக்கு எதிராகத் திருப்பிவிடும் நோக்கத்தோடு அம்பேத்கர் பெயரை ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்களும் பயன்படுத்துகின்றன. ஆனால் பார்ப்பன சனாதன வருணாசிரம - சாதி ஆதிக்கத்தை மீண்டும் உயிர்ப்பிப்பதற்கான தீவிர முயற்சியில் இந்து மதவெறி பாசிஸ்டுகள் இறங்கியுள்ளனர். தலித்துக்களின் அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டு முன்னேற்றம் அதற்குத் தடையாக எழுவதைக் காண்கின்றனர். 20 ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் இச்சனாதன வருணாசிரம - சாதிக் கொடுமைகள் நீடிப்பது நமது நாட்டுக்கும், சமூகத்துக்கும் மிகப் பெரிய அவமானம். தாழ்த்தப்பட்ட மந்திரி திறந்துவைத்த சிலைக்கு பாலூற்றி, கங்கை நீரூற்றித் தீட்டுக் கழிப்பது, தாழ்த்தப்பட்டவனை மலம் தின்ன வைப்பது, கலப்புத் திருமணம் செய்ததற்காக தாழ்த்தப்பட்டவன் தலையைத் துண்டிப்பது, மழைக்கு கோவில் சுவருகே ஒதுங்கிய தாழ்த்தப்பட்டவனை கல்லால் அடித்துக் கொல்வது இதைவிட கொடூரம் உலகில் வேறெங்காவது உண்டா? தெரியாது! ஆனால் இதை இனியும் சகிப்பது மனிதப் பண்பு அல்ல. நாராயண குரு, பெரியார், பூலே, அம்பேத்கர் ஆகியோரின் சாதி ஒழிப்பு, சமூக சீர்திருத்தங்களை நாம் மதிப்போம். ஆனால் அவர்களது சமாதான சீர்திருத்தங்கள் இந்திய சாதி சமூக ஆதிக்கத்தின் முன் தோற்றுப் போய்விட்டன என்பதையும் உணருவோம். இனி ஒரு முடிவு செய்வோம். சாதி, சமூக ஆதிக்கத்தை வேரறுக்கத் தக்க ஆயுதங்களுடன் புரட்சியில் குதிப்போம்.


படிப்பகம்

www.padippakam.com

புதிய
ஜனநாயகம்

மார்க்சிய — லெனினிய
அரசியல் ஏடு

ஒன்பதாம் ஆண்டு

5-6

16 ஜன. — 15 பிப். '94

உள்நாடு:
தனி இதழ்: ரூ.3.00
ஆண்டு சந்தா: ரூ.72.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 16

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்
இரா.சண்முகராஜ்,
ஆசிரியர், புதிய ஜனநாயகம்,
4, சாமியார் தோட்டம்,
ஆலந்தூர் சாலை,
சைதாப்பேட்டை,
சென்னை - 600 015.

# தலித்துக்களே வாரீர்! புரட்சித் தீ ஏந்துவோம்!

மராட்டிய மாநிலம், மரத்வாடா பிராந்தியத்தில் மீண்டும் ஒரு பெரும் பூகம்பம் வெடித்திருக்கிறது. அதன் பாதிப்பு மராட்டிய மாநிலம் முழுவதும் பரவியுள்ளது. இயற்கையான பூகம்பம் என்றால் அது எல்லாப் பிரிவு மக்களையும் பாதிக்கும் பேரழிவாக இருக்கும். ஆனால் இப்போது அங்கே வெடித்திருப்பது செயற்கையானது; பார்ப்பன, மராத்தா சாதியினர் மற்றபிற மேல்சாதியினரைத் திரட்டிக் கொண்டு தாழ்த்தப்பட்ட தலித் மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விட்டிருக்கும் சாதி ஆதிக்கக் கொலைவெறியாட்டம்தான் இந்தப் பூகம்பம். மரத்வாடா பல்கலைக் கழகத்துக்கு அம்பேத்கர் பெயர் சூட்டுவது என்கிற மராட்டிய அரசின் முடிவை எதிர்த்து அப்பிராந்திய தலித் மக்கள்மீது இத்தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது.

மரத்வாடா பல்கலைக் கழகத்துக்கு அம்பேத்கர் பெயர் சூட்டுவது என்று 1978-லேயே மராட்டிய சட்டமன்றம் முடிவு செய்தது. அதை எதிர்த்து பார்ப்பன, மராத்தா சாதி வெறியர்கள் நூற்றுக்கணக்கான தலித்துக்களைக் கொன்றும், ஆயிரக்கணக்கான குடும்பங்களை அப்பிராந்தியத்தில் இருந்தே விரட்டியும் வெறியாட்டம் நடத்தினர். பிரச்சினைக்குத் தீர்வு காணும்படி ஒரு கமிட்டி அமைத்துவிட்டு பெயர் மாற்ற முடிவை கிடப்பில் போட்டது, அரசு. கடந்த 15 ஆண்டுகளில் பல்வேறு தலித் கட்சிகளும் குழுக்களும் அம்பேத்கர் பெயர் சூட்டும் முடிவை அமுலாக்கக்கோரி சிறியதும் பெரியதுமாகப் பல போராட்டங்களை நடத்தின. குறிப்பாக அம்பேத்கர் நூற்றாண்டு நிறைவுக்குள் அதைச் செய்யுமாறு வலியுறுத்திய தலித்துக்கள் மீது 1993 இல் மட்டும் 1023 கொலைவெறித் தாக்குதல் நடத்தினர், மேல்சாதியினர். அதற்கும் அஞ்சாத தலித் மக்கள் தமது போராட்டத்தைத் தீவிரப்படுத்தினர், அதுவும் அமைதி வழியில் தான். கடந்த மாதம் ஒரு இளைஞனும், மாணவியும் தீக்குளித்து மாண்டுபோயினர். இது தொடரும் நிலை எழுந்தது. மராட்டிய அரசில் பங்கேற்கும் தலித்துக்களின் குடியரசுக் கட்சி மந்திரி பதவி விலகுவதாக எச்சரித்தார். இதுவரை தலித்துக்களை ஓட்டு வங்கியாக வைத்து ஆட்சியைப் பிடித்து வந்த காங்கிரசை இப்போது அவர்கள் புறக்கணித்து, உ.பி. தேர்தல்களில் மண்ணைக் கவ்வும்படி செய்தனர். அதோடு அடுத்த ஆண்டு மராட்டியத் தேர்தலில் தலித்துக்களின் ஆதரவின்றி காங்கிரசு மீண்டும் ஆட்சியைப் பிடிக்கவே முடியாது. இக்காரணங்களாலும், தங்களுக்கு எதிராக தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மை மக்களின் கூட்டு உருவாகிவிடக் கூடாது; அதற்காகத் தாழ்த்தப்பட்ட மக்களையும், பிற்படுத்தப்பட்ட மக்களையும் பிரித்து மோதவிடுவதற்கு ஏதுவாயும் இப்போது பெயர் மாற்றத்துக்கு காங்கிரசு ஆட்சியாளர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர்.

பெயர் மாற்ற முடிவை சிவசேனாவைத் தவிர வேறு எந்த அரசியல், சமூக அமைப்புகளின் தலைமையும் பகிரங்கமாக எதிர்க்கவில்லை; மாறாக ஒப்புதலும் ஆதரவும் அளிக்கின்றன. ஆனால் மண்டல் பரிந்துரை அமுலாக்க விவகாரத்தில் நடந்து கொண்டதைப் போல பாரதீய ஜனதா - ஆர்.எஸ்.எஸ். - பரிவாரங்களும், காங்கிரசும் கீழிருந்து உள்ளூர் பிரமுகர்கள், அணிகள் மூலமாக சிவசேனாவை முன்னிறுத்தி பார்ப்பன, உள்ளிட்ட எல்லா மேல் சாதிகளோடு பிற்படுத்தப்பட்ட சாதிகளையும் திரட்டித் தாழ்த்தப்பட்ட தலித்துக்கள் மீது தொடர்ந்து கொலைவெறித் தாக்குதல் நடத்தி வருகின்றனர். பெயர் மாற்ற முடிவு அறிவிப்பதற்கு முன்பாகவே மரத்வாடா பிராந்திய ''பந்த்'' அறிவித்து வெறியாட்டம் போட்டனர். பெயர் மாற்ற அறிவிப்பிற்குப் பிறகு, மரத்வாடா பிராந்தியத்தின் ஏழு மாவட்டங்களில் மட்டுமல்லாது, மராட்டிய மாநிலத்தின் பல இடங்களுக்கும் ரயில் நிலையங்கள், அரசுப் பேருந்துகள், பள்ளி - கல்லூரிகள், நூலகங்கள் மின் நிலையங்கள் கொளுத்தப்படுகின்றன; தண்டவாளங்கள் தகர்த்தப்பட்டன; போக்குவரத்து தொடர்ந்து நிலைகுலைந்து போயுள்ளது. சிவசேனா, ஆர்.எஸ்.எஸ். அதன் மாணவர் பிரிவு ரௌடிகள் வெடிகுண்டுகளுடன் பிடிபட்டுள்ளனர். இவற்றைவிட முக்கியமாக தலித்துக்கள் கத்திக் குத்துகளுக்குப் பலியாவதும் அவர்களது வீடுகள் சூறையாடி எரிக்கப்படுவதும் மூர்க்கமாக நடக்கின்றன. தலித்து மக்கள் அந்தப் பிராந்தியத்திலேயே வாழ முடியாத, பாதுகாப்பற்ற நிலை எழுந்துள்ளது. அம்பேத்கர் சிலைகள் தகர்க்கப்படுவதும் அவமானப்படுத்தப்படுவதும் தொடர்கிறது. இத்தனைக்கும் பெயர் மாற்ற முடிவைக் கொண்டாட வேண்டாம் என்று பல 'தலைவர்'களும் கோரியதை அவர்கள் ஏற்று பொறுமை காத்து வருகின்றனர். ஆனால் மேல்சாதி வெறியை மேலும் விசிறிவிடுவதற்காக பேரணி நடத்த அங்கு போன சிவசேனா பாசிசத் தலைவன் பால்தாக்கரே சகல அரசு மரியாதைகளுடன் திருப்பி அனுப்பப்பட்டதற்கே மராட்டிய ''பந்த்'' நடத்தி அராஜகம் புரிந்துள்ளார்கள்.

இந்தப் பெயர் மாற்றத்தை ஒட்டி மேல் சாதியினரைச் சமாதானப்படுத்துவதற்காக அரசும் இரண்டு முக்கிய சலுகைகளை அவர்களுக்கு அளித்துள்ளது. மரத்துவாடா பல்கலைக் கழகத்தின் கீழிருந்த ஏழு மாவட்டங்களில் நான்கைப் பிரித்து நாண்டட் நகரில் பார்ப்பன சாதித் 'தலைவ'ரான சுவாமி ராமானந்த் தீர்த்தா பெயரில் தனிப் பல்கலைக் கழகம் அமைக்கப்படும். அதாவது மரத்வாடா பல்கலைக் கழகத்தை இரண்டாகப் பிரித்து பாதிக்குத்தான் அம்பேத்கர் பெயர் சூட்டப்படும். அதுவும் பெயர் மாற்றமில்லை; ''பாபாசாகேப் அம்பேத்கர் மரத்வாடா பல்கலைக் கழகம்'' என்று விரிவுபடுத்தப்படுகிறது என்கிற சமாதானம் வேறு. இன்னும் முக்கியமானது தலித்துக்களுக்கு எதிராக மேல் சாதியினரது குற்றங்களின் பேரில் போடப்பட்டுள்ள எல்லா கிரிமினல் வழக்குகளும் விலக்கிக் கொள்ளப்படும். இச்சலுகைகள், அராஜக வன்செயல்களால் அடங்காத மேல் சாதியினர், பெயர் மாற்றம் அமுலுக்கு வருவதற்கு முன்

தொடர்ச்சி 2 ஆம் பக்கத்தில்...

படிப்பகம்

www.padippakam.com

# ஜெயா – சென்னா நாய்ச்சண்டையில் நாறுது 'ஜனநாயகம்'

தமிழக முதல்வருக்கும் ஆளுநருக்கும் இடையிலான மோதல் உக்கிரமடைந்து சந்தி சிரித்துவிட்டது. காங்., அ.தி.மு.க. உறவு முறிந்தபின் ஆளுநராக வந்த சென்னாரெட்டி தொடக்கம் முதலே ஜெயலலிதாவுடன் பனிப்போர் நடத்தி வந்தார். ஆர்.எஸ்.எஸ். அலுவலகக் குண்டு வெடிப்புச் செய்தியை ஜெயா அரசாங்கம் ஆளுநருக்கு அனுப்பாதது தொடர்பாக குற்றம்சாட்டினார். ராணிப்பேட்டை, பழனி இடைத்தேர்தலிலும் ஜெயாவின் சகபாடிகள் அரசைக் கேடாகப் பயன்படுத்தியது பற்றி அறிக்கை கேட்டு மோதினார்.

பதிலுக்கு ஜெயா தனது சகபாடிகளான எஸ்.டி.எஸ்., கே.ஏ.கே., கண்ணப்பன் ஆகிய அமைச்சர்களைக் கொண்டு பலவாறாக ஆளுநரை தாக்கிப் பேச வைத்தார். ஆளுநரின் பொது நிகழ்ச்சிகளில் தானும் கலந்து கொள்ளாததோடு தனது அமைச்சர்கள், அதிகாரிகள் வரை அனைவரையும் தடுத்தார். ஆளுநரின் நடவடிக்கைகளை உளவு பார்த்ததோடு அவருக்குரிய பாதுகாப்பையும் குறைத்தார்.

சென்னாரெட்டி மத்திய அரசின் பாதுகாப்பைப் பெற்றும், தலைமைச் செயலர் டி.வி.வெங்கட்ரமணனின் பதவி நீட்டிப்பு உத்தரவை இழுத்தடித்தும் ஜெயாவிற்கு வெறுப்பேற்றினார். இதே போல் சென்னைப் பல்கலைக்கழக துணை வேந்தருக்கு மூவரை ஜெயா அரசாங்கம் பரிந்துரைத்து அனுப்பிய கோப்பை திருப்பி அனுப்பியது ஆளுநர் மாளிகை. பின்னர் மூவரும் ஊழல், முறைகேடு குற்றம் சாட்டப்பட்டவர்கள் என விளக்கமளித்தார், ஆளுநரின் செயலாளர்.

துணைவேந்தர் தேர்வுக்கான கோப்பை சென்னா திருப்பியனுப்பிய ஆத்திரத்தில், ஜெயா புதிய ஆண்டின் சட்டசபைக் கூட்டத்தை ஆளுநர் உரையின்றி நடத்தினார். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ரகளை செய்த காங்கிரசுக்காரர்களை வெளியனுப்பிவிட்டு ஆளுநரிடம் இருந்த பல்கலைக்கழக வேந்தர் பதவியை தனக்கு பறித்துக் கொண்டு மசோதா நிறைவேற்றினார். வருகிற குடியரசு தினத்தன்று வழக்கத்திற்கு மாறாக மாவட்டந்தோறும் கலெக்டருக்குப் பதிலாக அமைச்சர்கள்தான் கொடியேற்றுவார்கள் என அறிவித்துள்ளது, அ.தி.மு.க. அரசாங்கம்.

காங்கிரசு எம்.எல்.ஏக்கள் ஆளுநரையும், பிரதமரையும் சந்தித்து ஆட்சியைக் கலைக்கச் சொல்லி நெருக்கடி கொடுத்து வருகின்றனர். ஆட்சியைக் கலைப்பது உறுதி என்ற வதந்தியையும் பரப்பி வருகின்றனர். இதனால் நரசிம்மராவ், ஜனாதிபதி ஆகியோரை சந்தித்து கருத்தறிய முயற்சிக்கிறார், ஜெயலலிதா. சென்னாவையும், வாழப்பாடியையும் பதவிகளிலிருந்து கழற்றி விடுவதற்காக பேரம்பேசவும் முயற்சித்து வருகிறார். ஹைதராபாத்திலும், டில்லியிலும் ராவை சந்திக்க ஜெயா காத்திருந்தும் ராவ் மறுத்துவிட்டார். முன்பு தன்னையும் சவாண் போன்ற தனது சகாக்களையும் சந்திக்க மறுத்து ஜெயா அடாவடித்தனம் செய்தது போல் தற்போது ராவும் செய்து பழிவாங்குகிறார்.

இதுவல்லாமல் எதிரெதிராக காங்கிரசும், ஜெயாவும் ஒரு அணியை உருவாக்கி தலைமையோடு மோதவிட்டுக் கொண்டுள்ளனர். "ஜெயா காங்கிரசு" என்றழைக்கப்படுகிற எம்.பி. தங்கபாலு, எம்.எல்.ஏ. சிங்காரம் முதலான சிலர் காங்கிரசிற்கு எதிராக ஜெயாவுக்குச் சாதகமாக செயல்படுகிறார்கள். அழகு திருநாவுக்கரசு, ஜி.விஸ்வநாதன், எஸ்.ஆர். ராதா, ராஜாராம் முதலானவர்களைக் கொண்டு ஜெயாவிற்கு எதிராக எம்.ஜி.ஆர். மன்றத்தைப் புதுப்பிக்கச் செய்கிறது, காங்கிரசு.

ஜெயலலிதாவும் சென்னாரெட்டியும் இப்படி மோதிக்கொள்வது மாநில நிர்வாகத்திற்கு நல்லதல்ல; நிர்வாகம் சீர்கெடுவதோடு ஜனநாயகத்தின் மீதான நம்பிக்கை குறையும்தான் ஏற்படும்; பொறுப்புள்ள உயர் பதவியிலிருப்பவர்களே இந்தியாவின் மரபையும் அரசியல் சட்டத்தையும் மீறுவது சரியல்ல என்று எல்லோரும் ஒப்பாரி வைக்கிறார்கள். குறிப்பாக ஜெயாவின் அத்துமீறலைக் கண்டிக்கிறார்கள்.



ஜெயலலிதாவின் நடவடிக்கைகள் இந்திய சட்ட அமைப்பின் வரம்பு கடந்த, கேலிக்குரியவைதான் என்பதும் வெறும் அதிரடி - மிரட்டும் நடவடிக்கைதான் என்பதும் உண்மை. இதற்குமுன் என்.டி. ராமராவ் ஆந்திராவில் இதேபோன்று வேந்தர் பதவியை தனக்கு (முதல்வருக்கு) எடுத்துக் கொண்டு சட்டம் நிறைவேற்றியபோது பல்கலைக்கழக மானியக் குழு ஏற்றுக் கொள்ளாமல் நிதியளிப்பதை நிறுத்திக் கொண்டது. இதன் மூலம் பல்கலைக்கழக நிர்வாகம் நிலைகுலைந்து என்.டி.ஆர்.-க்கு புகழ் சரிவும் ஏற்பட்டது. பின்னர் ஆட்சிக்கு வந்த சென்னாரெட்டி மீண்டும் அப்பதவியை கவர்னருக்கே மாற்றி, மானியக் குழுவின் நிதியையும் பெற்று தந்தார். தற்போதும் ஜெயாவின் சட்டத்தை பல்கலைக்கழக மானியக்குழு ஏற்க மறுத்துள்ளதால் ஆந்திராவில் நடந்ததுதான் தமிழகத்திலும் நடக்க வாய்ப்புள்ளது. மேலும் ஆளுநரின் அதிகாரம், சம்பளம், பதவி காலம் முதலியவற்றை தீர்மானிக்கும் - மாற்றும் அதிகாரம், இந்திய சட்டப்படி பாராளுமன்றத்திற்கே உண்டு.

ஜெயலலிதா, ஆளுநர் உரை இல்லாமல் சட்டசபை நடத்தியது போல் ஒரு முறை பஞ்சாப்பிலும் நடந்தது. அப்பொழுது அம்மாநில ஆளுநர் தனது ஆதரவாளர்களைக் கூட்டி புதிய ஆண்டில் சட்டசபைக்கு வெளியே தனது உரையை நிகழ்த்தியது நடந்தது. மேலும் ஆளுநர் தனது உரை நிகழ்த்துவதற்காகவோ, வேறு பிரச்சினைக்காகவோ தனியே சட்டசபையைக் கூட்டச் சொல்லி ஆணையிடவும் முடியும். இதுபோன்ற நடவடிக்கையில் சென்னாரெட்டி இறங்குவாரானால் ஜெயலலிதா அவமானப்படவே நேரிடும். எனவே, ஜெயலலிதாவின் நடவடிக்கை இந்திய அரசியல் சட்டத்தை மீறிய ஒன்று என்பது உண்மைதான். ஆனால் காங்கிரசுக்காரர்கள் இதைச் சொல்ல அருகதையற்றவர்கள். இந்த சட்டத்தையோ, ஆளுநர் பதவியையோ மதிப்பவர்களா அவர்கள்? இல்லை; மிதித்தவர்கள்.

மேற்கு வங்கத்தில் ஜோதிபாசு அமைச்சரவை தயாரித்துக் கொடுத்த உரையை ஆளுநர் நூருல்ஹாசன் நிகழ்த்தவிடாமல் சட்டசபையில் காங்கிரசுக்கா



படிப்பகம்

www.padippakam.com

ரர்கள் ரகளை செய்தனர். நடந்த அடிதடி கலாட்டாவில் ஆளுநரின் கையிலிருந்த அறிக்கையைப் பிடுங்கி எறிந்து தாக்கியது, காங்கிரசு கும்பல். ஏன், தற்போது உட்கட்சி மோதல் நடக்கும் கர்நாடகா பிரச்சினையை எடுத்துக் கொள்ளுங்கள்! முதல்வர் வீரப்ப மொய்லிக்கு எதிராக துணை முதல்வர் தலைமையில் 8 அமைச்சர்கள் தங்கள் ராஜினாமா கடிதத்தை நேரடியாக ஆளுநரிடமே கொடுத்தனர். இதை ஏற்றுக் கொண்டதாக அறிவிப்பது தான் ஆளுநரின் கடமை. ஆனால், ஆளுநர் காங்கிரசின் மையப் பிரதிநிதி மிஸ்ரா வந்து ஆய்வு செய்து பின்னர் ராவ் முடிவு அறிவிக்கும்வரை எதுவுமே சொல்லாமல் வைத்துக் கொண்டிருந்தார். ஏதோ, கட்சித் தலைமையிடம் கொடுக்கப்பட்ட ராஜினாமா கடிதம் போல் கையாளப்பட்டுள்ளது.

ஜானகி ஆட்சியில் வானளாவிய அதிகாரத் திமிரில் ஆடிய சபாநாயகர் பி.எச்.பாண்டியன் மீது குற்றஞ்சாட்டி காங்கிரசு கீழ்த்தரமாக ரகளை செய்தது. மேலும் ஆந்திர மாநிலத்தின் முன்னாள் ஆளுநர் குமுதபென் ஜோஷியின் (காங்கிரசு) ஆடம்பர செலவுகள் பற்றி நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் உபேந்திரா சிறப்பு பிரேரணை கொண்டு வந்த போது காங்கிரசு எம்.பி.க்களும், ராஜீவும் போட்ட கூச்சலும் ரௌடித்தனமும் சொல்லி மாளாது. இப்படி கவர்னர், சபாநாயகர், நீதிபதி, தேர்தல் கமிஷனர் போன்ற பதவிகளை மதிக்காததற்கும் இந்திய அரசியல் சட்டத்தைக் காலில் போட்டு மிதித்ததற்கும் ஏராளமான சம்பவங்கள் - ஆதாரங்கள் காட்ட முடியும்.

மேலும், இது ஜெயா, சென்னா ஆகிய தனிப்பட்ட நபர்களின் தவறுதான் என சித்தரிப்பதும் உள்ளது. முதல்வர், கவர்னர் விவகாரத்தில் மட்டுமல்ல; சபாநாயகர், நீதிபதி, தேர்தல் கமிஷனர், பிரதமர், ஜனாதிபதி, அதிகாரிகள் என பல பதவிகளிலும் இத்தகைய அதிகார நாய்ச்சண்டைதான் நடக்கிறது. பி.எச்.பாண்டியன், சேஷன், ஜோதிபாசு, மணிப்பூர் சபாநாயகர் முதலானோர் அண்மைக் கால உதாரண புருஷர்கள். இதில் ஜெயலலிதா தனக்கே உரிய பாசிச குணத்தால் எல்லோருடனும் மோதிப் பார்க்கிறார், அவ்வளவுதான். நேற்று நீதிபதி, தலைமை தேர்தல் கமிஷனர், பிரதமர், பத்திரிகையாளர்கள் என மோதினார்; இன்று கவர்னரோடு மோதுகிறார். எனவே, இது தனிப்பட்ட நபர்களிடம் உள்ள பிரச்சினையல்ல; இந்த அரசியல் சட்டத்தில் - சமூக அமைப்பில் உள்ள பிரச்சினை.


ஆளுநர் உரை தொடர்பான மரபை எல்லாம் மீறியது சரியா, தவறா; வேந்தர் பதவியை முதல்வர் வகிப்பதுதான் நியாயம், நியாயமில்லை போன்ற குழாயடிச் சண்டையையும் பட்டிமன்றத்தையும் ஒதுக்கிவிடுவோம். கவர்னர், முதல்வருக்குள் யாருக்கு வானளாவிய அதிகாரம் என்கிற நாய்ச்சண்டையே இந்த ஜனநாயகத்தின் முகத்திரையைக் கிழிக்கப் போதுமானது.

இந்திய அரசியலமைப்புச் சட்டப்படி ஒவ்வொரு மாநிலத்துக்கும் ஆளுநரே எல்லா நிர்வாக அதிகாரங்களையும் செலுத்தக் கூடியவர். ஆளுநருக்கு உதவியும் ஆலோசனையும் வழங்குவதற்கு முதலமைச்சர் தலைமையில் ஓர் அமைச்சரவை இருக்கும். முதலமைச்சர்களை நியமிப்பது, நீக்குவது உட்பட அனைத்து அதிகாரமும் கொண்டவர், ஆளுநர். 356 வது பிரிவு போன்ற முக்கிய சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள குடியரசு தலைவர் ஒப்புதலைப் பெறவேண்டும் என்றாலும் அமைச்சரவையை, சட்டமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் கவர்னருக்கு உண்டு. அதேபோல அமைச்சரவை முடிவுகளையும் நிர்வாகத் தொடர்புடைய எல்லா விபரங்களையும் ஆளுநருக்கு அளிக்க வேண்டியதும் சட்டமன்ற நடவடிக்கைகள், தீர்மானங்களுக்கு ஆளுநரிடம் ஒப்புதல் பெற வேண்டியதும் ஒரு முதலமைச்சரின் கடமை.

பொதுவில் இதே வகையான அதிகார முறைகள் மத்தியில் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் உள்ளன. எனவே நடைமுறை எதார்த்தத்தில் மத்திய ஆளுங்கட்சியின் வலது கரங்களாகத்தான் ஜனாதிபதியும் கவர்னரும் இருக்க முடிகிறது. மத்தியிலும் மாநிலத்திலும் எதிரெதிர் கட்சிகள் ஆளுங்கட்சியாக அமைந்து நல்லுறவும் இல்லாத பட்சத்தில் கவர்னர் - முதல்வர் அதிகார மோதல்கள் வெடிக்கின்றன. முதல்வருக்கு வரம்புக்குட்பட்ட அதிகாரங்கள் இருப்பினும் இந்த அரசியல் சட்ட முறையில் உள்ள சுயமுரண்பாடுகள், சிக்கல்கள், ஓட்டைகளைப் பயன்படுத்தி மோதுவதுதான் நடக்கிறது.

சட்டமன்ற கூட்டத்தொடரைக் கூட்டவும், முடிக்கவும் ஆளுநருக்கு அதிகாரம் இருக்கும் அதேசமயம் சபாநாயகரும் தனது பொறுப்பில் கூட்டத்தைக் கூட்டவும், முடிக்கவும் அதிகாரம் பெற்றிருப்பது போல சட்டத்தில் ஏராளமான குளறுபடிகள் உள்ளன. சபாநாயகர் கூட்டும் கூட்டத்திற்கு அதிகார வரம்பு, கால இலக்கு போன்றவை தெளிவாக வரையறுக்கப் படாமலிருப்பதை இன்று 'சேடப்பட்டியார்' பயன்படுத்தி ஆளுநருக்கு 'தண்ணி' காட்டுகிறார்.

ஒரு அமைச்சரைக் குற்றவாளியாக அறிவித்து ஆளுநர் கைது செய்ய உத்தரவிடுகிறார் என்றால், முதல்வரின் நேரடி வழிகாட்டுதலில் இருக்கும் போலீசுதுறையை முதல்வர் தடுக்கிறார் என்றால் போலீசு அதிகாரிகள் எதை நடைமுறைப் படுத்துவது? எதார்த்தத்தில் போலீசு அதிகாரிகளின் கட்சி விசுவாசத்தைப் பொறுத்து அவர்களுக்குள்ளும் பிரிந்து மோதல்கள் நடப்பதாகத்தான் உள்ளது. தற்போது ஜெயா போலீசு துறை மூலம் கவர்னர் பாதுகாப்பைக் குறைப்பதும் உளவு பார்ப்பதும் இத்தகைய ஒன்றே. இதே நிலை அரசு அதிகாரிகளுக்கும் பொருந்தும்.



டில்லியில் நரசிம்மராவை சந்தித்து முறையிடும் ஜெயா; சுயகௌரவத்தில் விஞ்சிய பாசிஸ்டு யார்?

ஆளுநர், அமைச்சர்களுக்குப் பதவிப் பிரமாணம் செய்துவிட்டு ஒதுங்கிக் கொண்டு — அதாவது நிர்வாகப் பொறுப்பையும், முடிவெடுத்து அரசை இயக்கும் பொறுப்பையும் குறிப்பிட்ட அதிகாரத்திற்குட்பட்ட அமைச்சர்களுக்குக் கொடுத்துவிட்டு — வெறும் கையெழுத்துப் போடுபவராக இருந்து விடுகிறார். இப்படி சட்டரீதியாக ஆளுநருக்கு உயர் அதிகாரம் இருந்தாலும் மரபு, நடைமுறைரீதியாக உள்ள வாய்ப்பைப் பயன்படுத்தி முதல்வர் அதிகாரத்தைக் கையிலெடுத்துக் கொண்டு மோதிப் பார்ப்பது தான் நடக்கிறது.

ஜெயலலிதா தனக்கு வேந்தர்



படிப்பகம்

www.padippakam.com

பொறுப்பை எடுத்துக் கொண்டதுபோல கவர்னரே தேவையில்லை என்கிற தீர்மானத்தைக் கூட (அல்லது கவர்னரை சட்டமன்ற கூண்டில் நிறுத்தி கண்டனத் தீர்மானம்கூட) அவருக்குள்ள அதிகாரத்தைக் கொண்டு நிறைவேற்றலாம். ஆனால் அது நடைமுறைக்காக கவர்னர் - ஜனாதிபதி ஒப்புதலுக்குப் போக வேண்டியுள்ளது. இதையும் "தேவையில்லை" என ஜெயலலிதா தீர்மானம் போடலாம். ஆனால் அரசியல் சட்டத்திற்கு எதிராகப் போவதாகக் கூறி கவர்னர் அதற்குள் ஆட்சியைக் கலைத்துவிட்டால் எல்லாம் கேலிக்கூத்தாகி விடுகிறது. கவர்னர் நடவடிக்கைக்கு எதிராக ஜெயா நீதிமன்றம் போகலாமா? சரி அப்படி நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து ஜெயலலிதாவிற்கு சாதகமாகத் தீர்ப்பு வந்தாலும்(?) அதற்கு ஆளுநர் கட்டுப்பட வேண்டுமா என்பது பற்றி எந்த சட்டமும் குறிப்பாக இல்லை. அப்பொழுது ஆளுநரா, நீதிபதியா என்கிற அதிகார நாய்ச்சண்டை வேண்டுமானால் நடக்கலாம்.

ஜெயலலிதா அமைச்சரவையிலோ, சட்டமன்றத்திலோ விவாதிக்காமலேயே திரைமறைவில் எதேச்சதிகாரமாகப் பல ஆணைகளைப் பிறப்பிக்கிறார் என்று காங்கிரசு தரப்பு குற்றம் சாட்டுகிறது. உண்மைதான். ஆனால், இதைக் காரணம்காட்டி ஆளுநர், முதலமைச்சர் ஆலோசனையைப் புறக்கணித்துவிட்டுத் தனியாக ஒரு முடிவை எடுத்து ஆணையிட முடியுமா? உதாரணத்திற்கு போலீசு அதிகாரிகள் இடமாற்றம் பற்றிய முதல்வரின் முடிவைப் புறக்கணித்துவிட்டு தன் சுயமான பட்டியல்படி ஆளுநர் போலீசு அதிகாரிகளை மாற்றம் செய்யலாமா? அப்படி செய்தால் தனது தரப்பு நியாயத்திற்காக ஜெயலலிதா நீதிமன்றம் செல்ல முடியுமா? ஜெயா அரசாங்கம் அனுப்பும் கோப்புகளை ஆளுநர் பார்வையிடாமலும் பதில் சொல்லாமலும் ஜனாதிபதிக்கு அனுப்பாமலும் கிடப்பில் போட்டால் என்ன செய்வது? ஜெயா மீதான குற்றச்சாட்டை சேஷனுக்கு பீஷ்மநாராயண சிங் அனுப்பாமல் தாமதித்த விவகாரம் போல் பிரச்சினை சந்திசிரிக்கும்.

ஜெயா, சென்னா அதிகார மோதலை மக்களுடைய முக்கியப் பிரச்சினைப் போல பூதாகரப்படுத்திக் காட்டுவதும் நடக்கிறது. மேலும், கருணாநிதி — வை.கோபால்சாமி மோதலை கொம்பு சீவிவிடும் முறையில் சித்தரித்து எழுதும் தினமலர், தினமணி, "இந்து" பத்திரிகைகள் ஜெயா-சென்னா மோதலில் அடக்கமாக வாசிக்கின்றன; சாதாரண மோதல் போல் பூசி மெழுகுவதோடு இவருக்கும் சமரசம் காணவும் காங்., அ.தி.மு.க. உறவு மீண்டும் வரவும் தரகு வேலையும் செய்கின்றன.

மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் மற்றும் இப்பிரதிநிதிகளால் தேர்ந்தெடுக்கப்படும் அல்லது நியமிக்கப்படும் நபர்களுக்கிடையே உள்ள அதிகார மோதல்கள், இவர்களின் ஊழல்கள், அராஜக - அடாவடி - அடக்குமுறை நடவடிக்கைகளால் வெறுப்புறும் மக்கள் முன் இரண்டு தீர்வுகள் முன்வைக்கப்படுகின்றன. ஒன்று சி.பி.எம்., தி.மு.க. போன்ற கட்சிகள் மாநில சுயாட்சி, கூடுதல் அதிகாரம், 356 வது சட்டத்தை நீக்குவது முதலியவற்றை கோஷங்களாக வைப்பது; மற்றொன்று ஒரு நபர் - ராணுவ ஆட்சிதான் தீர்வு என முன்வைப்பது.

தி.மு.க.வின் கருணாநிதி, வை.கோ. அணிகள், போலி கம்யூனிஸ்டுகள், ப.நெடுமாறன் முதலானோர் முதலாவது வகை கோஷத்தை தற்போதும் முன்வைப்பதைப் பார்க்கலாம். ஜெயா வேந்தர் பதவியை மக்கள் பிரதிநிதிக்கு கொடுத்ததைப் பாராட்டுகிறார்கள்; 356-வது சட்டத்தைப் பிரயோகித்து ஆட்சியைக் கலைக்க நடக்கும் முயற்சியையும் ஆளுநர் சென்னாவையும் கண்டிக்கிறார்கள்;

> சுயநலன், சுயகௌரவம் அடிப்படையில் மோதிக்கொள்ளும் ஆட்சியாளர்கள், மக்கள் விரோத நடவடிக்கையில் மட்டும் ஒன்றுபட்டு நிற்பதைப் பார்க்கலாம்.

இது சட்ட அமைப்பில் உள்ள பிரச்சினை என்று கூறி மாநிலத்திற்கு கூடுதல் அதிகாரம் கோருகிறார்கள். இது நைந்து, கிழிந்து, ஒன்றுக்கும் உதவாத துணிக்கு ஒட்டுப்போடும் வேலைதான். மாநிலத்திற்கு கூடுதல் அதிகாரமும், தங்கள் கையில் ஆட்சியும் இருந்துவிட்டால் மக்களுக்கு 'சுபிட்சத்தை' கொண்டு வந்துவிடுவதாக நம்பச் சொல்கிறார்கள். மாநிலக் கட்சிகளாக இருப்பதாலும் அல்லது சி.பி.எம். போன்றவை மத்தியில் ஆட்சி செய்ய முடியாததாலுமே இந்த கோஷத்தை முன்வைக்கிறார்களே ஒழிய இவர்களது தேசிய - இந்திய ஒற்றுமை கொள்கையெல்லாம் காங்கிரசினுடையதுதான். 356 வது சட்டத்தை நீக்கக் கோரும் இவர்கள், மத்தியில் இவர்களது கூட்டணி ஆட்சி வி.பி.சிங் தலைமையில் இருந்தபோது அச்சட்டத்தை நீக்காததோடு முனவாயையும் பின்வாயையும் இழுத்து மூடிக் கொண்டிருந்தனர். இவர்கள் மறைமுகமாக இக்கேடுகெட்ட அரசியலமைப்பைப் பாதுகாக்கிறார்கள்.

சோ முதலான பாசிஸ்டுகள் நயவஞ்சகமாக முன்வைப்பது ஒருநபர் அல்லது ஒரு கும்பல் தலைமையிலான சர்வாதிகார ராணுவ ஆட்சியைத்தான். பலரும் இதற்குப் பலியாகி வக்காலத்து வாங்குவதைப் பார்க்கிறோம். மத்தியில் மேலும் ஆட்சி அதிகாரத்தைக் குவிக்கச் சொல்கிறார்கள்; சட்டத்தை மீறுபவர்கள் மட்டுமல்ல அதற்கு எதிராகப் பேசுபவர்கள் யாராக இருந்தாலும் ஈவிரக்கமற்று நடவடிக்கை எடுக்கக் கோருகிறார்கள். இவ்வகையினர். சர்வாதிகாரம் செலுத்துபவர் தேசப்பற்றுள்ளவராகவும் நல்லவராகவும் இருந்துவிட்டால் போதும் எல்லாம் சரியாகிவிடும் என்ற மாயையை உருவாக்குகிறார்கள். இவர்கள் நேரடியாக இந்த அரசியலமைப்பைப் பாதுகாத்து நியாயப் படுத்துகிறவர்கள்.

'உயர்ந்த - உன்னதமான' இந்த ஜனநாயகத்தின் நான்கு தூண்களுக்கு இடையிலான இந்த அதிகார நாய்ச்சண்டை, கேடுகெட்ட இச்சமூக அமைப்பின் தீராத தலைவலி. ஆங்கிலேய ஏகாதிபத்தியவாதிகள் கொடுத்த கொடை. சட்டம் இயற்ற ஒரு கும்பலும், நடைமுறைபடுத்த ஒரு கும்பலுமான இந்த இரட்டையாட்சி முறை. ஆங்கிலேயனின் அதிகார மாற்றத்திற்குப் பின் மேலும் அதிகாரச் சிதறலுக்கும் சிக்கலுக்கும் உள்ளாகிதான் இந்திய அரசியலமைப்புச் சட்டமாகியது. இச்சமூக அமைப்பும் ஆளும் வர்க்கங்களில் பல்வேறு பிரிவுகளும் இருக்கும்வரை இந்த அதிகார நாய்ச்சண்டை நீடிக்கும். பெருகிவரும் இம்மோதல்கள் ஆளும் வர்க்கப் பிரிவுகளுக்கிடையே முரண்பாடுகள் முற்றி வருவதையே குறிக்கின்றன.

பல்வேறு பிரிவு தரகுமுதலாளிகள், நிலப்பிரபுக்கள் நலனைப் பிரதிநிதித்துவப் படுத்துவதில் மோதிக்கொள்ளும் ஆட்சியாளர்கள், அதற்குட்பட்டு தங்களின் சுயநலன், சுயகௌரவம் அடிப்படையிலும் மோதிக்கொள்கிறார்கள். அதேசமயம் மக்கள் விரோத சட்டங்களை நிறைவேற்றுவதிலும் பல தடைகளை மீறி — எதிர்ப்புகளை மீறி நடைமுறைப் படுத்துவதில் இவர்கள் ஒன்றுபட்டு நிற்கிறார்கள் என்பதும் மறக்கக்கூடியதல்ல. நரசிம்மராவ் அரசு ஏற்றுக் கொண்ட மக்கள் விரோத — விவசாயிகள் விரோத சட்டமான "டங்கல்" திட்டத்தை ஜெயலலிதாவும் வாழ்த்தி வரவேற்பதைப் பார்க்கலாம்.

எனவே, இக்கேடுகெட்ட அரசியல், சட்ட, சமூக அமைப்போடு சீக்குபிடித்த இந்த ஆட்சியாளர்களையும் முற்றாக தூக்கியெறிவதிலும் மக்களுக்கான மாற்று, புதிய அரசு அமைப்பு முறைகளை உருவாக்குவதிலும்தான் இதற்கான தீர்வு உள்ளது என்பதை நாம் உணரலாம்.

O ராசு



படிப்பகம்

www.padippakam.com

## சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

● மஞ்ஜித் கௌர் பஞ்சாபைச் சேர்ந்த நடுத்தர வயது பெண்மணி. பப்பர் கல்ஸா என்ற இயக்கத்தில் சேர்ந்து செயல்படும் இவரது மகனான திதார் சிங்கைப் பிடிப்பதற்காக பஞ்சாப் போலீசு இவரது வீட்டையே அனுமதியின்றி புறக்காவல் நிலையமாக மாற்றிவிட்டது. போலீசார் இவரது படுக்கை அறையினையும் பறித்துக் கொண்டு தங்கள் மத்தியில்தான் படுத்துறங்க வேண்டும் என நிர்ப்பந்திக்கின்றனர். கல்யாணமான இவரது பெண்கள் வீட்டிற்கு வந்திருந்தபொழுது, அப்போலீசார் நாகரிகம் கருதிகூட இவர்களைத் தனித்திருக்க விடவில்லை. இந்த அடாவடித்தனத்தைக் கண்டித்து அக்கிராம பஞ்சாயத்தார் எஸ்.பி.யைச் சந்தித்துள்ளனர். அவரோ, ''திதார் சிங்கைப் பிடித்துத் தாருங்கள்; இடத்தைக் காலி செய்கிறோம்,'' எனப் பதில் கூறியுள்ளார்.

● சென்ற ஜனவரியில் 50-க்கும் அதிகமான யானைக் கூட்டமொன்று பீகாரின் காட்டுப் பகுதிகளில் இருந்து மேற்கு வங்காளத்தின் ஹூக்ளி நதியை ஒட்டிய கிராமப்புறங்களில் நுழைந்துள்ளது. பீகாரின் ஜாய்பூர் காட்டுப் பகுதி மிக வேகமாக அழிக்கப்பட்டு வருவதால் உணவு தேடி இந்த யானைக் கூட்டம் கிராமங்களுக்கு படையெடுத்துள்ளதாக சுற்றுப்புற சூழல்வாதிகள் கருத்து தெரிவித்துள்ளனர். கடந்த 1991-ல் ம.பி. அரசு இதே மாதிரியான யானைப் படையெடுப்பைத் தடுக்க மின்சார வேலி அமைத்த பொழுது, அதனால் பல யானைகளை இறந்து போயின. கடந்த இரண்டு ஆண்டுகளில் குளிர் காலத்தில் யானைகள் கிராமங்களை நோக்கி வருவது மூன்றாவது முறையாக நடந்துள்ளது.

● பிரதமர் ராவ் தனது சொந்த தொகுதியான நந்தியாலில் ஒருநாள் சுற்றுப்பயணம் செய்தபொழுது டங்கல் திட்டத்தில் கையெழுத்திட்டதை எதிர்த்து மக்கள் யுத்தக் குழுவின் விவசாய அமைப்பினர் அவர் பொதுக்கூட்டத்திற்கு செல்லும் வழியில் சாலை மறியல் செய்தனர். போலீசு தடியடி நடத்திய பின்னும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கலையாதிருக்கவே பிரதமர் வந்த வழியே திரும்பிச் சென்று விட்டார். இரண்டு மணி நேரம் கழித்து அவர் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்ட பொழுது கூட்டத்தினரிடையே அவ்வமைப்பினர் பிரசுரம் விநியோகித்துள்ளனர். கர்நூல் பகுதியில் வேலையிழந்த தொழிலாளர்களால் காங்கிரசின் கொடிகளும், வளைவுகளும் தீ வைக்கப்பட்டன. அத்மகூரில் ராவிற்கு எதிராக கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் ஒன்றும் நடந்தது. சொந்தத் தொகுதியிலேயே பிரதமரின் மதிப்பு இவ்வளவுதான்!

● கேரளா மாநிலத்தில் அளுவா என்ற கிராமத்திலுள்ள நீரிகோடே ஆலயத்தில் வழக்கமாகவே தலைமை பூசாரிகளாக இருந்து வருபவர்கள் நம்பூதிரிகள்தான். இம்முறை பிற்பட்ட ஈழவா சமூகத்தைச் சேர்ந்த ராஜேஷ் என்பவரைத் தலைமைப் பூசாரியாக நியமித்தது திருவாங்கூர் தேவஸ்தானம். இந்த இளைஞர் ஆலய வழிப்பாட்டு முறைகளில் சிறப்பான புலமையுள்ளவரின் மகனும்கூட. ஆனாலும் பார்ப்பன நம்பூதிரிகளால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. ராஜேஷின் நியமனத்தை எதிர்த்து வழக்குத் தொடர்ந்தனர். நீதிமன்றமும் நியமிக்கப்பட்ட இரண்டாவது நாளிலேயே அவரைத் தலைமை பூசாரி பதவியில் இருந்து தூக்கச் சொல்லி உத்தரவிட்டுவிட்டது.

● சோனியா காந்தி கோஷ்டிக்கு நெருக்கமானவரான பெட்ரோலியத் துறை மந்திரி சதீஷ் சர்மா பல கோடி ரூபாய் மோசடியில் சிக்கியிருப்பதற்கான ஆதாரங்கள் இப்பொழுது கிடைத்துள்ளன. 1988-91 ஆகிய நான்கு ஆண்டுகளில் மட்டும் அமெரிக்காவில் வாழும் இவர் தம்பியிடமிருந்து இவருக்கு வந்துள்ள 'பரிசு'த் தொகை 75 லட்சத்துக்கு மேல். ஆனால் அந்த வருடங்களில் இவரது தம்பியின் மொத்த வருமானமோ 35 லட்ச ரூபாய்தான். மேலும் இவரது தம்பி பிரசாத் என்ற மோசடிப் பேர்வழியுடன் சேர்ந்து கிட்டத்தட்ட 100 கோடி ரூபாய்க்கு மேல் பி.சி.சி.ஐ. என்ற வங்கியை ஏமாற்றியுள்ளதாக அமெரிக்காவில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார். பினாமி பெயரில் அமெரிக்காவில் பூமியிலிருந்து எண்ணெய் எடுக்கும் தொழிலுக்குத் தேவையான ரப்பர் பொருட்களைத் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றினை தம்பியுடன் சேர்ந்து அமைச்சர் நடத்தி வருவதும் அம்பலமாகியுள்ளது.

● மன்னர்கள் காலத்தில் நடந்ததைப் போன்ற அசுவமேத யாகம் ஒன்றை 60 லட்சம் ரூபாய் செலவில் 'காயத்ரி சமயப் பரப்புக்குழு' எனும் அமைப்பு நாக்பூரில் நடத்தியுள்ளது. சமூகத்தில் காணப்படும் தீமைகளை ஒழிக்க இந்த யாகம் நடத்தப்படுவதாகவும், திட்டமிடப்பட்டுள்ள 108 இடங்களில் நாக்பூர் எட்டாவது இடமென்றும் கூறியுள்ளது, அவ்வமைப்பு. ஆயினும் பல்வேறு சமூக சீர்திருத்த அமைப்புகள் 'இந்த யாகம் பார்ப்பன ஆதிக்க மீட்புக்காக நடத்தப்படுவதாலும், யாகத்தில் ஓதப்படும் மந்திரங்கள் பெண்ணினத்தை கேவலப்படுத்துவதாலும்' யாகத்தைத் தடை செய்யக் கோரி ஆர்ப்பாட்டங்களும் ஊர்வலங்களும் நடத்தியுள்ளனர். அரசு தடை செய்யாததுடன், யாகத்தில் கலந்து கொள்ளுபவர்களுக்கு வசதிகளைச் செய்து கொடுக்க 10 லட்ச ரூபாயை ஒதுக்கித் தனது விசுவாசத்தைக் காட்டிக்கொண்டது.

● வளைகுடா யுத்தத்தில் அமெரிக்கா உயிரியல் மற்றும் இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தியதால் அமெரிக்க வீரர்கள் பாதிக்கப்பட்டதாக ஏற்கனவே எழுதியிருந்தோம். அவ்வீரர்களின் மனைவிகளுக்கு அடிக்கடி குறைப்பிரசவம் ஏற்படுவதுடன், பிறக்கும் குழந்தைகளில் பெரும்பாலானவை இரத்தம் சம்பந்தமான வியாதிகள், மூச்சுக் கோளாறுகளோடு மழுங்கிப்போன விரல்கள், ஒட்டிய பாதங்களுடன் பிறக்கின்றன. கிளின்டன் நிர்வாகமும் இதனைப் பகிரங்கமாகவே ஒத்துக் கொண்டுவிட்டது. அதோடு யுத்தம் ஆரம்பிக்கும் முன்பே சதாம் ஹுசைனைத் தீர்த்துக் கட்டவும் அமெரிக்க இராணுவத் தலைமைத் திட்டம் தீட்டியதற்கான ஆதாரங்களும் இப்பொழுது கிடைத்திருக்கின்றன.

அசுவமேத யாகம்: பார்ப்பனீய மீட்பு



www.padippakam.com

# கன்சிராம்-முலாயம் வெற்றி

# கானல் நீர்

**உ.பி. தேர்தல் முடிவுகள் இட ஒதுக்கீடு-சமூக நீதிக் கொள்கையின் வெற்றியைக் குறிப்பதாக நாடு முழுவதும் உள்ள மண்டல் ஆதரவாளர்கள் வலிந்து கற்பிக்க முயலுகின்றனர்.**

கடந்த நவம்பர் மாத குட்டிப் பொதுத் தேர்தல்களைத் தொடர்ந்து தலைநகர் டெல்லியோடு நான்கு வட இந்திய மாநிலங்களில் அரசுகள் அமைக்கப்பட்டு விட்டன. அத்தேர்தல் முடிவுகள் குறித்து, ''வகுப்புவாத - இந்துத்துவ சக்திகளுக்குக் கிடைத்த பலத்த அடி, மதச்சார்பின்மைக்குக் கிடைத்த வெற்றி'' என்று பாரதீய ஜனதா - ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்கள் தவிர அனைத்து அரசியல் கட்சித் தலைவர்கள், அரசியல் நோக்கர்கள், பத்திரிகைகள் கருத்துத் தெரிவித்தன. ''மதச்சார்பின்மைக்கும் சமூக நீதிக்கும் கிடைத்த வெற்றி'' என்று மண்டல் ஆதரவு தேசிய முன்னணி மற்றும் அதன் ஆதரவு சக்திகள் வரவேற்றன.

ஆனால் இது தேர்தல்கள் முடிந்த சூட்டோடு, உடனடியாக வெளிவந்த மதிப்பீடுதான். இப்போது இதைவிட ஆழமான மறுமதிப்பீட்டில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர். ஆண்ட கட்சிகளுக்கு எதிராக அதிருப்தியுற்ற மக்கள் வழக்கமாகக் கொண்டுவரும் ஆட்சிமாற்றம்தான் என்று தட்டிக் கழிக்க முயன்ற பாரதீய ஜனதா - ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்கள் கூட, குறிப்பாக உத்திரப்பிரதேச தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு, அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து தனது கட்சி மற்றும் கொள்கை முடிவுகளில் மாற்றங்களைக் கொண்டுவரும்படி நிர்பந்திக்கப்பட்டிருப்பதைப் பலர் சுட்டிக் காட்டுகின்றனர்.

''உத்திரப் பிரதேசத்தில் கன்ஷிராம் தலைமையிலான பகுஜன் சமாஜ் கட்சி - முலாயம் சிங் யாதவ் தலைமையிலான சமாஜ்வாதிக் கட்சி கூட்டணி அரசு அமைத்திருப்பது அதன் எதிர்காலம் எப்படிப் போனாலும் ஒரு வரலாற்று சாதனை. இந்திய வரலாற்றில் இது ஒரு திருப்புமுனை'' என்று, ஒரு ஆய்வர்ளர் குறிப்பிடுகிறார்.

''கலாச்சாரப் புரட்சி விந்திய மலைகளுக்குத் தெற்கில் இருந்து வடக்கிற்கு நகர்கிறது. 1920 களில் நீதிக் கட்சியின் தலைமையில் பிற்படுத்தப்பட்ட மக்கள் அணிதிரண்டு தமது வலிமையை நிலைநாட்டினர். அதிகாரத்தைச் சுவைத்தனர். அதேபோன்று வடக்கில் அப்பிரிவு மக்கள் இப்போது அதிகாரத்தைப் பிடிக்கின்றனர்'' என்கிறார், மற்றொரு சமூக ஆய்வாளர்.

1950 களின் மத்தியில் அன்றைய சோசலிசக் கட்சியின் தலைவர் ராம் மனோகர் லோகியாவும் தாழ்த்தப்பட்ட மக்கள் கூட்டமைப்பு (பின்னாளைய குடியரசுக் கட்சி) தலைவர் அம்பேத்கரும் மேற்கொண்ட முயற்சி, அவர்கள் கண்ட கனவு இப்போது பலித்துவிட்டது; உ.பி.யின் மக்கள் தொகையில் 85 சதவீதத்தினர் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களும் இசுலாமியரும் அடங்குவர். இம்மக்கள் ஒரு கூட்டணி அமைத்தால் அதிகாரக் கோட்டையில் இருந்து மேல் சாதியினரை எளிதில் விரட்டிவிடலாம் என்று லோகியாவும் அம்பேத்கரும் கருதினர். ஆனால் அவர்களது முயற்சி அப்போது தோல்வி அடைந்துவிட்டது. முஸ்லீம்களையும் தாழ்த்தப்பட்ட மக்களையும் காங்கிரசு திரட்டிக் கொண்டது. பிற்பட்ட சாதியினர் சோசலிசக் கட்சியின் பின்னே திரண்டனர். ஆனால் லோகியாவின் சீடர் முலாயம் சிங் யாதவும், அம்பேத்கரின் அரசியல், சமூக வாரிசுரிமை பாராட்டும் கன்ஷிராமும் இம்மூன்று பிரிவு மக்களின் கூட்டணி அமைப்பதில் வெற்றிபெற்றுவிட்டனர். — இவ்வாறு பின்னோக்கிப் பார்த்து கருத்துக் கூறுகின்றனர், வரலாற்று வல்லுநர்கள்.

உ.பி. மக்கள் தொகையில் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களும் இசுலாமியரும் மட்டும் 85 சதவீதத்தினர். என்றாலும் அம்மாநில சட்டப் பேரவையிலும், அமைச்சரவையிலும் இதுவரை மேல்சாதியினராகிய பார்ப்பனர், தாக்கூர், பனியா, ஜாட்டுக்களே மிக மிகப் பெரும்பான்மையினராக இருந்தனர். தனித் தொகுதிகளில் மட்டுமே தாழ்த்தப்பட்ட தலித்துகள் எம்.எல்.ஏ.க்கள் ஆனதோடு, அற்ப எண்ணிக்கையில் முக்கியமற்ற அமைச்சர்களாக இருந்தனர். ஆனால் முலாயம் சிங் யாதவ் தலைமையில் இப்போது அமைந்துள்ள 27 பேர் கொண்ட அமைச்சரவையில் மூன்று பேர்கள் மட்டுமே மேல்சாதியினர்.

மண்டல் அறிக்கையைக் கீழிருந்து தூண்டி எதிர்த்து வந்த பாரதீய ஜனதாவும், அதை அமுலாக்குவதில் முட்டுக்கட்டை போட்டுவந்த காங்கிரசும் கூட உ.பி. தேர்தலுக்குப் பிறகு, தம்மைத் தீவிர மண்டல் ஆதரவுக் கட்சிகளாகக் காட்டிக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன. அக்கட்சிகளின் குறிப்பாக பாரதீய ஜனதாவின் தலைமைப் பொறுப்புகளுக்கான பல பதவிகளுக்கு பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட சாதியினரை நியமிப்பது என்று முடிவு செய்துள்ளன. — இவை உ.பி. அரசியலில் ஏற்பட்டுள்ள மாற்றத்துக்கு சான்றாகக் காட்டப்படுகிறது.

உ.பி. தேர்தல் முடிவுகள் இட ஒதுக்கீடு - சமூக நீதிக் கொள்கையின் வெற்றியைக் குறிப்பதாக நாடு முழுவதுமுள்ள மண்டல் ஆதரவாளர்கள் வலிந்து கற்பிக்க முயலுகின்றனர். ஆனால் மண்டல் அறிக்கையின் அதிதீவிர ஆதரவாளரான வி.பி.சிங்கின் ஜனதா தளம் மண்ணைக் கவ்வியதால் அவர்களது வாதம் எடுபடாமல் போய்விட்டது.

பிற்பட்ட சாதிகளிலேயே பெரும்பான்மையினரான யாதவ் சாதியினர் மட்டுமே வெற்றிபெற்ற கூட்டணியின் பின்னே திரண்டனர். தமது சாதிப் பிரதிநிதியாகிய முலாயம் சிங் யாதவின் சமாஜ்வாதி கட்சியை ஆதரித்ததோடு, இதுவரை ஓட்டுப் போட முடியாமல் தடுக்கப்பட்டு வந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்து பகுஜன் சமாஜ் கட்சி வெற்றிபெறவும் யாதவ் சாதியினர் காரணமாக இருந்தனர்; பிற்பட்ட சாதிகளில் மேல்தட்டு வர்க்கத்தினரான மூன்றில் ஒரு பகுதியினர் பாரதீய ஜனதாவை ஆதரித்துள்ளனர். முலாயம்சிங் யாதவ் நிறுத்திய 240 வேட்பாளர்களில் 83 பேர் மேல்சாதிக்காரர்கள்; அமைச்சரவையிலும் அதே அளவு இடமளித்துள்ளர். இறுதியாகப் பார்க்கும்போது யாதவ் சாதியினரும் தாழ்த்தப்பட்ட தலித்துக்களும் முஸ்லீம்களும்தான் இக்கூட்டணிக்கு முழு ஆதரவு அளித்துள்ளனர்.

பாபரி மசூதியைத் தகர்த்த பாரதீய ஜனதாவுக்கு எதிராக காங்கிரசு, ஜனதா தளத்தைவிட முலாயம்சிங் யாதவையே தமது நம்பிக்கைக் குரியவராக முஸ்லீம்கள் கருதி வாக்களித்துள்ளனர்; அதைவிட முக்கியமானது தலித்துக்கள் கன்ஷிராம் பின்னால் அணிதிரண்டிருப்பதுதான் என்று அரசியல் நோக்கர்கள், பத்திரிகைகள் கருதுகின்றன. ஆகவே இப்போது தலித்துக்களின் எழுச்சி பற்றி நிறையவே பேசப்படுகிறது.

உ.பி. அரசில் பங்கேற்கும் அளவு மட்டுமன்றி ம.பி., அரியானா, பஞ்சாபில் தனது வலிமையை நிரூபிக்கும் அளவு கன்ஷிராமின் பகுஜன் சமாஜ் கட்சி வளர்ந்துள்ளது. அது கிழக்கே பீகார், மேற்கு வங்கத்துக்கும், தெற்கே



படிப்பகம்

www.padippakam.com

மராட்டியத்துக்கும் விரிவுபடுத்தும் முயற்சியில் இறங்கியுள்ளது. இதை வைத்து, ''தலித்துக்களை ஓட்டு வங்கிகளாக வைத்து இனி யாரும் அவர்கள் முதுகிலேறி சவாரி செய்ய முடியாது. தலித்துக்கள் தமது சக்தியை உணர்ந்து விட்டார்கள்; அதிகாரத்தில் தமது பங்கை நிலைநாட்டுவது என்று உறுதி செய்து விட்டார்கள்'' என்பது இப்போதைய பரவலான மதிப்பீடு.

நாடு முழுவதும் பத்துக்கும் மேற்பட்ட குடியரசு கட்சி பிரிவுகள் உள்ளன. இவை தவிர அம்பேத்கர், தலித்துக்கள் பெயரில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறு, சிறு குழுக்கள் உள்ளன. இவற்றின் பிழைப்புவாதத் தலைவர்களிடையே கன்ஷிராமின் பகுஜன் சமாஜ் கட்சியின் வளர்ச்சி பீதியைக் கிளப்பியிருக்கிறது. ஆனால் அக்கட்சிப் பிரிவுகள் குழுக்களின் அணிகளும், கட்சிசாரா தலித் தலைவர்களும் கன்ஷிராம் கட்சியின் வெற்றி நம்பிக்கையூட்டுவதாகக் கருதுகின்றனர். தலித்துக்களுக்கு மட்டுமேயான ஒரு கட்சி முதன்முறையாக அரசு நிர்வாகத்தில் பெரும்பங்கு வகிக்கிறது. தனது கட்சி அமைச்சரவையில் சேர்ந்திருப்பது நாடு முழுவதிலும் உள்ள எல்லா அரசுகளிலும் ஒடுக்கப்பட்ட சாதிகள் ஆதிக்கத்துக்கு வருவதன் தொடக்கம்; அதாவது ஒரு சமூகப் புரட்சி, சமூக மாற்றத்துக்கான ஆரம்ப வெற்றி என்று கன்ஷிராம் வருணிக்கிறார். டெல்லி நாற்காலியே தனது குறிக்கோள் அடுத்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் அதைப் பிடிப்போம் என்று உறுதி கூறுகிறார்.

ஆனால் முலாயம்சிங் யாதவ், கன்ஷிராம் இருவரிடமும் ஆரம்பகால, தேர்தல் சமயப் பிரச்சாரத்தில் இருந்த அனல்பறக்கும் வேகம் இப்போது இல்லை. அதிகாரத்துக்கு வந்துவிட்ட பொறுப்போடும், அதைத் தக்கவைத்துக் கொள்ளும் கவனத்தோடும் இப்போது பேசுகின்றனர். தனது அரசாங்கம் மேல்சாதிக்காரர்கள் உட்பட எல்லா ஏழைகளுக்குமானது தான் என்கிறார், முலாயம்சிங் யாதவ். பல மேல்சாதி வேட்பாளர்களை நிறுத்தியதும், மேல்சாதியைச் சேர்ந்த மூவரை அமைச்சராக்கியதையும் முலாயம் சுட்டிக் காட்டுகிறார்.

தனது கட்சி மேல்சாதிகளுக்கு எதிரானது அல்ல; ''பகுஜன் சமாஜ்'' என்பது எல்லா சாதிகளிலும் உள்ள ஏழை மக்களையே குறிக்கிறது என்கிறார், கன்ஷிராம். ''வேட்புமனு தரும்போது 60 சதவீத இட ஒதுக்கீடு செய்யலாம் என்றார் முலாயம்சிங், நான்தான் அதைப் பற்றிக் கவலைப்படாதீர்கள்; தகுதி அடிப்படையில் தீர்மானியுங்கள் என்றேன்'' என்கிறார் கன்ஷிராம். சமாஜ்வாதி கட்சி, பகுஜன் சமாஜ் கட்சியின் வெற்றி மேல்சாதியினரிடையே அச்ச உணர்வையும், அதிருப்தியையும் ஏற்படுத்திவிட்டது; எனவே மேல்சாதியினர் தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட சாதியினரைத் தாக்குவர் என்கிற வதந்தி, பீதி காரணமாக மேற்கண்டவாறு மிதவாதப் பேச்சுகளில் இறங்கியுள்ளனர் என்றும் அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.

தேர்தலின் போதும் அதற்கு முன்னரும் மேல்சாதிக்கு எதிரான தாக்குதல் முனை இக்கூட்டணியிடம் இன்னும் அதிக கூர்மையாகவே இருந்தது. ''பார்ப்பன, பனியா, தாக்கூர் சாதியினரை விரட்டியடியுங்கள்'' என்பதும் ''ராமனை ஆற்றில் வீசுங்கள்; பீம்ராவ் அம்பேத்கரை உங்கள் கரங்களில் ஏந்துங்கள்'' என்பதும் பகுஜன் சமாஜ் கட்சியின் பிரபலமான முழக்கங்கள். ''அயோத்தியில் கோவில் கட்ட வேண்டாம், கழிப்பறைகள் கட்டுவோம்'' என்று துணிவோடு சொன்னார் கன்ஷிராம். ''பாரதீய ஜனதா அரசியல் சட்டத்தை மீறிவிட்டது; அதன் மூலம் அரசியல் சட்டத்தை உருவாக்கிய அம்பேத்கரை அவமானப் படுத்திவிட்டது'' என்றும், ''ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்கள் மனுநீதிக் கொள்கையை உயிர்ப்பிக்க முயலுகிறது; மனுநீதி என்றால் தலித்துக்களையும், பெண்களையும் அடிமைகளாக்குவது'' என்றும் தேர்தல் பிரச்சாரம் செய்ததாக இக்கூட்டணி கூறுகிறது.

எதிர்க்காமல் சம உரிமை பெறுவது சாத்தியமில்லை; ஆதலால் தேர்தல் வெற்றிக்குப் பிறகு ஏதோ ஒரு வகையிலான சமரசம், கொள்கைச் சரிவைத்தான் இது காட்டுகிறது.

முலாயம்சிங் யாதவ் மற்றும் கன்ஷிராமுக்கு எதிராக ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்களும் பத்திரிகைகளும் தனிப்பட்ட சில குற்றச்சாட்டுகளைப் பரப்புகின்றன. ''முல்லா'' முலாயம் சிங் முஸ்லீம்களிடம் பணம் வாங்குகிறார்; கன்ஷிராம் வெளிநாட்டு கிறித்துவ அமைப்புகளிடம் பணம் வாங்குகிறார்; இல்லையானால் ஒரு குறுகிய காலத்தில் பெரிய கட்சிகளுக்குச் சமமாக இவர்களால் எப்படித் தேர்தல் செலவு செய்ய முடிகிறது? இவர்கள் இருவருமே காங்கிரசின் ஏஜெண்டுகள் என்பது போன்றவை அக்குற்றச்சாட்டுகள். மத்தியில் காங்கிரசு அரசு நீடிப்பதற்கு நெருக்கடிகள் ஏற்படும்போது இருவரது கட்சிகளுமே உதவுகின்றன; முலாயம் சிங் யாதவ் முன்னாள் காங்கிரசு முதல்வர் என்.டி.திவாரி, சந்திரசேகர், சுப்பிரமணிய சுவாமி, சந்திராசாமி போன்ற நடத்தைகெட்ட நபர்களுடனும் காங்கிரசின் அரசியல் தரகரும், பம்பாய் தொழில் அதிபர் ஜெயந்த் மல்கோத்ராவுடன் கன்ஷிராமும் நெருங்கிய தொடர்பு வைத்துள்ளனர். இதை அவர்களே ஒப்புக் கொள்கின்றனர். எவ்வளவோ தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட பிரமுகர்கள் இருக்கும் போது ஜெயந்த் மல்கோத்ராவுக்கு எம்.பி பதவி கொடுத்துள்ளார் கன்ஷிராம். ஆனால் இவ்விரு கூட்டணித் தலைவர்கள் மீதான பிற குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரபூர்வமாக எவராலும் முன் வைக்கப்படவில்லை.



முலாயம்சிங் யாதவ், கன்சிராம் கூட்டணி; இந்து வெறி அமைப்புகளுக்கு மாற்றாக முடியாது.

ஆனால் இப்போது, ''நாங்கள் மேல்சாதிகளுக்கு எதிரான முழக்கம் எதுவும் வைக்கவில்லை; நாங்கள் கேட்பது எல்லாம் சம உரிமைதான். எல்லா அரங்கிலும் விகிதாச்சாரப் பிரதிநிதித்துவம் வேண்டும் என்பதுதான் எங்கள் பிரதான முழக்கம்'' என்கிறது கன்ஷிராம் கட்சி. ஆதிக்கம் செலுத்தும் மேல்சாதியினரை

www.padippakam.com

ஆகவே, அவர்களது தனிப்பட்ட நேர்மையை ஒருபுறம் ஒதுக்கிவைத்து விட்டு, அவர்களே பிரகடனப்படுத்தியுள்ள அரசியல் பொருளாதாரச் சமூகக் கொள்கைகள், அவற்றை அடைய அவர்கள் தேர்ந்தெடுத்துள்ள வழிமுறைகள் சரிதானா என்பதை இப்போது ஆராய்வோம்.

முலாயம்சிங் யாதவைப் பொருத்தவரை அவர் முன்பு ஜனதா தள உ.பி. முதல்வராக இருந்தபோது 1990 இல் இந்துமத வெறி பாசிஸ்டுகள் பாபரி மசூதியை இடிக்க முயன்றனர். அதற்கு எதிராக மக்கள் ஆதரவைத் திரட்டுவதிலும், அரசு எந்திரத்தைக் கொண்டு அம்முயற்சியைத் தடுத்து நிறுத்துவதிலும் முக்கியப் பங்காற்றினார். இதனால் முல்லாக்களும் இமாம்களும் ஜனதா தளத்துக்கு வாக்களிக்கும்படி போட்ட மதக் கட்டளைகளையும் மீறி முஸ்லீம் மக்களின் ஆதரவைப் பெற்றுள்ளார். இது தவிர தேசிய முன்னணி - இடதுசாரி கூட்டணியினரின் சில சீர்திருத்தக் கொள்கைகளும் தமிழ்நாட்டுத் திராவிடக் கட்சிகளைப் போன்ற சில கவர்ச்சிவாதத் திட்டங்களும் அறிவித்திருக்கிறார். ஒவ்வொரு ஏழைக்கும் ஒரு பசு அல்லது எருமை மாடும் புறம்போக்கு நிலமும் அது பலன்தரும்வரை கூலியும் தருவதாக வாக்களித்துள்ளார். வியாபாரிகளிடம் இருந்து நிதியும் ஆதரவும் பெறுவதற்காக, ஆட்சிக்கு வந்ததும் விற்பனை வரியை அடியோடு ரத்து செய்வதாகச் சொன்னார். முலாயம்சிங் அதிக அளவில் கிரிமினல் மஃபியா கும்பலை நம்பிக் கட்சி நடத்துவதால், பதவியேற்றதும் குண்டர்கள் சட்டத்தை ரத்து செய்வதாக உறுதி கூறினார். முன்பு பாரதீய ஜனதா கொண்டு வந்த தேர்வுகளில் காப்பியடிப்பதைக் கிரிமினல் குற்றமாக்கித் தண்டிக்கும் சட்டத்தை மாணவர்கள் வாக்குகளைத் திரட்டுவதற்காக நீக்குவதாக வாக்குறுதி அளித்தார்.

முலாயம்சிங் யாதவ் தனது கட்சிக்கு சமாஜ் வாதி (சோசலிஸ்ட்) கட்சி என்று பெயரிட்டுள்ளார். சில கவர்ச்சிவாத கொள்கைகள், திட்டங்கள் தவிர வேறெதுவும் அக்கட்சியிடம் கிடையாது. சோசலிசத்துக்கும் இக்கட்சிக்கும் பெயரைத் தவிர வேறு தொடர்பு கிடையாது. கற்பனாவாத சோசலிசம்கூட கிடையாது. மேற்கின் ஏகாதிபத்திய, முதலாளித்துவ நாடுகளில் உள்ள ஆளும் வர்க்க ஆளுங்கட்சிகள் பலவற்றின் பெயரும்கூட தொழிலாளர் கட்சி, சோசலிசக் கட்சி என்றுள்ளன. அவைபோன்று முழுவதும் ஆளும் வர்க்கக் கட்சியாக இல்லாவிட்டாலும் ஆளும் வர்க்கங்களால் பயன்படுத்தப்படும் காரியவாத, பிழைப்புவாத, கவர்ச்சி-பொறுக்கி அரசியல் கட்சிதான் சமாஜ்வாதிக் கட்சி. சாதி வெறியர்கள், கட்சிமாறிகள், பிழைப்புவாதிகள் முதல் கிரிமினல் மஃபியாக்கள் வரை இக்கட்சிப் பிரமுகர்களாக, தலைவர்களாக உள்ளனர். சரண்சிங், பன்சிலால், தேவிலால், பங்காரப்பா போன்றவர்களின் பிராந்தியக் கட்சிகள் போன்றதுதான் சமாஜ்வாதிக் கட்சி. இது எவ்வளவு காலம் நீடிக்கும் என்பதே கேள்விக்குரியது. தேர்தல் முடிந்ததில் இருந்தே இக்கட்சியைப் பிளந்து, எம்.எல்.ஏ.க்களை விலைக்கு வாங்கி, தானே ஆட்சி அமைப்பதற்கு பாரதீய ஜனதா கட்சி முயன்றது என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.

கன்ஷிராமின் பகுஜன் சமாஜ் கட்சி, முலாயம்சிங்சின் சமாஜ்வாதிக் கட்சியில் இருந்து பல அம்சங்களில் மாறுபட்டது. பெரும்பாலும் படித்த அரசு ஊழியர்களான தாழ்த்தப்பட்டவர்கள் பகுஜன் சமாஜ் கட்சியின் பிரமுகர்கள், தலைவர்களாக உள்ளனர். அதிகாரம் இவர்களை ஆளும் வர்க்க நபர்களாகவும் வளர்த்துவிடும் என்றாலும் இப்போதைக்கு நடுத்தர வர்க்கத்தினர், சிறு முதலாளிகள், பணக்கார விவசாயிகளாக உள்ளனர்.

எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா, ராமதாசு கட்சியைப் போன்று பகுஜன் சமாஜ் கட்சி ஒரு தனி நபர் கட்சி. அதாவது திட்டமிட்டு தனிநபர் துதி, வழிபாடு அவராலேயே ஊக்குவிக்கப்படுகிறது. ஈடு இணையற்ற அரசியல் சிந்தனையாளர், மாபெரும் தலைவர், சமூக - பண்பாட்டுப் புரட்சியின் - பொருளாதார விடுதலையின் மாபெரும் தந்தை என்னறெல்லாம் அவர் தனக்குத்தானே பட்டஞ்சூட்டிக் கொள்கிறார். கட்சியில் அவர் வைத்ததுதான் சட்டம்; முறைப்படியான தேர்தல்கள், அமைப்புகள், இரண்டாவது வரிசைத் தலைமை ஆகிய எதையும் அவர் அனுமதிப்பதில்லை. "ஒருவர் சிந்தித்து, பலர் இயங்குவதாக இருக்க வேண்டும்.

முலாயம்சிங் யாதவ் தனது கட்சிக்கு சமாஜ்வாதி (சோசலிஸ்ட்) கட்சி என்று பெயரிட்டுள்ளார். சில கவர்ச்சிவாத கொள்கைகள், திட்டங்கள் தவிர வேறெதுவும் அக்கட்சியிடம் கிடையாது.

## மாவோ நூற்றாண்டு விழா: மாற்று கலாச்சார விழா

தோழரும் ஆசானுமாகிய செஞ்சீன சிற்பி மாசேதுங் அவர்களது பிறந்த நாள் நூற்றாண்டு விழாவை 26-12-93 அன்று உசிலம்பட்டி வட்டம், பி.மேட்டுப்பட்டியில் விவசாயிகள் விடுதலை முன்னணியினர் மாற்று கலாச்சார விழாவாகக் கொண்டாடினர். சிறுவர், இளைஞர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளோடு பொதுக்கூட்டமும் நடத்தி "மாவோ"வின் பங்களிப்புகளை விளக்கியும் சிந்தனைகளை நினைவூட்டியும் பிரச்சாரம் செய்தனர். பொதுமக்களில் இருந்தே நீதிபதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஓட்டப்பந்தயம், சாக்கு ஓட்டம், இசை நாற்காலி, நடனம், பாட்டுப் போட்டி என பலவகைப் போட்டிகள் நடத்தி, பரிசுகளும் வழங்கப்பட்டன. நூற்றுக்கும் மேற்பட்டோர் உற்சாகத்துடன் இந்த விழாவில் - போட்டிகளில் கலந்து கொண்டனர். தோழர் திசைகருணன் தலைமைதாங்க, தோழர் மனோகரன் பரிசு வழங்க, தோழர் சிவகாமு சிறப்புரையாற்ற பகுதிமக்கள் மாவோ சிந்தனைகளை ஏந்திச் சென்றார்கள்.

இராமேசுவரத்தில் பு.மா.இ.மு. சார்பாக மாவோ சிந்தனை முழக்கங்களை எழுதி சுவரொட்டிகளாக நகரெங்கும் ஒட்டப்பட்டது. 26-12-93 அன்று மாவோவின் பணியையும் சித்தாந்த பங்களிப்பையும் விளக்கி அறைக்கூட்டமும் தோழர்களால் நடத்தப்பட்டது.

## டங்கலுக்கு எதிராகப் பிரச்சார இயக்கம்

திருப்புவனத்தில் 7-1-94 அன்று பு.மா.இ.மு. தோழர் கணேசன் தலைமையில் பொதுக்கூட்டம் நடந்தது. பு.மா.இ.மு. தோழர்கள் ராமு, ரவி ஆகியோர் உரைநிகழ்த்த திருச்சி ம.க.இ.க. தோழர் தமிழ்மணி சிறப்புரையாற்றினார். புதிய பொருளாதாரக் கொள்கையால், விவசாய தொழிலுரிமை பறிக்கும் "டங்கல்" திட்டத்தால் நாடு மறுகாலனியாகி வருவது பற்றி விளக்கினார். மேலும் வளர்ந்துவரும் இந்துமதவெறி பாசிசம் பற்றியும், திருவையாறில் நடக்க இருக்கும் "தமிழ்மக்கள் இசைவிழா" பற்றியும் எடுத்துரைத்தனர். பின்னர் திருச்சி ம.க.இ.க. கலைக்குழுவின் புரட்சிகர கலைநிகழ்ச்சி நடத்தப்பட்டது. 200 பேருக்கும் மேற்பட்ட மக்கள் கூடி நின்று கேட்டும், பெருவாரியாக நிதியளித்தும் ஆதரித்தனர்.

இராமேசுவரத்தில் புதிய பொருளாதாரக் கொள்கைத் தொடர்பாக சுவரொட்டி ஒட்டியபோது சிறப்பு பிரிவு போலீசு மூர்த்தி (ஆள்காட்டி) பின்தொடர்ந்து வந்து தோழர்களை மிரட்டியுள்ளான். சுவரொட்டிகளைப் பிடுங்கிச் செல்ல முயன்று முடியாமல் போகவே "ரிப்போர்ட்" எழுத வேண்டும் எனக்கேட்டு ஒரு சுவரொட்டியை மட்டும் வாங்கிச் சென்றான். போலீசின் தொல்லைகளை மீறி இராமேசுவரத்தில் மீண்டும் பு.மா.இ.மு. முன்னேறி வருகிறது.



படிப்பகம்

www.padippakam.com

அசாதாரணமான தலைவரே மக்களை ஈர்க்க முடியும். மக்களைக் கவரக்கூடிய பல தலைவர்கள் இருப்பது சரியல்ல'' என்பது அவரது அரசியல் சிந்தனை. இதனால் அதிருப்தியும், சிறு சிறு பிளவுகளும், கட்சிக்குள் ஏற்கனவே தலைதூக்கி விட்டன.

அம்பேத்காரின் அரசியல், சமூக வாரிசு என்று அக்கட்சியினரால் போற்றப்படும் கன்ஷிராமின் பிரகடனங்கள் என்னவோ அம்பேத்கருடையதைவிட 'புரட்சி'கரமானதாக இருக்கின்றன. ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக மாற்றமும், பொருளாதார விடுதலையும் தனது கட்சியின் இரட்டை இலட்சியம் என்கிறார் கன்ஷிராம். அரசியல் மாற்றம் கட்சியின் இலட்சியத்தை அடைவதற்குப் பயன்படும் என்றாலும் தேர்தல் அரசியலில் தனக்கு நம்பிக்கை இல்லை என்கிறார். காங்கிரசு, பாரதீய ஜனதா, தேசிய முன்னணி - இடதுசாரி கூட்டணி ஆகிய அனைத்தும் பகுஜன் சமாஜ் கட்சியின் இலட்சியத்துக்கு எதிரானவை. இப்போதைய நிலையைப் பாதுகாக்கும் கட்சிகள் என்கிறார்.

சமூக நீதி, இட ஒதுக்கீடு, நிலச் சீர்திருத்தம் ஆகியவற்றைத் தான் எதிர்ப்பதாகக் கூறுகிறார். இவை ஊனமுற்றவர்களுக்கு ஊன்றுகோல்கள் தரும் யோசனைகள்தாம்; சமூக நீதியை ஆதரிக்கும் கட்சிகள் ஊனமுற்றவர்கள் நிரந்தரமாகவே ஊன்றுகோல்கள் வைத்துக் கொள்ளச் செய்கின்றன; அவர்கள் எழுந்து நிற்கவேண்டும், நடக்க வேண்டும், ஓட வேண்டும், வேகமாக ஓட வேண்டும் என்றுதான் விரும்புவதாகக் கூறுகிறார். இதனால்தான் அவர்கள் வேகம் பெற்று, மேட்டுக்குடியினருக்கு எதிராகப் போட்டியிட்டு வெல்ல முடியும் என்கிறார்.

நிலமற்ற, வறிய விவசாயிகள் மற்றும், கூலித் தொழிலாளர்கள் ஆகிய பிரிவினரை இல்லாமல் செய்ய வேண்டும்; சொத்துடைய விவசாயிகளடங்கிய ஒரு புதிய வர்க்கத்தை உருவாக்க வேண்டும் என்பதுதான் தனது நிலச்சீர்திருத்த எண்ணம் என்கிறார். அதற்காக அவர் வைக்கும் முழக்கம் அரசு நிலம் எல்லாம் மக்கள் நிலம், கைப்பற்றுங்கள் என்பதாக உள்ளது. மேற்கு வங்கம், கேரளத்தில் கொண்டுவந்த நிலச்சீர்திருத்தம், நிலமற்ற கூலி விவசாயிகளின் எண்ணிக்கையைக் குறைத்து, சிறு-குறு விவசாயிகளை அதிகமாக்கியது; அவர்கள் இரண்டுங்கெட்டான் வாழ்க்கை வாழுகிறார்கள்; ஆகவே சீர்திருத்தங்கள் எல்லாம் கண்துடைப்புதான்; ஒடுக்கப்பட்ட மக்களை அடிமை நிலையிலேயே வைத்திருப்பவைதாம் என்கிறார் கன்ஷிராம்.

எல்லாம் சரிதான்! கேட்பதற்கு 'புரட்சி'கரமாகத்தான் இருக்கிறது! ஆனால் கன்ஷிராம் பிரகடனம் செய்துள்ள சமூக - பண்பாட்டுப் புரட்சியையும் பொருளாதார விடுதலையையும் எப்படிச் சாதிப்பது? சில்லறைச் சீர்திருத்தங்களுக்காகப் பிச்சை எடுக்கக் கூடாது; பகுஜன் சமாஜ் (வெகுமக்கள் அணி) திரண்டு பலம் பெற்றால் மேல் சாதியினர் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக ஏதாவது செய்வார்கள் என்பதுதான் கன்ஷிராமின் வழிமுறை. தேர்தல் அரசியலில் தனக்கு நம்பிக்கை இல்லை என்று கூறிக் கொண்டே அதில் ஆழமாக மூழ்குவதற்கான திட்டம் மட்டும்தான் கன்ஷிராமிடம் உள்ளது. டெல்லி நாற்காலியைப் பிடிப்பதே தனது நீண்ட காலக் குறிக்கோள் என்கிறார்; இப்படி நாடாளுமன்ற முறையில் அதிகாரத்தைப் பிடிப்பதன் மூலம் சமூகப் பண்பாட்டுப் புரட்சியும் பொருளாதார விடுதலையும் சாதிக்க முடியுமா? ஒடுக்கப்பட்ட மக்கள் மேலிருந்து ஆட்சியைப் பிடிக்கும் முயற்சியை ஆளும் வர்க்கங்களும் - சாதிகளும், அரசு எந்திரமும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்குமா?



எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா, ராமதாசு கட்சியைப் போன்று பகுஜன் சமாஜ் கட்சி ஒரு தனிநபர் கட்சி. திட்டமிட்டு தனிநபர் துதி, வழிபாடு கன்சிராமாலேயே ஊக்குவிக்கப்படுகிறது.

சமூக-பண்பாட்டுப் புரட்சியும் பொருளாதார விடுதலையும் தனது இரட்டை இலட்சியம் என்று சொல்வதை நம்பமுடியாமல் இருப்பதற்கு இரண்டு அடிப்படைக் காரணங்கள் உள்ளன. (1) இந்த இலட்சியத்தை அடையும் முயற்சியில் முன்னேறும்போது அந்த இயக்கம் தவிர்க்கவியலாது மேல்சாதி - ஆளும் வர்க்க - அரசு எந்திரம் எதிர்ப்புரட்சித் தாக்குதல் தொடுக்கும்; அதை எதிர்கொள்வதற்கான, புரட்சியில் ஈடுபடும் மக்களைக் காப்பதற்கான தயாரிப்பும், அமைப்பு பலமும் ஆயுதமும் இந்தக் கட்சியிடம் இருக்கிறதா? இல்லை. (2) புரட்சிக்கும் விடுதலைக்கும் போராடும் மக்களைத்தாம் அன்றாடம் சந்திக்கும் அடக்குமுறை, சுரண்டல் ஆகிய களப் பிரச்சினைகளின் ஊடாகத்தான் வளர்த்தெடுக்கவும் அமைப்பாக்கவும் முடியும். அப்படிப்பட்ட களப்பிரச்சினைகளை வேண்டுமென்றே தவிர்த்து கட்சி அலுவலக, பிரச்சார முறையிலான தொடர்புகளை மட்டுமே மக்களுடன் கொண்டிருக்கிறார். உடனடி எதிரிகளான மேல்சாதி நிலப்பிரபுக்கள், போலீசு - அதிகாரவர்க்கத்தை போராட்டகளத்தில் சந்திப்பதற்கு அவர் அஞ்சுவதையே இது காட்டுகிறது. இப்படிப்பட்ட கட்சி எதிர்ப்புரட்சித் தாக்குதலை சந்திப்பதற்கு எப்படித் துணிவு கொள்ளும்.

ஏற்கனவே புரட்சிச் சவடால் அடித்துக் கொண்டிருக்கும் போலிக் கம்யூனிஸ்டுகள் தலைமையிலான இடதுசாரி கூட்டணி கேரளா, மேற்கு வங்கம், திரிபுராவில் ஆட்சியைக் கைப்பற்றிய பிறகு நாட்டிலுள்ள தற்போதைய அரசியல், பொருளாதார, சமூக அமைப்பைக் கட்டிக்காக்கும் துரோகக் கடமையைப் பொறுப்போடு கவனிப்பதைப் பார்க்கிறோம். ஆளும் வர்க்கங்கள் - சாதிகளுக்கு அதுபோன்றதொரு சேவையைத்தான் கன்ஷிராம் கட்சி செய்ய முடியும் என்பதை அவரது சிந்தனை காட்டுகிறது. தலித்துக்களின் விடுதலை என்ற பெயரால் அவர்களோடு நாட்டு மக்கள் அனைவரையும் அடிமைபாக்கி வைத்திருக்கும் அரசியல் சட்டத்தை அம்பேத்கர் உருவாக்கினார். அந்த அடிப்படையிலான அரசியல் அமைப்பைக் காப்பதற்குத்தான் கன்ஷிராம் கட்சி பாடுபடுகிறது. ஆனால் இச் செயலைப் புரட்சிச் சாயம் பூசி, விடுதலை முழக்கமிட்டு மூடிமறைக்கிறது.

O குமார்



படிப்பகம்

www.padippakam.com




● "ஹசரத்பால் முற்றுகை: சரணடைந்தது யார்?" என்ற (பு.ஜ. டிச. 15) தலையங்கத்தில் உள்ள ஒவ்வொரு வாசகமும் என்னைக் காயப்படுத்தியது. தீவிரவாதிகளைப் போராளிகள் என்றும் அவர்களின் மதவெறியை சுயநிர்ணய உரிமைப் போர் என்றும் கூறி பாகிஸ்தானுக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கும் நடைபாவாடை விரிக்கிறீர்கள். இதுபோன்ற எழுத்து வியாபாரத்தை நிறுத்தி என்போன்ற இளைஞர்களுக்கு தேசப்பற்றைப் போதியுங்கள். இறுதியாக மகாகவியின் கவிதை. அது உங்களைத் 'தெளிவுற'ச் செய்யும் என்று நம்புகிறேன்.
"பாரதபூமி பழம்பெரும் பூமி - நீர்
அதன் புதல்வர் இந்நினைவகற்றாதீர்." ஜெய்ஹிந்த்.

— இரா.பழநியப்பன், சைதை, சென்னை-15

○ தீவிரவாதிகள், பயங்கரவாதிகள், பிரிவினைவாதிகள், சமூகவிரோதிகள் என்று பலவாறகச் சொல்லி அவதூறு செய்யும் அதே அரசின் வானொலியும் வானொளியும் அவர்களுடன் சமரசம், சமாதானம், பேச்சுவார்த்தை நாடும் பொழுது (ஈழம், பஞ்சாப், அசாம், காஷ்மீர்) போராளிகள் என்றும் அழைக்கின்றன, அதை என்ன சொல்வது! மேலும் "காஷ்மீரை இராணுவத்தைக் கொண்டு பலாத்காரமாக இந்தியா, பாகிஸ்தான் இரண்டுமே கூறுபோட்டுக் கொண்டுள்ளன; காஷ்மீர் தனித்திருப்பதா, அல்லது வேறு எந்த நாட்டுடன் இணைந்திருப்பதா என்பதை காஷ்மீர் மக்களே தீர்மானிக்கும் சுயநிர்ணய உரிமை வேண்டும்; காஷ்மீர் விவகாரத்தில் தலையிட அமெரிக்காவுக்கோ, வேறு எந்த ஏகாதிபத்தியத்துக்கோ உரிமை கிடையாது" என்றுதான் எழுதி வருகிறோம். இது எப்படி பாகிஸ்தானுக்கும் அமெரிக்காவுக்கும் நடைபாவாடை விரிப்பதாகும்! ஆனால் காஷ்மீரில் தலையீடு செய்யும் அமெரிக்காவை எதிர்க்கத் துணியாத இந்திய அரசு, தனது தலையீட்டை நியாயப்படுத்தி அமெரிக்க அரசு எழுதிய கடிதத்தையும் நாட்டு மக்கள் முன் பகிரங்மாக வைக்க அஞ்சுகிறதே இதுதான் தேசப் பற்றா! காஷ்மீர் சுயநிர்ணய உரிமைப் போரை மதவெறி சாயம்பூசி பாகிஸ்தானுடன் காஷ்மீரை இணைக்க முயலும் அமைப்புகளை நாம் தொடர்ந்து எதிர்ப்பதோடு, மதச் சார்பற்ற முறையில் சுயநிர்ணய உரிமைக்குப் போராடிவரும் ஜம்மு-காஷ்மீர் விடுதலை முன்னணியின் கோரிக்கையைத்தான் ஆதரிக்கிறோம். பல்வேறு அடக்குமுறைகள், இழப்புகளுக்கு ஈடுகொடுத்து சுய உழைப்பில் நடத்தப்படும் இந்தப் பத்திரிகையை எழுத்து வியாபாரம் என்று கூறுவது நல்ல வேடிக்கைதான்!

ஆர்.எஸ்.எஸ். சகா; ஆட்சியாளர்களின் பள்ளி, கல்லூரி, பாடப்புத்தகங்கள், வானொலி - வானொளி; அவர்கள் ஆதரவுப் பத்திரிகைகள், போலிக் கம்யூனிஸ்டுகளின் அரசியல் வகுப்புகள் — இவற்றில் குதிரைக்கு முகப்படம் மாட்டிவிடுவதைப் போல "தேசம்", "தேசப் பற்று" ஆகியவை பற்றிப் போதித்தவைகளைக் கொஞ்சம் ஒதுக்கி வைத்துவிட்டு, சுயசிந்தனையுடன் பாருங்கள், நாம் சொல்லுவது எப்படிச் சரியானது என்று புரியும். வரலாறு, அரசியல், பொருளாதாரம், பண்பாடு என எப்படிப் பார்த்தாலும் இந்தியா ஒருபோதும் ஒரு தேசமாக இருந்ததே இல்லை. ஒரு தேசம் என்பது ஒரே மதத்தைச் சேர்ந்தவர்கள் வாழும் பகுதிகளைக் குறிக்காது; அப்படி இருந்தால், மேற்கே மொராக்கோ, துனிசியாவில் இருந்து கிழக்கே இந்தோனேசியாவரை முஸ்லீம்கள் பெரும்பான்மையாக வாழும் நாடுகள் ஒரே தேசமாக அமைந்திருக்கும். ஒரே மொழிபேசும் பகுதிகளும் அப்படி அமையாது; ஆங்கிலம் பேசும் அமெரிக்காவும், இங்கிலாந்தும் தனித்தனி தேசங்கள்தானே! அதைப்போல இராணுவ பலத்தைக் கொண்டு கட்டாயமாக இணைக்கப்பட்ட பிரதேசங்களையும் குறிக்காது; அப்படி இருந்தால் ரசியப் பேரரசின் கீழிருந்த பல்வேறு தேசங்களும் சிதறிப்போயிருக்காது. ஒரு தேசம் என்பது தாம்

## தேசியம், மாநில சுயாட்சி, தன்னுரிமை பற்றி...

## இந்தியத் தேசியம், தமிழ் தேசியம் வேறுபாடு என்ன?

ஒரே இனம் என்கிற மனோவியல் ரீதியில், சுய விருப்பின் அடிப்படையில், தன்னியல்பாக எழும் ஒருமைப்பாட்டு உணர்வு கொண்ட நிரந்தரமான ஒரு மக்கள் திரள் குழு, வகையையே குறிக்கிறது. ஒரு பொதுவான மொழி, பொதுவான பண்பாடு - நாகரீகம், பொதுவான பொருளாதார வாழ்வு ஆகியவற்றைக் கொண்ட ஒரு பொதுவான நிலப்பகுதியில் வாழும் மக்களிடையேதான் இத்தகைய மனோவியல் ரீதியிலான இன ஒருமைப்பாட்டு உணர்வு உருவாக முடியும். மாறாக இந்த உணர்வு ஒரே மொழி, ஒரே மதம், ஒரே அரசு என்கிற அடிப்படையிலோ, இராணுவபலாத்காரத்தாலோ, அரசின் சக்திவாய்ந்த செய்தித் தொடர்புப் பிரச்சாரத்தாலோ உருவாக்கிவிட முடியாது. உண்மையில் இந்தியா என்பது தமிழ், தெலுங்கு, வங்காளி, அசாமி போன்ற பல தேசிய இனங்களைக் கொண்ட ஒரு நாடு. ஆங்கிலேயர் இத்துணைக் கண்டத்தைக் கைப்பற்றித் தனது காலனிய ஆதிக்க அரசின் கீழ் கொண்டு வந்ததற்கு முன்பு இந்தியா என்ற நாடுகூட இருந்ததில்லை. பாரதி பாடிய "பாரதபூமி" பார்ப்பன ஆதிக்க நோக்கத்தோடு இட்டுக்கட்டியது; "பாரத" என்ற பெயரின் காரணமாகவே கூட வெறுக்கத்தக்கது. காலனி ஆதிக்கத்தினால் உருவாக்கப்பட்ட இந்தியா நேரு - பட்டேலின் இராணுவ வலிமையினால் தக்கவைத்துக் கொள்ளப்பட்டதுதான். இப்போதும் வடகிழக்கே ஏழு தேசிய இனங்களும், பல தேசிய சிறுபான்மை இனங்களும், காஷ்மீரும், பஞ்சாபும் ராணுவ பலம் - துப்பாக்கி முனையில்தான் இந்தியாவோடு பிணைக்கப்பட்டிருக்கி



படிப்பகம்

www.padippakam.com

றது. இந்த நாட்டில் உள்ள பல்வேறு தேசிய இனங்களும் இந்தியாவில் இணைந்திருப்பது, அவற்றின் சுய விருப்பின் அடிப்படையிலானதும் அல்ல. கட்டாயக் கல்யாணம் செய்விக்கப்பட்டவர்களுக்கு மட்டுமல்ல, விரும்பி மணந்து கொண்டவர்களுக்கும் விவகாரத்து உரிமை வேண்டும் என்கிறோம். விவாகரத்து உரிமை இருந்தும் விருப்பத்தோடு இணைந்து வாழ்வதுதான் உண்மையான அன்பு, பாசம் கொண்ட மணவாழ்க்கை. அதுபோல பிரிந்து போகும் அளவு சுயநிர்ணய உரிமை இருந்தும் தான் இணைந்துள்ள நாட்டின் மீது கொள்ளும் பற்றுதான் உறுதியானது, உண்மையானது. தாம் ஒரே தேசிய இனம் என்கிற உணர்வு தன்னியல்பாக, சுயவிருப்பு அடிப்படையில் எழுவது — அதுதான் தேசப்பற்று. தாம் ஒரே நாட்டினர் என்பது அந்நாட்டில் இணைந்துள்ள தேசிய இனங்களுக்கு சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் உறுதிப்படுத்துவதால் எழுவது — அது நாட்டுப்பற்று. அத்தகைய நாட்டுப் பற்றையே நாம் இளைஞர்களிடைய வளர்த்து வருகிறோம். இதற்கு மாறாக "பாரத பூமி", "ஜெய்ஹிந்த்" என்று சொல்வது பார்ப்பனிய (இந்து) சனாதன மத வெறியைத் தூண்டி நாட்டைப் பிளவுபடுத்துவது; காலனிய காலத்தில் இருந்து ஏகாதிபத்தியங்களுக்கு தரகு வேலைப் பார்த்து வரும் காந்திய - காங்கிரசு - ஆர்.எஸ்.எஸ். இப்போதும் "காட்", டங்கல், ஐரோப்பிய சமூகத்துடன் ஒப்பந்தம், தாராளமயமாக்கல் என்கிற பெயரில் நாட்டை மறுகாலனியாக்குவதும்தான் நாட்டுக்குத் துரோகம் செய்வதாகும்.

● *தேசியம் என்றால் என்ன? இந்திய தேசியத்திற்கும், தமிழ் தேசியத்திற்கும் என்ன வித்தியாசம்? சுயநிர்ணய உரிமைக்கும் ஜனநாயகப் புரட்சிக்கும் என்ன உறவு? என்ன வேறுபாடு?*

— செழியன், போரூர், சென்னை-116

○ முதல் இரண்டு கேள்விகளுக்கு மேலே சொன்ன பதிலே போதுமானது என்று நம்புகிறோம். சுயநிர்ணய உரிமைக்கும் ஜனநாயகப் புரட்சிக்கும் இடையிலான உறவு பகுதிக்கும், முழுமைக்கும் இடையிலான உறவாகும். சுயநிர்ணய உரிமை என்பது ஒரு பகுதிதான்; ஜனநாயகப் புரட்சி என்பது முழுமையானது. பகுதியை நிறைவேற்றுவதன் மூலம் முழுமையை நிறைவேற்ற உதவ முடியும். முழுமையை நிறைவேற்றுவதன் மூலம் பகுதியும் நிச்சயம் நிறைவேறும். ஆனால் பகுதி எப்போதும் முழுமைக்குக் கீழ்படிய வேண்டும்; எதிராகப் போகக் கூடாது.

● *மாநில சுயாட்சி, சுயநிர்ணய உரிமை, தன்னுரிமை ஆகியவற்றுக்குத் தெளிவான விளக்கமும் எது எந்த இன, மொழி மக்களுக்கு சாதக, பாதகமனதென்பதையும் விளக்கவும்.*

— சி.லோகநாதன், மேட்டுக்கார்கொணம்.

○ சுயநிர்ணய உரிமை என்பதைத் தமிழ்ப்படுத்திச் சொல்வது தான் தன்னுரிமை. ஒரு நாட்டில் இணைந்துள்ள எல்லா தேசிய இனங்களும் பிரிந்துபோகும் உரிமையுடன் கூடிய அதிகபட்ச ஜனநாயக உரிமை பெறுவதுதான் சுயநிர்ணய உரிமை. இதுதான் எல்லா தேசிய இன, மொழி மக்களுக்கும் சாதகமானது, அவசியமானது. ஆனால் மாநில சுயாட்சி என்பது ஒரு நாட்டில் இணைந்துள்ள தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்பதில்லை, மறுப்பதாகும். அதாவது ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் தாம் இணைக்கப்பட்டுள்ள நாட்டில் பெரும் தேசிய இனத்தின் ஆதிக்கம், ஒடுக்குமுறையின் கீழ் கட்டாயம் இணைந்திருக்க வேண்டும் என்று பூட்டி வைப்பதாகும். இந்தக் கட்டாயத்தின் கீழ் எவ்வளவுதான் சுயாட்சி அதிகாரம் பெற்றிருந்தாலும் அது ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் சுதந்திரம், ஜனநாயகத்தைக் குறிக்காது. மாநில சுயாட்சி என்பது ஒடுக்கும் தேசிய இன, மொழி மக்களுக்குத்தான் சாதகமானது. இதை ஏற்பது, தேசிய அடிமைத்தனத்தை ஏற்பதுதான்; துரோகம்தான்.

# தருமபுரி மாவட்டத்தில் போலீசின் காட்டுதர்பார்

பாசிச எம்.ஜி.ஆரின் வாரிசு என்பதை நிரூபிக்கும் வகையில் பாசிசச் செல்வி ஜெயா அரசு, தருமபுரி மாவட்டத்தில் புரட்சிகர - ஜனநாயக இயக்கங்கள் மீது மிருகத்தனமான அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது. ஆசிரியை கல்பனா சுமதி மீது கும்பலாக பாலியல் வன்முறை நடத்திய போலீசு மிருகங்கள் இரு மாதங்களுக்கு முன்பு விசாரணைக்காக கோர்ட்டுக்கு வந்த போது தமிழ்நாடு பெண்ணுரிமைக் கழகத்தினர் அப்போலீசாரை செருப்பாலும் துடப்பத்தாலும் அடித்து பாடம் புகட்டினர். இதனால் ஆத்திரமடைந்த தருமபுரி போலீசார், பெண்ணுரிமைக் கழகத்தைச் சேர்ந்த யசோதா, மகேஸ்வரி ஆகியோரைச் சித்திரவதை செய்து சிறையில் அடைத்துள்ளதோடு, கொலை முயற்சியில் ஈடுபட்டதாக பொய்வழக்கும் போட்டுள்ளனர்.

பொதுக் கூட்டம் நடத்த அனுமதி கேட்டு போலீசு நிலையத்துக்குச் சென்ற முற்போக்கு இளைஞர் அணியைச் சேர்ந்த ஜோசப், சுரேஷ் ஆகியோர் போலீசாரால் மிருகத்தனமாக சித்திரவதை செய்யப்பட்டு, தருமபுரி தொலைக்காட்சி தொடர் ஒளிபரப்பு நிலையத்தை குண்டு வைத்துத் தகர்க்க முயற்சித்ததாக பொய் வழக்கு சோடிக்கப்பட்டு சிறையிலடைக்கப் பட்டுள்ளனர். விவசாயிகளின் வயிற்றிலடிக்கும் டங்கல் திட்டத்தை எதிர்த்து சுவரொட்டி ஒட்டிய மு.இ. அணியைச் சேர்ந்தவர், தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சிறையிடப்பட்டுள்ளார். டங்கல் திட்டத்தை எதிர்த்துக் கூட்டம் நடத்திய மக்கள் ஜனநாயக இளைஞர் கழகத்தினர் மீது போலீசார் தடியடி நடத்தி, கொலை முயற்சியில் ஈடுபட்டதாக பொய்வழக்கு போட்டுள்ளனர்.

அண்மையில் பென்னாகரம் வட்டாரம், ஆலயபுரத்தைச் சேர்ந்த சத்யா என்ற பெண் வரதட்சினைக் கொடுமைக்கு பலியாகியுள்ளதைக் கண்டித்து பென்னாகரம் போலீசு நிலையம் முன்பாக ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் மீதும் இதேபோல் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இரு மாதங்களுக்கு முன்பு பேருந்தில் "புதிய ஜனநாயகம்" இதழை விற்றதற்காக ஊற்றங்கரை முகவர் சுப்பிரமணியன் கைது செய்யப்பட்டார். அண்மையில் விவசாயிகள் விடுதலை முன்னணியின் தருமபுரி மாவட்ட அமைப்பாளர் தாஸின் வீட்டை "கியூ" பிரிவு போலீசார் நள்ளிரவில் சூறையாடியுள்ளனர். தருமபுரி மாவட்டத்தின் பல கிராமங்கள் போலீசாரால் நள்ளிரவில் முற்றுகையிடப்பட்டு, நக்சல்பாரிகள் என சந்தேகிக்கப்படுவோரின் வீடுகள் சூறையாடப்படுகின்றன. அப்பாவிகள் பலர் மீது பொய் வழக்குகள் சோடிக்கப்பட்டு, போலீசு கொட்டிகளில் மிருகத்தனமாக சித்திரவதை செய்யப்படுகின்றனர். அவர்களுக்காக வாதாடும் வழக்கறிஞர்களும் போலீசாரால் தாக்கப்பட்டு, தொடர்ந்து மிரட்டப் படுகின்றனர். இவ்வாறு தருமபுரி மாவட்டம் முழுவதும் போலீசாரின் காட்டுதர்பார் தலைவரித்தாடுகிறது. சிவில் உரிமைக்கான மக்கள் கழகம் (PUCL) 10 பேர் கொண்ட தனது உண்மை அறியும் குழுவினருடன் இம்மாவட்டத்தில் ஆய்வு செய்து போலீசு அட்டூழியங்களை உறுதிப்படுத்தி அண்மையில் ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளது.

முன்பு ஈழத் தமிழர்களுக்கு ஆதரவளித்த 'குற்ற'த்திற்காக புரட்சிகர அமைப்புகள் மீது முதல் சுற்று அடக்குமுறையை ஏவிய பாசிச ஜெயா அரசு, இப்போது எந்த அரசியல் முகாந்திரமும் இன்றி நேரடியாகவே போலீசைக் கொண்டு இரண்டாவது சுற்று அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது. உழைக்கும் மக்களும் புரட்சிகர - ஜனநாயக சக்திகளும் ஓரணியில் திரண்டு பெருகிவரும் இந்த பாசிச அடக்குமுறைக்கு எதிராக கிளர்ந்தெழ வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

# தொடரும் 'மணமகள்' விற்பனை

# நாட்டுக்கே அவமானம்

கனீஸ் பேகம் - ஹைதரா பாத்தின் 'பஸ்தி' என்றழைக்கப்படும் சேரிப் பகுதிகளில் வாழும் முஸ்லீம் இளம்பெண்களுக்கே இடப்பட்டிருக்கும் சாபக்கேட்டிற்குத் தானும் தனது 16 வயதில் பலியாகிப் போனாள். தன்னைவிட பத்தொன்பது வயது மூத்த அரபு நாட்டவருக்கு மணமுடிக்கப்பட்டு, அங்கு அழைத்துச் செல்லப்படும் முன் தில்லி போலீசாரால் கடந்த டிசம்பரில் மீட்கப் பட்டிருக்கிறாள் இவள். இரண்டே ஆண்டுகளில் மீண்டும் ஒருமுறை வெளியுலகிற்குப் பகிரங்கமாகத் தெரியவந்துள்ளது தடையின்றி தொடர்ச்சியாக நடைபெறும் இந்த 'மணமகள் விற்பனை'

கனீஸின் தந்தை படே சாகேப் ரிக்ஷா ஓட்டும் தொழிலாளி; மிகவும் பிரயாசைப்பட்டால் ஒரு நாளைக்கு அதிகபட்சமாக 50 ரூபாய் கிடைக்கலாம். இதற்குள்தான் அந்த ஏழு ஜீவன்களும் தங்களின் வயிற்றுப்பாட்டையும் பிற தேவைகளையும் கவனித்துக் கொள்ள வேண்டும். இதோடு புத்தி சுவாதீனமற்ற 22 வயதான மூத்த மகனின் மருத்துவச் செலவுக்கும் ஏதாவது ஒதுக்கியாக வேண்டும். கனீஸின் இரு தம்பிகளும் குடும்பத்தின் கூடுதல் வருமானத்திற்கு கார் மெக்கானிக் தொழில் பழகுகிறார்கள். ஒன்பது வயதான தங்கை அம்மாவும் அக்காவும் புடவைகளுக்கு பூ வேலைப்பாடு செய்ய உதவுகிறாள். தில்லி சென்று மீட்கப்பட்ட தனது மகளைப் பார்க்கவே ரிக்ஷாவை அடமானம் வைத்துச் செல்லும் நிலையில்தான் கனீஸின் திருமணத்திற்குப் பின்னும் குடும்பநிலை உள்ளது.

தரகர் மூலம் பல பெண்களைப் பார்த்த அரபு நாட்டைச் சேர்ந்த இலாயுஸிக்கு கனீஸ் பிடித்துப் போகவே திருமண ஒப்பந்தமாக இருபதாயிரத்துக்குப் பேரம் பேசி முடிக்கப்பட்டது. ஆனாலும் தரகுத்தொகை போக கனீஸின் பெற்றோர்களுக்குக் கிடைத்தது என்னவோ அதில் பாதிக்கும் சற்று குறைவுதான்.

''கடத்தல், கற்பழிப்பு மற்றும் இளம் பெண்ணை வெளிநாட்டுக்கு கடத்திச் செல்ல முயன்றது'' எனப் பிணையில் வெளியில் வர முடியாதபடி 'மணமகன்' இலாயுஸின் மீதும் அவனது குடும்பத்தின் மீதும் வழக்குத் தொடர்ந்துள்ளதாகத் தெரிவித்தது போலீசு. ஆனால், திருமண ஒப்பந்தத்தில் கனீஸே கையெழுத்திட்டிருப்பது, பாஸ்போர்ட்டில் உள்ள வயது விவரம், மற்றும் கனீஸின் வயது 20 என மருத்துவச் சான்றிதழ் கொடுக்கப்பட்டதன் அடிப்படையில் நீதிமன்றம் 'மணமகன்' குடும்பத்தாரைப் பிணையில் வெளியே செல்ல அனுமதித்து விட்டது. கனீஸும் எதிர்பார்த்தது போலவே, 'தான் தனது கணவருடன் அரேபியா செல்ல விரும்புவதாக' தெரிவித்துவிட்டாள். இனி வரும் நாட்களில் இதுவும் அமீனாவின் விவகாரம் போன்று புதிதாக வேறொரு 'கனீஸ்' மீட்கப்படும் வரை மறக்கப்பட்டு விடும்.

●○●

● கன்னு பேகம் என்பவரின் மகளுக்கு மணமுடித்து அபுதாபி சென்ற பின்தான் தெரிந்தது தனது கணவரின் முதல் மனைவி இறக்கவில்லையென்று; அதோடு கர்ப்பிணியான முதல் மனைவியையும் அவளது குழந்தைகளையும் கவனித்துக் கொள்ளும் 850 ரூபாய் சம்பளம் பெறும் வேலைக்காரியாக்கப்பட்டார் அவர்.

● 15 வயதான ஷாய்னாஸ் திருமணமாகி ஒரு மணிநேரம் கழியும் முன்பே தனது அரபுக் கணவனால் விவகாரத்து செய்யப்பட்டாள். அவள் தொடர்ச்சியாகத் தனது உடல் எடையை இழக்கவும் இரவு நேரத்தில் பயந்து உடல் வியர்த்துப் போய் வீறிட்டு அலறவும் அந்த ஒரு மணிநேரமே காரணமாய் போய்விட்டது.

● 15 வயது ஆயிஷாவை மணந்து கொண்டவனுக்கு தான் அழைத்துவரும் மற்றொரு பெண்ணின் முன்னே அவளை அடிப்பதுதான் பொழுதுபோக்கு. தனது மகனுக்குத் தெரியாமல் அவளது மாமியார் இந்தியாவுக்கு ஆயிஷாவை அனுப்பியதால்தான் அவள் இன்று உயிர் பிழைத்திருக்கிறாள்.



கனீஸ்

● இங்கு திரும்பி வந்து மீண்டும் மணம் புரிந்து கொண்டு முதல் திருமணத்தைக் காரணமாக வைத்து சித்திரவதைப்படும் அநேக பெண்களைப் பற்றிக் கூறுகிறார் ஹஸரத் சகினா பள்ளியின் முதல்வர் ருகையா ஸீம்.

இப்படி முன்பு இதேபோல் விற்கப்பட்டு மீட்கப்பட்ட கனீஸையும் அமீனாவையும் போல் இவர்கள் அனைவரும் ஹைதராபாத்தைச் சேர்ந்த சேரிப் பகுதிகளில் வாழும் முஸ்லீம் சிறுமிகள் 60-களிலிருந்தே இம்மணமுறை தொடர்வதாகவும், ஹைதராபாத்தில் இருந்து மட்டும் வருடத்திற்கு 850 பெண்கள் மணமுடித்து அழைத்துச் செல்லப்படுவதாகவும் அரசின் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. அது ஏன் இச்சிறுமிகள் பெரும்பாலானோரின் தலையெழுத்து இப்படி பொதுவாக உள்ளது?

இந்நகரத்தின் சேரிப்பகுதிகளில் வாழ்ந்து வரும் 60,000 முஸ்லீம் குடும்பங்களில் மிகப் பெரும்பாலானவை வறுமை கோட்டிற்குக் கீழுள்ளவை. மிக நெடுங்காலமாக கைவினைத் தொழில்களில் ஈடுபட்டுவந்த இவர்களின் வாழ்க்கை, இயந்திரத் தொழில்களின் வளர்ச்சியின் காரணமாகச் சிதைவுறத் தொடங்கியது. மாற்று ஏற்பாடு ஏதும் செய்து தராத அரசின் அலட்சியப் போக்கினால் இன்று இவர்களின் வாழ்க்கை வறுமை கோட்டின் விளிம்பில். நுட்பமான வேலைப்பாடுகளை செய்து வந்த கைகள் ஒரு கவலம் சோற்றுக்காக இன்று ரிக்ஷா இழுக்கின்றன; அல்லது தள்ளு வண்டிகளில் பழங்கள் விற்கின்றன. கருச்சிதைவு செய்து கொள்வது மதத்திற்கு எதிரானது என்ற பிற்போக்கு சிந்தனை வறுமையின் ஆழத்தைத் தீவிரமாக்கி, குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் வேலை பார்க்க வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளது. மறுபுறம் இது படிப்பறிவு அற்ற நிலையை - குறிப்பாக பெண்கள் மத்தியில் - வேதனையுறும் அளவிற்கு அதிகப்படுத்தியிருக்கிறது.

பெண்களுக்குத் திருமணம் என வரும்பொழுது வரதட்சணை வழக்கம் முஸ்லீம்களிடையேயும் பரவியிருப்பது நிலைமையை மேலும் கடினமாக்குகிறது. அதேபொழுது அரபு நாட்டவர்கள் மணமகளுக்கு 'மெஹர்' பணம் தந்து மணம் முடிப்பது இவர்கள் மத்தியில் தமது வறுமையை ஓரளவாவது தீர்க்கும் எனும் உந்துதலை ஏற்படுத்தியுள்ளது. இதனால் பலரும் தங்கள் பெண்களை எந்தப் பொருத்தமும் பாராது ஓரளவு பணம் கிடைத்தால் மணம் முடித்து அனுப்பிவிடத் தயாராகி விடுகின்றனர். அரேபியர்களைப் பொருத்தவரை நிஜாம் மன்னர் காலத்திலிருந்தே ஹைதராபாத் நகரத்துடன் அவர்களுக்குள்ள தொடர்பும், தங்கள் நாட்டில் பெண்ணுக்குத் தரவேண்டிய



படிப்பகம்

'மெஹர்' பணம் கூடுதலாக இருப்பதும் முக்கிய காரணங்கள்; பல வழக்குகளில் குறைந்த செலவிலான வேலைக்காரியாய் இப் பெண்கள் அமைந்து விடுவதையும் மறுக்க முடியாது.

ஹைதராபாத் நகரத்தின் புகைவண்டி நிலையத்திலோ அல்லது விமான நிலையத்திலோ அரபு நாட்டைச் சேர்ந்தவர் ஒருவர் வந்திறங்கினாலே, ''திருமணம் செய்து கொள்ள வேண்டுமா?'' என்பதுதான் டாக்ஸி அல்லது ஆட்டோ ஓட்டுவர்கள் கேட்கும் முதல் கேள்வி. அந்தளவுக்குத் தரகர்களின் வலைப்பின்னல் நெருக்கமாக உள்ளது. இச்சேரிப் பகுதிகளில் அரபு நாட்டவர்களுக்காக 'மணமகள் அணிவகுப்பு' தினமும் நடந்து வருவது சாதாரணமான ஒன்று. கல்யாணமாகாத ஒவ்வொரு பெண்ணிடமும் 'பாஸ்போர்ட்' இருக்கும்.

சட்டப்படி திருமணம் செய்து கொண்டு அழைத்துச் செல்வது; திருமணம் செய்து கொண்டு இங்கேயே விட்டுவிட்டு வருடம் ஒரு முறை வந்து பார்ப்பது; சுற்றிப் பார்ப்பதற்குத் துணையாக அழைத்துச் செல்வது - எனப் பலவிதமாகத் திருமணங்கள் நடத்தி வைக்கப்படுகின்றன. ஒவ்வொரு வகைக்கும் பெண்ணின் குடும்ப நிலை, திருமணம் செய்து கொள்பவரின் வசதிக்கும் ஏற்றவாறு 'மெஹர்' பணமும் தரகுத் தொகையும் மாறுபடும்.

முகத்தில் அறைந்தார்போல் வெளிவரும் இவ்வளவு உண்மைகள் தெரிந்த பின்னும்கூட மத்திய மற்றும் மாநில அரசுகள் இச்சமூகத்தினரின் அடிப்படை வாழ்க்கைப் பிரச்சினையைத் தீர்க்கவோ, தனது கண்காணிப்பைத் தீவிரப்படுத்தவோ தொடர்ச்சியாக எந்த நடவடிக்கையினையும் எடுத்ததில்லை. அமீனா மீட்கப்பட்ட பின்புதான் அச்சேரிப் பகுதியினுள் பெண்களுக்கான தொழிற்பயிற்சி நிலையங்களைத் தொடங்க திட்டம் தீட்டியது; கனீஸ் விவகாரத்தின் பின் முஸ்லீம் திருமண பதிவு முறைகளில் மேலும் சில கண்காணிப்பு அம்சங்களைப் புகுத்தப் போவதாக வக்ஃப் வாரியத்திடம் அறிவித்துள்ளது, ஆந்திர மாநில அரசு.

''குழந்தைத் திருமணம், வரதட்சணைக் கொடுப்பதும் வாங்குவதும், வயது மீறிய பொருந்தாத் திருமணங்களும் இந்துக்களிடையேயும் பரவலாகக் காணப்படுவதுதான்; ஆனால் முஸ்லீம்கள் என்பதால் இதற்கு மதச்சாயம் பூசுவதும், அவர்களைக் கீழ்த்தரமாகச் சித்தரிக்க இதனைப் பயன்படுத்துவதும்தான் எதார்த்தமாக உள்ளது'' என்கின்றனர் பெருவாரியான முஸ்லீம் மதத் தலைவர்களும் அரசியல்வாதிகளும். உருது பத்திரிகைகள்கூட கனீஸ் விவகாரத்தை சாதாரணச் செய்தியாகத்தான் வெளியிட்டுள்ளன.

## இனி கனீஸின் எதிர்காலம்? அமீனாவின் முடிவே சாட்சி

அமீனா மீட்கப்பட்டவுடனேயே அவளது தந்தைக்குப் பொது தொலைபேசி நிலையம் அமைத்துக் கொடுக்கப் போவதாக அறிவித்தார், மத்திய தொலைத் தொடர்புத்துறை அமைச்சர். வருடங்கள் இரண்டு ஓடி முடிந்த பின்னரும்கூட அதற்கான ஒப்புதல் இன்னும் அவளது தந்தை பக்ருதீனுக்கு வரவில்லை.

அமீனா படிக்க விரும்புகிறாள்; படித்து வேலைக்குப் போக விரும்புகிறாள் ஆனால் குடும்பநிலை அவளது அந்த சிறிய, அவசியமான ஆசைக்குக் கூட இடந்தரவில்லை. வீட்டுக்கு வந்து கல்வி கற்பித்த ஆசிரியரும் இப்போது வருவது கிடையாது. ஆசிரியருக்கு முறையாக அரசு சம்பளம் தர முடியாமல்(!) போனதுதான் இதன் காரணம். அமீனா வெளியே வருவதும் கிடையாது. ''நாலு பேரின் குறு குறு பார்வையை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை'' என்கிறாள். தினமும் காலை முதல் மாலை வரை சேலைகளுக்கு பூ வேலைப்பாடு செய்வது மட்டும்தான் அவளுக்கு இப்போது எல்லாம். மாலையும் இராப்பொழுதில் சூழும் இருட்டும் அவளது தனிமையைப் பங்கிட்டுக் கொள்கிறது. இள வயதுக்குரிய எந்த உற்சாகமும் சந்தோசமும் அவளிடம் இல்லை. நண்பர்கள் கிடையாது; விளையாட்டு கிடையாது. இப்பொழுது அவளது உலகமே நாலு சுவருக்குள்தான்!

''பூப்பெய்தியவுடனேயே ஒரு முஸ்லீம் பெண் திருமண வயதை அடைந்தவளாகி விடுகிறாள்; 18 வயது வர வேண்டும் என்ற அவசியமில்லை. எனவே அரசின் குழந்தைத் திருமண தடுப்புச் சட்டம் முஸ்லீம் தனியுரிமைச் சட்டத்துக்குப் பொருந்தாது'' என்கிறார்கள் இவர்கள். ''நமக்கு 'விடுதலை' வாங்கித் தந்த காந்தி குடும்பத்தில், ஏழாவது குழந்தை'' என கருத்தடைக்கு எதிராக அறிவுக்குப் பொருந்தாத வாதங்களையும், ''படித்த பெண்கள்கூட அமெரிக்காவில் கணவனிடம் உதைபடுகிறார்கள்'' என நேர் எதிரான கருத்துக்களையும் தங்களின் பிற்போக்கு சிந்தனையை நியாயப்படுத்த எடுத்துப் பேசுகின்றனர்.

> ''வரதட்சணைக் கொடுமை மற்றும் வறுமையால் அரபு நாட்டவர்கள் மணமகளுக்கு 'மெஹர்' பணம் தந்து மணம் முடிப்பது முஸ்லீம்களிடையே பிரச்சினைக்கு தீர்வாக உள்ளது''.



கனீஸின் தாய்

இப்பிரச்சினையின் மையமாகத் திகழும் சேரியைச் சேர்ந்த முஸ்லீம் சமூகத்தினரில் பெரும்பாலோர் அரசு ஏனாதானோவென்று செய்யும் உதவிகளைக்கூட முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளுவதில்லை. பண உதவியுடன் கூடிய தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு அனுப்புவதைவிட, வறிய நிலையிலும் நூறு ரூபாய் செலவழித்து அழகுபடுத்திக் கொண்டு 'மணப் பெண் அணிவரிசைக்கு' அனுப்புவதைத்தான் அவர்கள் காரிய சாத்தியமாய்க் கருதுகிறார்கள். வறிய நிலையில் அதிகமான குழந்தைகள் வேண்டாம் எனச் சாதாரண பொது நல ஊழியர்கள் கூறுவதுகூட மதத்தைப் புண்படுத்துவதாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. நாட்கள் நகர்ந்து அரசின் உதவி குறைவது ''எனது மகளின் வாழ்க்கையைக் கெடுத்துவிட்டார்கள்'' என்ற மீட்கப்பட்ட சிறுமிகளின் பெற்றோரின் கருத்தை நியாயப்படுத்துவதாக அமைந்துவிடுகிறது.

சிறுபான்மையினரான தங்களை அடையாளப் படுத்துவது மதப்பழக்க வழக்கங்கள் என்ற அடிப்படையில் இம்மதத்தினர் தங்கள் மதத்தில் காணப்படும் இது போன்ற பல அவலங்களை எதிர்ப்பதேயில்லை. இப்போக்கே இந்துமத வெறியர்கள் பரப்பும் கட்டுகதைகளை இந்துக்கள் மத்தியில் வலுப்படுத்துவதாக அமைந்துவிடுகிறது. முஸ்லீம் இளஞ்சிறுமிகள் இக் கொடுமைக்குத் தொடர்ந்து பலியிடப்படுவதற்கு நம் அனைவருமே வெட்கித் தலைகுனிய வேண்டியவர்ளாவோம்; இது நமது நாட்டுக்கே நேரும் அவமானமாகும். அதை மத்திய, மாநில அரசுகள் மட்டுமல்ல எந்தவொரு பிற ஓட்டுக்கட்சிகளும் உணர்ந்ததாகத் தெரியவில்லை.

O — ரஹீம்



படிப்பகம்

www.padippakam.com



# இலங்கையில் ஒரு இட்லரின் வாரிசு

எண்ணற்ற கிரிமினல் கொலைக் குற்றங்களால் இலங்கைத் தீவையே ரத்தச் சேற்றில் புதைத்தவர் தான் மாண்டுபோன முன்னாள் அதிபர் பிரேமதாசா. அவரது பாசிச - பயங்கரவாதப் படுகொலைகளைப் பற்றி அதிர்ச்சியூட்டக்கூடிய பல புதிய தடயங்கள் அண்மையில் வெளி வந்துள்ளன. தென்னிலங்கையின் சூர்யகாந்தா மலைச்சரிவுக் காட்டுப் பகுதியில் மூன்று பெரும் சவக்குழிகளை எதிர்க்கட்சியினர் கண்டறிந்தனர். பத்திரிகையாளர்கள், மனித உரிமை இயக்கத்தினர் முன்னிலையில் அக்குழிகளைத் தோண்டத் தோண்ட எலும்புக்கூடுகள்; மண்டை ஓடுகள், ஒரு குழியில் மட்டும் 40-க்கும் மேற்பட்டோரின் எலும்புக்கூடுகள் இருந்துள்ளன சிலவற்றில் காவிக் கயிறும் காணப்பட்டுள்ளது.

1988-90ல் தென்னிலங்கையின் சக்தி வாய்ந்த இயக்கமாகத் திகழ்ந்த ஜே.வி.பி. எனும் மக்கள் விடுதலை முன்னணியின் ஆயுத எழுச்சியை பாசிச பிரே-



மதாசா மிருகத்தனமாக ஒடுக்கினார். ஜே.வி.பி. யின் ஆதரவாளர்கள் ஆயிரக்கணக்கில் வேட்டையாடப்பட்டனர். கால்வாய்கள், ஆறுகளில் பிணங்கள் மிதந்து வந்தன. தெருக்களின் மின்கம்பங்களில் கட்டப்பட்டு, கழுத்தில் ''டயர்'' மாட்டி தீயிடப்பட்ட பிணங்கள் தொங்கின. இலங்கையின் மனித உரிமை அமைப்புகள் இதற்கெதிராகப் போராடத் தொடங்கியதும், ஜே.வி.பி. இயக்கத்தினரையும், அவர்களுக்கு ஆதரவளித்த புத்தபிக்குகளையும் பிடித்துச் சென்று சுட்டுக் கொன்று நடுக்காட்டில் சவக்குழி வெட்டி கொலையைத் திறமையாக மூடிமறைத்தது. பாசிச பிரேமதாசா அரசு. இதற்கென ''பச்சைப் புலிகள்'' எனும் இரகசிய கொலைப் படையை நிறுவி ஆயிரக்கணக்கானோரைக் கொன்றொழித்துள்ளது. சவக்குழிகளில் காணப்பட்ட காவிக் கயிறுகள் புத்தபிக்குகள் இடுப்பில் அணிபவை என்பதும், இலங்கையின் ரூபவாஹினி தொலைக்காட்சி அஞ்சல் கோபுரங்கள் அருகே, அரசின் பாதுகாப்பிலுள்ள காட்டுப் பகுதியில் சவக்குழிகள் காணப்பட்டிருப்பதும் சந்தேகத்துக்கிடமின்றி பிரேமதாசாவின் அரச பயங்கரவாத கொலை வெறியை நிரூபித்துக் காட்டுகின்றன. ஐந்தாண்டுகளுக்கு முன்பு தென்னிலங்கையில் காணாமல் போன 31 இளங்குழந்தைகள் உள்ளிட்டு 60,000 இளைஞர்கள் இவ்வாறு இரகசியமாகக் கொல்லப்பட்டிருக்கலாம் என மனித உரிமை அமைப்புகள் அச்சம் தெரிவித்துள்ளன. எதிர்க்கட்சிகள் நீதிவிசாரணை கோரி போராடிய பிறகும்கூட இலங்கை பாசிச அரச இன்னமும் அசைந்து கொடுக்கவில்லை. ஏழை நாடுகளில் நடக்கும் மனித உரிமை மீறல் பற்றி வாய்கிழிய கூச்சல் போடும் அமெரிக்கா மற்றும் பிற ஏகாதிபத்தியங்களோ, தமக்கு இந்த விவகாரத்தில் ஆதாயமில்லை என்பதால் வாய்மூடிக் கிடக்கின்றன.

**மார்மக் கல்லறைகளில் மண்டை ஓடுகள்; ஜே.வி.பி.-யினரைக் கொன்று புதைத்த பிரேமதாசாவின் அரச பயங்கரவாதக் கொடூரம்**

## உயிர் மூலக்கூறு பொறியியல்: வல்லரசுகளின் புதிய ஆயுதம்

உலகின் முதலாவது உயிர் மூலக்கூறு பொறியியல் முறைப்படி (Genetically engineered) தயாரிக்கப்பட்ட தக்காளிப் பழம் ஜனவரி மாத இறுதியில் அமெரிக்க சந்தையில் விற்பனைக்கு வர உள்ளது. சற்றே இனிப்புச் சுவை கூடுதலாக உள்ள இந்தத் தக்காளி பன்னாட்டு நிறுவனத்தின் காப்புரிமை பெற்றதாகும். விரைவில் இதன் விதைகள் டங்கல் ஒப்பந்தப்படி மற்ற ஏழை நாடுகளுக்கும் இறக்குமதியாகும். இந்த தக்காளியில் ''சந்தை உயிர்மம்'' ரகசியமாக வைக்கப்பட்டுள்ளது. எனவே அதன் எந்தவொரு விதையிலும் இந்த உயிர்மம் (Gene) ஊடுருவி பல்கிப் பெருகும். இந்த உயிர்மம், சாதாரண நாட்டுத் தக்காளிப் பயிரின் நோய் எதிர்ப்புச் சக்தியை படிப்படியாக அழிக்கக் கூடிய வல்லமை கொண்டது. பன்னாட்டு நிறுவனத்தின் புதிய ரக தக்காளி பயிரிடப்பட்ட நிலத்தை அடுத்து நாட்டுத் தக்காளியைப் பயிரிட்டிருந்தால், நாளடைவில் நாட்டுத் தக்காளிப் பயிர் அழிந்து போகும்.

இதேபோல, பருத்தி, சோளம், சோயா, கோதுமை ஆகிய பயிர்களுக்கும் ''சந்தை உயிர்மம்'' கொண்ட புதியரக விதைகளை ஏகாதிபத்திய நிறுவனங்கள் கண்டுபிடித்துள்ளன. இத்தகைய விதைகள், பயிர்கள் இறக்குமதி செய்யப்பட்டால், ஓராண்டுக்குள் ஏழை நாடுகளின் பாரம்பரிய விவசாயம் திவாலாகிவிடும். இதிலே இன்னொரு கொடுமை என்னவென்றால், பன்னாட்டு நிறுவனத்தின் புதியரக விதைகளிலுள்ள ''சந்தை உயிர்ம''த்தை அதன் விதையிலிருந்து ஒருபோதும் நீக்கவே முடியாது. எனவே ஒவ்வொரு முறையும் புதியரக விதையைக் கொண்டு பயிரிடும் போது, ''சந்தை உயிர்மம்'' பல்கிப் பெருகி, பாரம்பரிய விவசாயத்துக்குப் பேரழிவை ஏற்படுத்திக் கொண்டே யிருக்கும். ஏழை நாடுகளை ஓட்டாண்டிகளாக்கி, நிரந்தரமாக மேலைநாடுகளிடம் கையேந்தி நிற்கும் நிலைக்குத் தள்ளுவதே ஏகாதிபத்தியங்களின் நோக்கம். அதை ஈடேற்றுவதற்கான புதியவகை ஆயுதமாகவே அவை உயிர் மூலக்கூறு பொறியியலை ஏந்திச் சுழற்றுகின்றன.

பயிர்கள், பழங்கள் மட்டுமல்ல; இந்தியாவின் அரிய காட்டு விலங்குகள், பறவைகள், பூச்சிகளின்


படிப்பகம்

www.padippakam.com



உயிர் மூலக்கூறுகளை இந்தியாவிலிருந்து ரகசியமாக ஏகாதிபத்தியங்கள் கடத்திச் சென்றுள்ளன. குறிப்பாக இந்தியாவின் சிங்கம், சாம்பல் நிற முதலை, மனிதக் குரங்குகளுக்கு அடுத்த கீழ்நிலை பரிணாம நிலையிலுள்ள நீண்டவால் குரங்குகளின் இரத்தம், இந்திரியம் ஆகியவற்றின் மாதிரிகள் டெல்லி விலங்கியல் பூங்காவிலிருந்தும், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியிலிருந்தும் அமெரிக்காவுக்கு ரகசியமாக கடத்தப்பட்டுள்ளன. இவற்றின் உயிர் மூலக்கூறுகளை ஆராய்ச்சி செய்து புதியவகை உயிர்மத்தை அதில் சேர்த்து விலங்குகளின் உடலில் செலுத்திவிட்டால், பின்னர் நமது நாட்டு அரிய விலங்கினங்கள் படிப்படியாக அழிந்து போகும். சுற்றுச்சூழல் நிலை குலைந்து போகும். புதிய வகை சிங்கங்களும், குரங்குகளும் அமெரிக்காவிலிருந்து இறக்குமதியாகும். இந்த உண்மைகளை அமெரிக்க உயிரியல் துறை விஞ்ஞானிகளே பகிரங்கமாக அம்பலப்படுத்தியுள்ளனர்.

## மணிப்பூர் ஆட்சிக் கலைப்பு இராணுவ ஆட்சிக்கு ஏற்பாடு

இந்தப் புத்தாண்டு தினத்தன்று, மணிப்பூர் மாநிலத்தின் 20 மாதகால காங்கிரசு கூட்டணி அரசு கலைக்கப்பட்டு, 356-வது சட்டப் பிரிவின்படி 'குடியரசு'த் தலைவர் ஆட்சி பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. நாகா-குக்கி இனக்கலவரத்தையும், போராளி இயக்கங்களின் நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்த தவறிவிட்டதாகக் காரணம்காட்டி மத்திய அரசு, மணிப்பூர் அரசைக் கலைத்துள்ளது. கடந்த ஈராண்டுகளில் மணிப்பூர் மாநில அரசு கலைக்கப்படுவது இது இரண்டாவது முறையாகும்.

காங்கிரசுக் கட்சியின் பாரம்பரியப்படி, மணிப்பூர் காங்கிரசிலும் கோஷ்டிப் பூசலும் குடுமிபிடி சண்டையும் கொடிகட்டிப் பறக்கிறது. காங்கிரசுக் கோஷ்டித் தலைவர்கள் நகா-குக்கி இன எம்.எல்.ஏ.க்களைத் தமக்கு ஆதரவாகத் திரட்டிக் கொள்ளும் பொருட்டு நாகா-குக்கி இனக் கலவரத்தைத் தூண்டி விட்டு ஆதாயமடைந்தனர். ஆனால் நாகா எம்.எல்.ஏ.க்கள் தம்க்கு அரசு பதவிகளிலும் சன்மானங்களிலும் உரிய பங்கு கிடைக்காததாலும், கூட்டணிக் கட்சியான மணிப்பூர் மக்கள் கட்சி காங்கிரசுக்கு ஆதரவு தருவதில் திரிசங்கு நிலையில் இருப்பதாலும், காங்கிரசு அரசைக் கவிழ்க்கும் வேலைகளில் வெளிப்படையாக ஈடுபடத் தொடங்கினர். இரகசிய பேரங்கள் - சதிகள் மூலம் ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்ள முடியாத நிலையில், மீண்டும் குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கும் நோக்கத்தோடு, மணிப்பூர் அரசை மத்திய அரசு கலைத்துள்ளது.

இதைவிட முக்கியமாக, வடகிழக்கு மாநிலங்களில் சுயநிர்ணய உரிமைக்கான போராளி இயக்கங்களை அழித்தொழிக்கும் புதியதொரு தாக்குதல் நடவடிக்கையை மேற்கொள்ள இந்திய அரசும், ராணுவமும் தீர்மானித்துள்ளன. ஏனெனில் வடகிழக்கிந்தியாவின் ஏழு மாநிலங்களின் பல்வேறு போராளி இயக்கங்கள் தமக்குள் ஐக்கிய முன்னணி அமைத்துப் போராடுவதென தீர்மானித்துள்ளன. கடந்த டிசம்பரில் நிறுவப்பட்ட இக்கூட்டமைப்புக்கு ஏழு சகோதரிகளின் ஐக்கிய விடுதலை முன்னணி (ULFSS) எனப் பெயரிட்டு தமது போராட்டத்தைத் தீவிரப்படுத்தி வருகின்றன. மணிப்பூர் மாநில அரசு செயல்பட்டால், ராணுவத்தின் அட்டூழியங்கள் சட்டசபையில் அம்பலமாகும். மேலும் நாகா, குக்கி, மைத்தி இனத்தைச் சேர்ந்த எம்.எல்.ஏ.க்கள் காங்கிரசுக்கு எதிராக புதிய கூட்டணி கட்டிவிடுவார்கள்.

எனவேதான், நாகா-குக்கி இனக் கலவரத்தைச் சாக்கிட்டு மணிப்பூர் அரசை காங்கிரசுக் கயவாளிகள் அவசரமாகக் கலைத்துள்ளனர். வடகிழக்கிந்திய மாநிலங்களில் இந்திய ராணுவத்தின் பயங்கரவாத அட்டூழியங்களுக்கு முன்னேற்பாடுதான் மணிப்பூர் ஆட்சிக் கலைப்பு. இந்த உண்மைகளைப் புரிந்து கொண்டு, பாசிசக் காங்கிரசின் மோசடிகளை இந்தியாவின் ஒடுக்கப்படும் பிற தேசிய இன மக்கள் அம்பலப்படுத்தி முறியடிக்க வேண்டும்.

## உலக வங்கிக்குப் பணிந்து மானிய வெட்டு

உலக வங்கியின் கட்டளைக்கிணங்க இந்த வருடத்திலாவது நிதிப் பற்றாக்குறையை 4.5 சதவீதம் அளவுக்குக் குறைத்துவிடுவதற்காக மத்திய அரசு விவசாயத்திற்கும், உணவுப் பொருள் விநியோகத்திற்கும் வழங்கிவரும் மானியத் தொகையை மேலும் குறைத்துவிடத் தீர்மானித்துள்ளது. ''திட்டச் செலவுகளை மேலும் குறைக்க முடியாததாலும், வரும் ஆண்டுகளில் நடைபெறவுள்ள தேர்தல் செலவுகளினாலும் இம்மானிய வெட்டு தவிர்க்க முடியாதது'' என நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது. பிரதமர் ராவும், ''உரத்திற்கு மானியம் வழங்குவது தற்காலிகமானதுதான்; புதிய உரக்கொள்கை உருவாக்கப்பட்ட பின்பு மானியம் வழங்குவதை அரசு முழுமையாக நிறுத்திக் கொள்ளும்'' என வெளிப்படையாகவே ஒரு பொதுக் கூட்டத்தில் பேசியுள்ளார். இதன் முன்னோடியாக, வரவு - செலவு கணக்குகளைத் தாக்கல் செய்

• மணிப்பூரில் மத்திய படைகள்; போராளிகளை வேட்டையாட ஏவப்படும் அரசு பயங்கரவாத வன்முறை •



யும் முன்னேயே, சமையல் எரிவாயுவின் விலை ஒரு கலனுக்குப் பத்து ரூபாய் என அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த விலையேற்றம் அரசு ஒரு கலனுக்கு வழங்கும் மானியத் தொகையில் பத்து ரூபாயைக் குறைத்துக் கொண்டதால் ஏற்பட்டதாகும்.

அடுத்து இரயில்வே கட்டணத்தை ஆகக் கூடுதலாக உயர்த்த பரிந்துரைத்திருக்கும் நஞ்சுண்டப்பா கமிட்டியின் பரிந்துரைகளை இரயில்வே அமைச்சகம் ஏற்றுக் கொண்டுவிட்டது. இதன்படி கட்டண உயர்வோடு பயணிகளுக்கு ரூபாய் ஒன்றும், சரக்குகளுக்கு ரூபாய் இரண்டும் தூர வித்தியாசமின்றி கட்டணத்தோடு கூடுதல் தொகையாக வசூலிக்கப்படும். 11 நாட்கள் பயணத்திற்குச் சமமாகவுள்ள மாதாந்திர பயணக் கட்டணம் இனி 25 நாட்கள் என்ற அளவுக்கு உயர்த்தப்படும்.



படிப்பகம்

www.padippakam.com



மானியத்தை முற்றிலுமாக ஒழித்துவிடத் துடிக்கும் ராவ் அரசு, மறுபுறம் இந்த வருடம் இறக்குமதி சுங்கத் தீர்வையை 60-லிருந்து 75 சதவீதம் அளவுக்குக் குறைத்துவிடத் தீர்மானித்துள்ளது. அதனால்தான் மன்மோகன் சிங் பதவி விலகுகிறேன் என்றவுடன் ஏகாதிபத்திகளும் அவர்களது அடிவருடிகளும் துடித்துப் போனார்கள் போலும்!

## காஷ்மீர் விவகாரம்: தனிமைப்பட்ட இந்தியா

காஷ்மீர் மாநிலத்தில் 1990லிருந்து 1993 முடிய இதுவரை 8100 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 1080 பேரைக் காணவில்லை; 5800 வீடுகள், 1300 அரசு அலுவலகங்கள், 1450 கடைகள் தீவைத்துக் கொளுத்தப்பட்டுள்ளன. ஒரு லட்சத்துக்கும் மேலான



ஹஸ்ரத்பால் மசூதியை முற்றுகையிட்ட ராணுவத்தினர்:

மக்கள் அகதிகளாக வெளியேறியுள்ளனர். 2400 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். காஷ்மீரில் அரசு பயங்கரவாதம் எந்த அளவுக்குத் தலைவிரித்தாடுகிறது என்பதற்கு இந்தப் புள்ளி விபரங்களே சாட்சியாக உள்ளன.

காஷ்மீர் மக்களின் உறுதி குலையாத போராட்டம், காஷ்மீரில் மனித உரிமைகளைக் காலில் போட்டு மிதிக்கும் இந்தியாவின் கொலை வெறியாட்டம் உலகெங்கும் அம்பலப்பட்டுப் போயிருப்பது, அமெரிக்காவின் நிர்பந்தம் ஆகியவை காரணமாக 16 மாதங்களுக்குப் பிறகு இந்தியாவும் - பாகிஸ்தானும் வெளியுறவுச் செயலர்கள் மட்டத்தில் அண்மையில் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளன. காஷ்மீர் விவகாரத்தை தனி நிகழ்ச்சி நிரலாகக் கொண்டு இரு நாடுகளும் பேச்சுவார்த்தை நடத்துவது இதுவே முதன் முறையாகும்.

காஷ்மீர் பிரச்சினையை அங்கீகரித்து இரு நாடுகளும் பேச்சு வார்த்தை நடத்துவதே சாதகமான அம்சமாக முதலாளித்துவ பத்திரிகைகளால் ஊதிப் பெருக்கப்பட்டாலும், காஷ்மீர் போராளிகளும் மக்களும் இந்தப் பேச்சுவார்த்தையை அங்கீகரிக்க வில்லை. இந்தியாவும் பாகிஸ்தானும் கூறு போட்டுக் கொள்ள காஷ்மீர் ஆட்டு மந்தையல்ல; இந்தியாவும் பாகிஸ்தானும் தாங்கள் ஆக்கிரமித்துக் கொண்டுள்ள பகுதிகளிலிருந்து முற்றாக வெளியேறிவிட வேண்டும். ஐ.நா. மன்றத்தின் மேற்பார்வையின் கீழ் ஐந்தாண்டுகளுக்கு சுதந்திர நாடாகச் செயல்பட அனுமதிக்க வேண்டும். அதன் பிறகு கருத்துக் கணிப்பு தேர்தல் நடத்தி - இந்தியாவுடன் சேர்வதா, பாகிஸ்தானுடன் சேர்வதா அல்லது தனித்திருப்பதா என்று முடிவு செய்ய வேண்டும் என்று காஷ்மீர் விடுதலை முன்னணி (JKLF) உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள் கோரியுள்ளன. அதைத் தொடர்ந்து, இந்திய-பாக் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றபோது தொடர்ச்சியாக 12 இடங்களில் குண்டு வெடிப்புகளை நடத்தி போராளிகள் தமது அதிருப்தியைத் வெளிப்படுத்தியுள்ளனர்.

இதற்கிடையே, காஷ்மீர் விகாரத்தில் தலையிட்டு மேலாதிக்கம் செலுத்த முயலும் அமெரிக்க அதிபர், கடந்த டிசம்பர் இறுதியில் குலாம் நபி என்ற பாக். ஆதரவு பெற்ற போராளிக் குழுத்தலைவருக்கு ஓர் கடிதம் எழுதியுள்ளார். காஷ்மீரில் அமைதியை நிலைநாட்ட போராளிகளோடு தாமும் ஒத்துழைக்க விரும்புவதாக அதில் குறிப்பிட்டுள்ளார். அமெரிக்க அதிபர் இவ்வாறு கடிதம் எழுதியதை எதிர்த்துப் பெருங்கூச்சல் போடுகிறது இந்திய அரசு. வழக்கம் போலவே, பாகிஸ்தான் போராளிகளுக்கு ஆயுத உதவி செய்வதாக கூப்பாடு போட்டு, காஷ்மீரில் இராணுவத்தைக் குவித்து, பயங்கரவாத அடக்கு முறைகளைத் தீவிரப்படுத்திவருகிறது. ஜம்மு பகுதியிலுள்ள பண்டிதர்களைத் (பார்ப்பனர்களை) தூண்டிவிட்டு, ஜம்மு பிராந்தியத்தை மட்டும் இந்தியாவுடன் சேர்த்துக் கொள்ள கீழ்த்தரமான முயற்சிகளில் இந்தியா இறங்கியுள்ளது.

ஆனால் இந்தியாவின் சூழ்ச்சிகளுக்கு காஷ்மீரி மக்கள் ஏமாறத் தயாராக இல்லை. போராளி அமைப்புகள், அரசியல் கட்சிகள், மதச் சார்பு இயக்கங்கள் என 34 அமைப்புகளின் கூட்டமைப்பான "ஹாரியத்" தலைமையில் காஷ்மீரிகள் போராட்டத்தை தீவிரப்படுத்தி வருகிறார்கள். ஹஸ்ரத்பால் மசூதியின் மீதான ராணுவ முற்றுகை நீக்கப்பட்டபோதிலும், பதுங்கு குழிகள் - சோதனைக் கோபுரங்கள் அமைத்து, தொடர்ந்து ராணுவம் கண்காணிப்பு, கெடுபிடிகள் செய்வதை எதிர்த்தும், காஷ்மீரிலிருந்து இந்திய ராணுவத்தை முற்றாக வெளியேற்றக் கோரியும் தொடர்ச்சியாகக் கடையடைப்பு போராட்டங்களை நடத்தி வருகின்றனர். தனது செயலுக்கு நியாயம் கற்பிக்க முடியாத நிலையில் இந்தியா உள்நாட்டிலும் உலக அரங்கிலும் மேலும் அம்பலப்பட்டு, தனிமைப்பட்டுக் கிடக்கிறது.

## ஏகாதிபத்திய வாசலிலே விவசாயிகளின் இடிமுழக்கம்

அமெரிக்காவின் தலைமையிலான வடஅமெரிக்க சுதந்திர வர்த்தக வளையம் (NAFTA) செயல்படத் தொடங்குவதற்கு முன்பாகவே, அதற்கெதிராக மெக்சிகோ நாட்டு விவசாயிகள் போர்க்கோலம் பூண்டுள்ளனர். அமெரிக்காவின் தெற்கே மெக்சிகோவின் தென் பகுதியிலுள்ள சியாபாஸ் பிராந்தியத்தைச் சேர்ந்த விவசாயிகள் நிலத்திற்காகவும், அரசியல் சுதந்திரத்திற்காகவும் 1994 புத்தாண்டு தினத்திலிருந்து ஆயுதமேந்திப் போராடி வருகிறார்கள். இப்பிராந்தியத்தின் பெரும்பான்மை நிலங்களைச் சுருட்டிக் கொண்டுள்ள சிறுபான்மை நிலப் பிரபுக்களை எதிர்த்து, பஞ்சைப் பராரிகளான கூலி-ஏழை, குத்தகை விவசாயிகள் பேரலையாய் திரண்டு, கொரில்லா முறையில் போராடி 6 நகரங்களைக் கைப்பற்றிக் கொண்டனர். 1910-17ம் ஆண்டுகளில் நடந்த



படிப்பகம்

www.padippakam.com



மெக்சிகோ விவசாயப் புரட்சியின் தளபதியான எமிலனோ சாபடா என்பவரின் நினைவாக, தமது போராட்ட இயக்கத்தை சாபடிஸ்டா தேசிய விடுதலைப் படை என்றழைக்கின்றனர். "அடிப்படை வசதி கூட இல்லாமல், வறுமையில் உழலும் எங்களை மேலும் ஓட்டாண்டிகளாக்க முயலும் வடஅமெரிக்க சுதந்திர வர்த்தக வளையத்தை நாங்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்" என்று அவர்கள் சூளுரைக்கிறார்கள்.

மெக்சிகோ விவசாயிகளின் புரட்சிகர போராட்டத்தை தெற்கேயுள்ள அண்டை நாடான குவாதமாலா நாட்டின் கம்யூனிசப் புரட்சியாளர்கள் ஆதரித்து ஆயுத உதவி செய்து வருகின்றனர். மெக்சிகோவின் கத்தோலிக்க திருச்சபைகளும் விவசாயிகளை ஆதரிக்கின்றன. ஆனால் செவ்விந்திய விவசாயிகளின் புரட்சியைக் கண்டு அரண்டுபோயுள்ள மெக்சிகோ அரசு, வான் படையைக் கொண்டும் டாங்கிப் படையைக் கொண்டும் குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தி 500-க்கும் மேற்பட்டோரைக் கொன்றொழித்துள்ளது; கிராமங்கள் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. ஆயினும் சியாபாஸ் நகரில் போராளிகளுக்கும் அரசுப் படைகளுக்குமிடையே இன்னமும் போர் நீடித்து வருகிறது. அமெரிக்க வல்லரசின் ஆதரவோடு மெக்சிகோ அரசு, தற்காலிகமாக இப்போரில் வெற்றி பெறலாம். ஆனால், அமெரிக்க ஏகாதிபத்திய வாசலிலேயே இடிமுழக்கமென எழுந்துள்ள விவசாயிகளின் பேரெழுச்சியானது, அமெரிக்க கண்டத்தில் ஒரு புரட்சிப் புயலை தோற்றுவிக்கப்போவது மட்டும் நிச்சயம்!



● போராடும் மெக்சிகோ நாட்டு விவசாயப் போராளிகள் ●

### மாத்தையாவுக்கு மரணதண்டனை: புலிகள் இயக்கத்தில் பிளவு

விடுதலைப் புலிகள் இயக்கத் தளபதியாகச் செயல்பட்டு வந்த மாத்தையாவும் அவரது ஆதரவாளர்களும் புலிகளின் தலைவர் பிரபாகரன் கும்பலால் கைது செய்யப்பட்டு இரகசிய சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். மாத்தையாவுக்கு பிரபாகரன் கும்பலால் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள போதிலும் எதிர்ப்புகள் காரணமாக அது இன்னும் நிறைவேற்றப் படவில்லை என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

"புலிகள் இயக்கம் பற்றிய இரகசியங்களை இலங்கை அரசுக்கும், இந்தியப் புலனாய்வுத் துறைக்கும் மாத்தையா தெரிவித்துள்ளார். புலிகளின் உளவுப்படைத் தளபதி பொட்டு அம்மான், பேபி சுப்பிரமணியம் உட்பட 10 பேரை ரகசியமாகக் கொல்லத் திட்டமிட்டார். கிட்டுவின் வரவைப் பற்றி இந்தியப் புலனாய்வுத் துறைக்குத் தெரிவித்து, நடுக்கடலில் அவர் கொல்லப்படுவதற்குக் காரணமாக இருந்தார்" என்று மாத்தையாமீது அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளை பிரபாகரன் கும்பல் சுமத்தியுள்ளது. இதோடு, மாத்தையாவுக்கு ஆதரவு தெரிவித்ததாக யோகி, ஆண்டன் பாலசிங்கம் ஆகிய முக்கிய தலைவர்களையும் புலிகள் இயக்கத்திலிருந்து நீக்கிவிட்டதாக பிரபாகரன் அறிவித்துள்ளார். அவர்களுடன் பொதுமக்கள் யாரும் தொடர்பு வைத்துக் கொள்ளக்கூடாது என்று எச்சரிக்கை சுவரொட்டிகளை பிரபாகரன் கும்பல் யாழ் வட்டாரத்தில் ஒட்டி வைத்துள்ளது.

சக போராளி இயக்கங்களையும், இனவெறி பிடித்து சிங்கள சிவிலியன்களையும், அப்பாவி முஸ்லீம்களையும், புலிகளை விமர்சித்த யாழ் பிரமுகர்களையும் கொன்றொழித்து, ஆயிரக்கணக்கானோரை சிறையிலடைத்து சித்திரவதை செய்துவரும் புலிகளின் பாசிசத் தன்மையை நாம் அம்பலப்படுத்திய போது, புலிகளின் துதிபாடிகள் இதை துரோகிகளுக்கு எதிரான தண்டனையாகச் சித்தரித்தனர். ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து கடைசியில், தனது அமைப்பிற்குள்ளேயே தனது சகாக்களையே கைது செய்து கொன்றுவிடத் துடிக்கிறது பாசிச பிரபாகரன் கும்பல். புலிகள் இயக்கத்தினுள் கருத்து வேறுபாடோ, கோஷ்டிப் பூசல்களோ ஒரு போதும் கிடையாது என்று புலிகளின் துதிபாடிகள் காதில் பூ சுற்றி வந்தார்கள். அத்தனையும் பொய் என்று இப்போது வீதிக்கு வந்து நாறத் தொடங்கிவிட்டது.

பாசிச பிரபாகரன் கும்பலோ, மாத்தையா கும்பலோ ஈழ மக்கள் விடுதலைபெற ஒருபோதும் உதவ முடியாது. தமது அதிகாரப் பூசலுக்காக ஈழ மக்களைக் காவு கொள்ளவே அவை முயலும். இப்பாசிச கும்பல்களின் சூழ்ச்சிகளுக்குப் பலியாகாமல், அவற்றை அம்பலப்படுத்தி முறியடித்து விடுதலைப் போரை ஈழ மக்கள் முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.



● பிரபாகரனுடன் மாத்தையா நேற்றுவரை சகபோராளி! இன்று 'துரோகி!' ●



படிப்பகம்

www.padippakam.com

- காமுகர்களுக்கு வக்காலத்து
- கல்விக் கொள்ளைக்கு அனுமதி
- போலீசு அக்கிரமத்திற்கு ஆதரவு

# உச்சநீதி மன்றமே இப்படி மிச்சநீதி மன்றங்கள் எப்படி?

கர்நாடகாவிலுள்ள ஹோஸ்கோட் நகரின் தனியார் மருத்துவமனையில் செவிலியராகப் (நர்சாக) பணியாற்றும் அந்தப் பெண்ணுக்கு 21 வயது. சங்க்லேஷ்வர் நகரில் நடைபெறும் தனது சகோதரரின் திருமணத்திற்காக பெங்களூரிலிருந்து ஹசன் நோக்கிச் செல்லும் பேருந்தில் அவர் பயணித்துக் கொண்டிருந்தார். ஹசன் நகரை பேருந்து வந்தடைந்தபோது பின்னிரவாகிவிட்டது. சங்க்லேஷ்வர் செல்ல பேருந்து இல்லாததால் அவர் என்ன செய்வது என்று புரியாமல் தவித்துக் கொண்டிருந்தார்.

பேருந்து நிலையத்தில் கிருஷ்ணா, ராஜு என்ற இரு இளைஞர்கள் அவருக்குப் பரிவுடன் உதவ முன்வந்தனர். பேருந்து இல்லாததால், அருகிலுள்ள விடுதியில் இரவு தங்கிவிட்டு அதிகாலை முதல் பேருந்தில் ஊருக்குச் செல்லலாம் என்று ஆலோசனை கூறினர். தனியாக பேருந்து நிலையத்தில் தவித்துக் கொண்டிருப்பதைவிட இது மேலானது என்று கருதிய அப்பெண், அவர்களது ஆலோசனைப்படி அருகிலுள்ள விடுதியில் அன்றிரவு தங்கினார்.

அப்பெண்ணின் உறவினர்களாகக் காட்டிக் கொண்டு நள்ளிரவில் விடுதிக்கு வந்த அந்த இளைஞர்கள், அந்தப் பெண்ணை கத்தி முனையில் மிரட்டி கதறக் கதற கற்பழித்தனர். அப்பெண்ணின் அலறலைக் கேட்டு ஓடி வந்த விடுதி ஊழியர்கள் தப்பியோடிய காமுகர்களைப் பிடித்து போலிசிடம் ஒப்படைத்து சாட்சியமும் அளித்தனர். மிக அபூர்வமாக போலீசும் அக்காமுகர்களின் மீது வழக்குப் பதிவு செய்தது. 1978 ஆம் ஆண்டு இச்சம்பவம் நடந்தது.

ஈராண்டுகளுக்குப் பிறகு மாவட்ட நீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. குற்றவாளியான ராஜு என்ற இளைஞருக்கு 21 வயதுதான் ஆகிறது என்பதால் அவரது எதிர்காலம் கருதி அவரை விடுதலை செய்வதாக கோர்ட் தீர்ப்பளித்தது. மற்றொரு குற்றவாளியான கிருஷ்ணாவுக்கு 24 வயதாகிறது என்பதால், அவருக்கு 500 ரூபாய் அபராதமும், மேல்முறையீட்டுக்குச் செல்லும் வரை சிறை தண்டனையும் விதிக்கப்பட்டது. இந்த அநியாய தீர்ப்பை எதிர்த்து மகளிர் அமைப்புகள் போராடத் தொடங்கியதும் கர்நாடக அரசு, உயர்நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்து குற்றவாளிகளைத் தண்டிக்கக் கோரியது. ஈராண்டு கால விசாரணைக்குப் பின்னர் கர்நாடக உயர்நீதி மன்றம் இக்காமுகர்களுக்கு ஏழாண்டுகால கடுங்காவல் சிறை தண்டனை விதித்தது.

குற்றவாளிகள் உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தனர். 11 ஆண்டு காலத்திற்குப் பிறகு இந்த வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்ற நீதிபதிகள் குழு, தண்டனையைக் குறைத்து அயோக்கியத்தனமான தீர்ப்பை அண்மையில் வழங்கியுள்ளது. ''விடுதியில் இரவு தங்குவதற்கு உடன்பட்டதன் மூலம் அந்தப் பெண் தெரிந்தோ, தெரியாமலோ அந்த இளைஞர்களின் காம இச்சையைத் தூண்டியுள்ளார். சம்பவம் நடந்து 15 ஆண்டுகள் ஆகிவிட்டதாலும், குற்றவாளிகள் தொடர்ந்து அவமானப்படுத்தப்பட்டு மனரீதியாக பாதிக்கப்பட்டிருப்பதாலும் எதிர்கால நலன் கருதி குறைந்தபட்ச தண்டனையே போதுமானது'' என்று தண்டனையைக் குறைத்து தீர்ப்பளித்துள்ளது.

ஒரு அப்பாவிப் பெண் காமுகர்களால் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டால், காம இச்சையைத் தூண்டியதாக அப்பெண்ணும் இனி குற்றவாளியாக்கப்படுவார். நீதிமன்ற இழுத்தடிப்புகளால், 15 ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு கற்பழிப்பு வழக்கு விசாரணைக்கு வந்தால், குற்றவாளிகளுக்கு தண்டனை குறைக்கப்படும் — இதுதான் இந்தியாவின் மிக உயர்ந்த நீதிமன்றம் அளிக்கும் தீர்ப்பு!



உச்சநீதி மன்றத்திலேயே இத்தகைய படு பிற்போக்கான தீர்ப்பு வந்துள்ளபோது, நாட்டின் மிச்ச நீதிமன்றங்களில் விசாரணைக்குக் காத்திருக்கும் இது போன்ற நூற்றுக்கணக்கான கற்பழிப்பு வழக்குகளின் கதி என்னவாகும்? சமூக விரோதிகளும் ''ஆட்டோ'' சங்கர்களும் சுதந்திரமாக தெருக்களில் திரியும் போது, காமுகர்களின் தண்டனையைக் குறைத்து, பெண்களை இழிவுபடுத்தி நாட்டின் உச்சநீதி மன்றமே படுபிற்போக்கான தீர்ப்பளித்து விட்டால், இந்த நாட்டில் பெண்கள் பாதுகாப்பாக நடமாடத்தான் முடியுமா?

காமுகர்களால் பாதிக்கப்பட்ட பெண்கள் மட்டுமல்ல; இதுபோன்ற கொடுமைகள் இனியும் தொடராதிருக்க போராடி வரும் மகளிர் அமைப்புகளும், சமூகத்தின் மீது அக்கறை கொண்டோரும் இனி ஒரு முடிவு செய்ய வேண்டும் — இந்திய நீதிமன்றங்களில் நியாயமான தீர்ப்பு கிடைக்குமா என்பதைப் பற்றி.

• • •

சந்திரசேகர், உன்னிக்கிருஷ்ணன் - பள்ளித் தேர்வில் நிறைய மதிப்பெண்கள் பெற்று கடந்த ஆண்டு மருத்துவக் கல்லூரியில் சேர விண்ணப்பம் கொடுத்துவிட்டு, நேர்முகத் தேர்வுக்காக காத்திருந்த கர்நாடகத்தைச் சேர்ந்த மாணவர்கள். நேர்முகத் தேர்வு முடிந்ததும் 5 லட்ச ரூபாயை கட்டணம் மற்றும் நன்கொடையாகக் கேட்டது அத்தனியார் கல்லூரி நிர்வாகம். அரசு நிர்ணயித்த கட்டணத்தைவிட 7 மடங்கு அதிகமாகக் கேட்பதைக் கண்டு அம்மாணவர்களின் பெற்றோர்கள் அதிர்ந்து போனார்கள். அரசு மருத்துவக் கல்லூரிகளில் மந்திரிகளின் சிபாரிசு பெற்றவர்களுக்கு ஒதுக்கப்பட்டு விட்டதால், சந்திரசேகர், உன்னிகிருஷ்ணனின் பெற்றோர்கள் தனியார் மருத்துவக் கல்லூரிகளில் தமது மகனைச் சேர்த்து படிக்க வைக்க முயன்றனர். ஆனால் அங்கே உள்ள 'நன்கொடை'க் கொள்ளையைக் கண்டு கொதித்துப் போனார்கள். அரசுக் கல்லூரிகளைப் போல ஒரே சீரான கல்விக் கட்டணங்களை தனியார் கல்லூரிகளிலும் நடைமுறைப்படுத்தக் கோரி அவர்கள் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தனர். மாணவர்களின் நலன் கருதி உயர் நீதிமன்றம் சிறப்பு கோர்ட் அமைத்து புதிய கல்விக் கட்டணத்தை அறிவித்தது.

இதை ஏற்காது ஆத்திரமடைந்த மடாதிபதிகளின் பிடியிலுள்ள தனியார் கல்லூரி நிர்வாகங்கள், கல்லூரிகளை இழுத்து மூடி அச்சுறுத்தின. நுழைவுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்று தகுதி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களில் 50% பேருக்கே தமது கல்லூரிகளில் இடமளிக்க முடியும்;

www.padippakam.com

எஞ்சிய 50% இடங்களை தமது விருப்பப் படி — தகுதியற்ற மாணவர்களைக்கூட — சேர்த்துக் கொள்வோம்; கட்டணம் வசூலிப்பதில் அரசு தலையிடக் கூடாது என்று அவை கொக்கரித்தன. மாநிலத்தின் உயர்கல்வித் துறையே இதனால் நெருக்கடிக்குள் சிக்கிக் கொண்டது. பாதிக்கப்பட்ட மாணவர்கள் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப் பட்டது.

இந்த வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம் உயர் கல்வியை எட்டாக் கனியாக்கும் வகையில் படுகேவலமான தீர்ப்பை கடந்த அக்டோபர் மாதத்தில் வழங்கியுள்ளது. தனியார் கல்லூரிகள் தமது விருப்பப்படி 50% இடங்களைப் பூர்த்தி செய்து கொள்வதைத் தடுத்துள்ள போதிலும், மருத்துவக் கல்விக்கு 1.4 லட்ச ரூபாய், பல் மருத்துவக் கல்விக்கு 90,000 ரூபாய், தொழிற் கல்விக்கு 25,000 ரூபாய் என புதிய கட்டணங்களை நிர்ணயித்துள்ளது. இதுதவிர முந்தைய தீர்ப்பை வளைத்து தனியார் கல்லூரிகள் 15% இடங்களை தமது விருப்பம் போல் வெளிநாட்டு மாணவர்களுக்காக ஒதுக்கலாம் எனவும் புதிய தீர்ப்பளித்துள்ளது.

தமது மகனை மருத்துவராக்க, பொறியியலாளராக்க கனவு கண்ட ஆயிரக்கணக்கான பெற்றோர்கள் நொறுங்கிப் போனார்கள். இனி லட்சாதிபதிகள் மட்டுமே உயர்கல்வி கற்க முடியும் என்பதை அறிந்தபோது அவர்களது நெஞ்சம் விம்மியது. கல்வி வியாபாரக் கொள்ளையைத் தடுத்து நிறுத்தி, நியாயமானதொரு தீர்ப்பை உச்ச நீதிமன்றம் வழங்கும் என்று கருதிய அவர்களது நம்பிக்கை சிதைந்து போனது.

தகுதியும் மதிப்பெண்களும் இருந்தாலும் இலட்சக்கணக்கில் செலவு செய்து மருத்துவக் கல்வி பயில இனி சந்திரசேகர், உன்னிகிருஷ்ணன்களால் முடியாது. நடுத்தர வர்க்கத்தினர் உயர்கல்வி எனும் கொம்புத் தேனுக்கு ஆசைப்படக் கூடாது என்று உச்ச நீதிமன்றமே தீர்ப்பளிக்கும் போது, அவர்கள் என்ன செய்ய முடியும்? கல்வி வியாபாரக் கொள்ளையைத் தடுத்து நிறுத்த வேண்டிய உச்ச நீதிமன்றமே அதற்கு உடந்தையாக நின்றால், இந்நாட்டின் கல்வித் தரம் என்னவாகும்?

சந்திரசேகர், உன்னிகிருஷ்ணன்கள் மட்டுமல்ல; நாடு முழுவதுமுள்ள நடுத்தர வர்க்கத்தினரும், மாணவர்களும், கல்வியாளர்களும் இனி ஒரு முடிவு செய்ய வேண்டும் — இந்திய நீதிமன்றங்களில் நியாயமான தீர்ப்பு கிடைக்குமா என்பதைப் பற்றி.

●●●

ராஜன் - கேரளாவின் கள்ளிக் கோட்டை பொறியியற் கல்லூரி மாணவர். நக்சல்பாரி புரட்சிகர இயக்கத்தின் ஆதரவாளர். 1976 ஆம் ஆண்டு, பாசிச இந்திராவின் அவசரநிலைக் கொடுங் கோலாட்சி நிலவிய காலம். நக்சல்பாரி புரட்சியாளர்களும் ஜனநாயக சக்திகளும் நரவேட்டையாடப்பட்ட காலம். 1976 மார்ச் முதல் நாளன்று ராஜனை போலீசு வெறிநாய்கள் இழுத்துச் சென்றன. மலைப்பகுதியில் இருந்த காகயம் சித்திரவதை முகாமில் ராஜனையும் மற்றும் சில தோழர்களையும் மிருகத்தனமான அடித்து, வதைத்தது. அதில் மாண்டு போன ராஜனின் பிணத்தை, பீச்சி அணைக்கட்டில் வீசியெறிந்தன. ராஜனைப் போலீசு வெறிநாய்கள் கவ்விக் கொண்டு போன செய்தியறிந்து பதறிப்போன அவரது தந்தை ஈச்சர வாரியார், அப்போது முதல்வராய் இருந்த அச்சுதமேனன், போலீசு மந்திரியாக இருந்த கருணாகரன், போலீசுத் துறை செயலாளர் ஆகியோரை மாறிமாறிப் பார்த்து தனது மகனை விடுவிக்க மன்றாடினார்.

கேரள உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார். ராஜனைக் கொலை செய்து விட்ட பிறகு அவர்களால் எப்படி முன்னிலைப்படுத்த முடியும்? ராஜனை கைது செய்யவேயில்லை என்று சட்டமன்றத்திலேயே அப்பட்டமாகப் புளுகிய கருணாகரன், சில போலீசு அதிகாரிகளை தற்காலிக நீக்கம் செய்து சமாளிக்க முயன்றார். கொலையை மறைக்க முயன்ற கருணாகரனுக்கு எதிராக கேரளாவெங்கும் போராட்டங்கள் வெடித்தன. பீதியடைந்த கருணாகரன் பதவி விலகி அந்தோணியை முதல்வராக்கினார். மக்களது போராட்ட நிர்பந்தம் காரணமாக, ராஜனைக் கொன்ற பாசிச மிருகங்களான டி.ஐ.ஜி.க்கள் ஜெயராம் படிக்கல், மதுசூதனன்; குப்பிரண்டுகளான லட்சுமணா, முரளி கிருஷ்ணதாஸ்; இன்ஸ்பெக்டர்கள் நம்பியார், புலிகோடன் நாராயணன் ஆகியோரை கேரள அரசு கைது செய்தது.




பெண்களை அவமானப்படுத்தி தீர்ப்பளித்த நீதிமன்றங்களுக்கு எதிராக மகளிர் அமைப்பினர் நடத்தும் ஆர்ப்பாட்டம்.

> கர்நாடகா செவிலிப் பெண் கற்பழிப்பு வழக்கை விசாரித்த உச்சநீதிமன்ற நீதிபதிகள் குழு, காமுகர்கள் மனரீதியாக புண்படுவார்கள் என மனமிரங்கி தண்டனையைக் குறைத்தும் பாதிக்கப்பட்ட பெண்ணை விபச்சாரி என முத்திரை குத்தியும் அயோக்கியத்தனமாக தீர்ப்புரைத்துள்ளது.

'காவலில்' உள்ள ராஜனை விடுவிப்பதாக அவர்களும் எழுத்துப்பூர்வமாக வாக்களித்தனர். ஆனால், ராஜனைப் போலீசு விடுவிக்கவில்லை.

நம்பிக்கையிழந்த வாரியார் தனது மகனை கோர்ட்டில் முன்னிலைப்படுத்துமாறு 1977 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் கேரள மாநில வழக்கு மன்றங்கள் மீது நம்பிக்கையில்லை என்று கோவைக்கு வழக்கை மாற்றும்படி செய்தனர், போலீசு அதிகாரிகள். அவர்கள் எதிர்பார்த்தபடியே, ஜெயராம் படிக்கல், நம்பியார், முரளி கிருஷ்ணதாஸ் ஆகியோருக்கு மட்டும் ஓராண்டு, 6 மாதம் என கண்துடைப்பாக நீதிமன்றம் சிறை தண்டனை விதித்தது. மற்றவர்களை கோவை நீதிமன்றம் விடுதலை செய்தது. போலீசு அதிகாரிகள் மேல்முறையீடு செய்யவே, மேற்படி தண்டனையை 1982 ஆம் ஆண்டு சென்னை உயர்நீதி மன்றம் ரத்து செய்து தீர்ப்பளித்தது.

வழக்கு மன்றங்களே வெட்கித் தலைகுனிய வேண்டிய வகையில் தீர்ப்பு வந்தபோதிலும், நீதியினை நிலைநாட்டுவதில் உறுதியும் நம்பிக்கையும் இழக்காத ஈச்சர வாரியார் தனது போராட்டத்தைத் தொடர்ந்தார். 1982 ஆம் ஆண்டிலேயே உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்

படிப்பகம்

www.padippakam.com

தார். எட்டாண்டுகளுக்குப் பிறகுதான் ராஜன் கொலை வழக்கு விசாரணைக்கு வந்தது. ராஜன் கொலை விவகாரத்தைத் தேர்தலுக்குப் பயன்படுத்தி ஆட்சியைப் பிடித்த போலிக் கம்யூனிஸ்டுகள், போலீசுக் குற்றவாளிகளைத் தண்டிப்பதற்காக மேல் முறையீடு செய்யவில்லை. அதே சமயம் அந்த அதிகாரிகளுக்குப் பதவி உயர்வு அளித்தனர். ராஜன் கொலைக்கு நட்டாடு வழங்குமாறு கள்ளிக்கோட்டை வழக்குமன்றம் தீர்ப்பளித்த போதிலும், போலிக் கம்யூனிஸ்டுகளின் அரசு அதை நிறைவேற்றவில்லை.

1977-லிருந்து 1993 வரை பதினாறு ஆண்டுகள், தனது ஒரே மகனான ராஜனைப் பறிகொடுத்துவிட்ட துயரம். அதனால் சித்தப்பிரமை பிடித்துப்போன மனைவி, தள்ளாத 70 வயது முதுமை — இத்தனையும் சுமந்து கொண்டு நாட்டின் பல வழக்குமன்றப் படிக்கட்டுகளில் ஏறி இறங்கி நீதிக்காக அலைந்தார் ஈச்சர வாரியார். 16 ஆண்டுகாலம் என்பது மிகவும் உறுதியானவர்களின் நம்பிக்கையைக் கூட எளிதில் தகர்த்துவிடக் கூடும். ஆனால் ஓய்வு பெற்ற இந்திப் பேராசிரியரான ஈச்சரவாரியார் தளர்ந்துவிடவில்லை. நாட்டின் மிக உயர்ந்த உச்ச நீதிமன்றத்திலாவது நியாயமான தீர்ப்பு கிடைக்கும்; குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள் என்று நம்பிக்கையோடு காத்திருந்தார்.

ஆனால் அவரது நம்பிக்கையில் பேரிடி விழுந்தது. ராஜன் கொலை வழக்கை மூன்றாண்டுகளாக விசாரித்த உச்ச நீதிமன்றம், கடந்த அக்டோபரில் கொலைகாரர்களான போலீசு மிருகங்களைக் குற்றமற்றவர்கள் என விடுதலை செய்துள்ளது.

''இதுதான் நீதி என்பதை நான் ஏற்கத் தயாராக இல்லை. எனது நீண்ட போராட்டம் இப்படியொரு முடிவை எட்டும் என்று கனவிலும் நம்பவில்லை. உச்ச நீதிமன்றத்துக்கு மேலானது எதுவுமில்லை எனும்போது நான் வேறென்ன செய்ய முடியும்? எனது நீண்ட போராட்டத்தில் எனக்கு வெற்றி கிட்டாமல் போயிருக்கலாம். ஆனால் எனது போராட்டம் பலனற்றதாக நான் கருதவில்லை. போலீசின் கொடுமைகளுக்கு எதிராக அது மக்களை விழிப்படையச் செய்துள்ளதை எண்ணி பெருமைப்படுகிறேன்!'' என்று வேதனையோடு கூறுகிறார் ஈச்சரவாரியார்.

நாட்டின் உச்ச நீதிமன்றமே போலீசுக் கொலைகாரர்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பளித்துவிட்ட பிறகு, முதியவரான ஈச்சர வாரியாரால் வேறென்ன செய்ய முடியும்? நாட்டின் மிச்ச நீதிமன்றங்களில் இது போன்ற நூற்றுக்கணக்கான போலீசு சித்திரவதை - கொலை வழக்குகளின் கதி என்னவாகும்?



**ஈச்சர வாரியார், சளிக்காது போராடியும் உச்சநீதி மன்றத்திலும் நீதி கிடைக்கவில்லை**

அன்பு மகனைப் பறிகொடுத்து, நீதியும் கிடைக்காமல் வேதனைப்படும் ஈச்சர வாரியார் மட்டுமல்ல; இதுபோன்ற கொடுமைகள் இனியும் தொடராதிருக்க போராடி வரும் மனித உரிமை இயக்கங்களும், வழக்கறிஞர்களும் இனி ஒரு முடிவு செய்ய வேண்டும் — இந்திய நீதிமன்றங்களில் நியாயமான தீர்ப்பு கிடைக்குமா என்பதைப் பற்றி.

● ● ●

ஈச்சர வாரியார்களும், இந்நாட்டின் குடிமக்களும் மறந்து போயிருக்கலாம், கணக்கற்ற வழக்குகளில் இந்திய நீதிமன்றங்கள் படுபிற்போக்கான, அநீதியான தீர்ப்புகளையே வழங்கியுள்ளன. பிரபலமான சில வழக்குகளின் தீர்ப்புகளே இதை நிருபிப்பதற்கான சாட்சியங்களாக உள்ளன.

O அயோத்தி பாபர் மசூதி வளாகத்தில் அடையாள கரசேவைதான் செய்யப் போகிறோம் என்று இந்துவெறி பாசிஸ்டுகள் அளித்த வாக்குறுதியை ஏற்று, அங்கு ஆயிரக்கணக்கில் அவர்கள் அணிதிரளவும் மசூதியை இடிக்கவும் மறைமுகமாக உதவி செய்து தீர்ப்பளித்தது, இந்திய உச்சநீதி மன்றம்.

> **கணக்கற்ற வழக்குகளில் இந்திய நீதிமன்றங்கள் படுபிற்போக்கான, அநீதியான தீர்ப்புகளையே வழங்கியுள்ளன. தனிப்பட்ட நீதிபதிகளிடம் உள்ள பிரச்சினையல்ல; அனைத்து நீதிமன்றங்களிலும் உழைக்கும் மக்களுக்கும் நேர்வது இதுதான். எனவே, இந்த 'கோர்ட்டு'களின் மீது இனிமேலும் இந்திய மக்கள் நம்பிக்கை வைக்க முடியாது.**

O போபாலில் ஆயிரக்கணக்கான இந்திய ஏழை மக்கள் மடியவும், தலைமுறை தலைமுறையாக ஊனமுறவும் காரணமான விஷவாயுப் படுகொலைக்காரர்களை சொற்ப அபராதத்தோடு தப்பிவிடவும், அவர்கள் மீது கிரிமினல் வழக்கு போட முடியாமல் தடுக்கவும், பாதுகாப்பாக தப்பிச் செல்லவும் உடந்தையாகச் செயல்பட்டது, இந்திய உச்சநீதி மன்றம்.

O பாசிச இந்திராவின் தேர்தல் வழக்கிலே அலகாபாத் உயர்நீதி மன்றத் தீர்ப்புக்கு இடைக்காலத் தடைவிதித்தும், பிறகு வழக்கை தள்ளுடி செய்தும் பாசிச ஆட்சியைக் கொண்டுவர உச்சநீதி மன்றம் உறுதுணையாக நின்றது.

O அவசர நிலைப் பாசிச ஆட்சியின் போது, நடைபாதை வாசிகளுக்கு வாழ்விட உரிமையை அரசு உத்திரவாதம் செய்ய வேண்டியதில்லை; அவர்களுடைய குடிசைகளை இடித்துத் தள்ளுங்கள் என்று உச்சநீதி மன்றமே உத்திரவிட்டது. ''மிசா'' சட்டத்தின்கீழ் விசாரணையின்றி கைதிகளை சிறையிலடைக்கவும், சுட்டுக் கொல்லவும் அரசுக்கு உரிமை உண்டு என்று தீர்ப்பளித்தது. விசாரணையின்றி அரசு ஊழியர்களை வேலை நீக்கம் செய்ய அரசுக்கு உரிமை உண்டு என்று நியாயப்படுத்தியது.

O பாசிச ராஜீவின் கூட்டாளியாக இருந்த தரகுப் பெருமுதலாளியான அம்பாணி, சட்டவிரோதமான வழிகளில் ஆலைகளைக் கைப்பற்றுவது சம்பந்தமான வழக்கில், விடுமுறை நாளில், நீதிபதியின் வீட்டிலேயே, அரைமணி நேரத்தில் விசாரித்து அம்பாணிக்குச் சாதகமான தீர்ப்பளித்தது, உச்சநீதி மன்றம்.

—இப்படி ஏராளமான - கணக்கற்ற வழக்குகளை அடுக்கிக் கொண்டே போகலாம். ஆகவே எப்படிப் பார்த்தாலும் இந்தியக் கோர்ட்டுகளில் நீதி கிடைக்கவே கிடைக்காது. இந்தக கோர்ட்டுகளின் நீதிமுறைகள் அநீதியானவை; மக்களுக்கு எதிரானவை. எனவே இந்தக் கோர்ட்டுகளின் மீது இனிமேலும் இந்திய மக்கள் நம்பிக்கை வைக்க முடியாது.

இந்திய நீதிமன்றங்களின் வஞ்சகமான, அநீதியான தீர்ப்புகளால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் மட்டுமல்ல; இந்தியாவின் கோடிக்கணக்கான உழைக்கும் மக்களும் இனி ஒரு முடிவு செய்ய வேண்டும் — இந்திய நீதிமன்றங்களில் நியாயமான தீர்ப்பு கிடைக்குமா என்பதைப் பற்றி அல்ல; இத்தகைய கேடுகெட்ட நீதிமன்றங்களை வீழ்த்தி, புதிய முறையிலான மக்கள் நீதிமன்றங்களை நிறுவிக் கொள்ள ஒரு புரட்சிக்கு அணிதிரள வேண்டிய அவசியம் பற்றி.

O பழநி

www.padippakam.com

# ஆர்.எஸ்.எஸ். வகுப்புவாதங்கள்

''ஆர்.எஸ்.எஸ்.-இன் பார்ப்பன - பாசிச பாரம்பரியம்'' என்கிற தொடர் கடந்த சில இதழ்களாக இடம்பெறவில்லை. வேறுசில முக்கியமான கட்டுரைகள் இடம்பெற வேண்டியது அவசியமாக இருந்ததால் பு.ஜ. இதழ்களில் ஏற்பட்ட இடப்பற்றாக்குறை, கட்டுரை ஆசிரியரின் வேறு பிற பணிகள்தாம் இதற்குக் காரணங்களாக அமைந்தன. இந்த இதழில் வெளிவரும் பகுதியுடன் இத்தொடர் நிறைவுபெறுகிறது. ஆர்.எஸ்.எஸ். - பரிவாரங்கள் தமது இந்துமத வெறி பாசிச நச்சுக் கருத்துக்களைப் பரப்புவதற்காக முன்வைக்கும் வாதங்கள், தத்துவங்கள் இந்த இறுதிப் பகுதியில் அடங்கும். இத்தொடர் எழுதுவதற்கு பெரிதும் உதவியாக இருந்தது, ''காவிக் கொடியும் காக்கிக் கால்சாராயும்'' என்கிற நூலாகும் என்பதைக் குறிப்பிட வேண்டும்.

இந்து மதவெறி பாசிச ஆர்.எஸ்.எஸ். அதன் துவக்க காலத்தில் இருந்து பல ஆண்டுகள் மைய, உள்ளூர் அளவில் தலைமையையும் அணியையும் கட்டும் வேலையில்தான் ஈடுபட்டிருந்தது. அதனால் அது அப்பட்டமான, வறட்டுத்தனமான ''இந்து ராஷ்டிரம்'' என்கிற வகுப்புவாதத்தை முன்வைத்துப் பிரச்சாரம் செய்து வந்தது. அது இப்போது ''இந்துத்துவா'' என்கிற பெயரில் தரும் கவர்ச்சிகரமான, சற்று தாராளமயமான வியாக்கியானத்தைக் கொண்டிருக்கவில்லை. இன்றைய ''இந்துத்துவம்'' தேன் கலந்த நஞ்சாக இருக்கிறது.

இப்போது, ஆட்சியைப் பிடிப்பதற்கு ஒரு இந்து ஓட்டு வங்கியை உருவாக்கிக் கொள்வதோடு, பரந்த மக்கள் ஆதரவையும் திரட்ட வேண்டியுள்ளது. எல்லாவகை இந்துமதப் பிரிவுகளையும் அரவணைத்துக் கொள்ள வேண்டியுள்ளது. பார்ப்பனிய சனாதன வருணாசிரம சாதி ஆதிக்கத்துக்கு இலக்காகி இருக்கும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களையும் பெண்களையும் ஈர்க்க வேண்டியிருக்கிறது.

சுருக்கமாகச் சொன்னால் இப்போது மக்கள் திரள் வகுப்புவாதத்துக்கு ஏற்ப இந்துத்துவத்துக்கு வியாக்கியானம் தர வேண்டியுள்ளது. கடந்த 10, 15 ஆண்டுகளில் ஆர்.எஸ்.எஸ். குடும்பத்தில் ஏற்பட்ட தலைமையும், அமைப்புகளும் இதைச் சாதித்துள்ளன.

● ○ ●

சித்தாந்த ரீதியில் இந்துத்துவத்துக்கு பெருஞ் சவாலாக, இடைஞ்சலாக இருப்பது இஸ்லாத்தைவிட கம்யூனிசம்தான். ஏனென்றால் சமூக முரண்பாடுகள், ஏற்றதாழ்வுகள், சுரண்டல் - ஒடுக்கு முறைக்கு ஒரு உருப்படியான சமூகப் - பெருளாதார மாற்றுத் தீர்வை ஆர்.எஸ்.எஸ். கும்பல் உருவாக்க முடியவில்லை. அதன் ''ஒருங்கிணைந்த மனிதத்துவம்'' வெறும் வார்த்தை ஜாலம்தானே தவிர முதலாளித்துவ சமூக - பொருளாதார உறவுகளுக்கு எதிரானதல்ல. ஆனால் ருசியா மற்றும் பிற கிழக்கு ஐரோப்பாவிலும், நேரு-இந்திரா பரம்பரையாலும் கொண்டு வரப்பட்ட போலி சோசலித்தின் வீழ்ச்சி காரணமாக ஆர்.எஸ்.எஸ். கும்பல் தனது ''ஒருங்கிணைந்த மனிதத்துவம்''தான் சரியானது என்று பீற்றிக் கொள்கிறது.

சோசலிசம் பொருளியல் நலன்களை மட்டுமே நாடக்கூடியது என்று கொச்சைப் படுத்துவதோடு, அது வரலாற்று ரீதியில் தோற்றுப்போய்விட்ட அமைப்பு என்றும் திடலடியாக பிரச்சாரம் செய்கிறது, ஆர்.எஸ்.எஸ். கும்பல். முதலாளித்துவம் கூட பொருளியல் நலன்களும் போட்டிகளும் நிறைந்தது என்று நிராகரிப்பதாக நடிக்கும் அதேசமயம், அதன் பொருளாதார உறவுகள், சமூக - அரசியல் அமைப்புகள், நிறுவனங்களை அக்கும்பல் நிராகரிப்பதில்லை, ஏற்றுக்கொள்கிறது.

வரைமுறையற்ற நுகர்வு-பயன்பாடு காரணமாக இயற்கை மூலாதாரங்கள் அழிந்து வருவது பற்றி உபாத்தியாயாவின் ''ஒருங்கிணைந்த மனித''த்தில் சிறிது குறிப்பிடப்படுகிறது. ஆனால் இப்போதைய ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தவாதிகள் மேலைநாடுகளின் விஞ்ஞானிகள் இயற்கையை வெல்ல வேண்டும் என்கிற பேராசை, இயற்கைக்குக் கேடு விளைவிக்கும் தீயகுணம் ஆகியவைதான் சுற்றுச் சூழலைக் கெடுகிறது என்று விளக்கம் தருகிறார்கள்: முதலாளித்துவத்தின் சந்தை-நுகர்வுப் பொருளர்தாரத்தையும் சுற்றுச்சூழல் பிரச்சினையையும் இப்படிப் பிரிப்பதன்மூலம் நுகர்வுப் பேராசை, வாய்ப்புகளால் மேலாதிக்க வல்லரசுகள் உருவாக்கி வரும் உலகமயமாக்கும் நகர்புற சந்தைப் பொருளாதாரத்தை இந்துத்துவம் வரவேற்று நியாயப் படுத்துகிறது. மேலை நாடுகளின் விஞ்ஞானிகளிடம் இருந்து நாம் கற்றுக் கொள்ள முடியும் என்று பழைய ''ஒருங்கிணைந்த மனிதம்'' ஏற்றுக் கொள்ளுகிறது. ஆனால் இன்றைய ஆர்.எஸ்.எஸ். கும்பல் இந்து சமூக, பெளதீக, மனித இயல் அறிவியலைத்தான் மேலைநாட்டு விஞ்ஞானிகள் கண்டுபிடிக்கிறார்கள் என்று நிருபிக்கப் பிரயத்தனப்படுகிறது.

● ○ ●

சோசலிசம், முதலாளித்துவம் இரண்டுமே இந்த நாட்டுக்குப் பொருத்தமற்றவை என்று நிராகரித்து இட்லரின் தேசிய சோசலிசம் போன்று மூன்றாவது பாதையைப் பற்றி ஆர்.எஸ்.எஸ். கும்பல் பொதுவில் பேசி வருகிறது. மேலை முதலாளித்துவத்தின் மீதான அதன் விமர்சனம் எல்லாம் ஒரு இந்து சமூக ஒழுங்கமைப்புக்கு பொருத்தமான முறையில்தான் உள்ளன. இந்த மாற்று சமூக அமைப்பானது வரலாற்று அனுபவரீதியில் சரியானதென நிரூபிக்கப்பட்டதாக ஆர்.எஸ்.எஸ். கும்பல் சாதிக்க முயலுகிறது. ஆனால் வரலாற்று ரீதியிலான இந்து சமூக் அமைப்பு என்பது பார்ப்பன சனாதன வருணாசிரம - சாதி அமைப்புதான். அதை மூடிமறைப்பதற்காக, இசுலாமிய - கிறித்துவ மதப் பண்பாடுகள் தவிர மற்ற பிற சாதி, மதப்பிரிவினரிடையே காணப்பட்ட முற்றிலும் முரண்பாடான, எதிரெதிரான சமூக மதிப்பீடுகளைத் தாறுமாறாகத் தொகுத்து, இதுதான் ''இந்து வரலாறு'' என்று காட்ட முயலுகிறது.

ஆர்.எஸ்.எஸ். கும்பலைப் பொருத்தவரை இந்திய வரலாறு ''ஆதாரபூர்வமாக'' கூறுவது துருக்கியர்களின் படையெடுப்புக்குப் பிந்திய காலத்தில் இருந்து தொடங்குகிறது. அதுவும் அக்கும்பலால் திரித்துக் கூறப்படுகிறது. அதற்கு முந்திய இந்து வரலாறு என்பதோ முற்றிலும் கற்பனையானதும், வேத-இதிகாச-புராண அடிப்படையிலானதும்தான். முஸ்லீம் வருகைக்கு முன்பு இங்கு மாறாத தொடர்ச்சியுள்ள, வேறுபாடுகளற்ற ''ராம ராஜ்ஜியமே'' நிலவியதாக சித்தரிப்படுகிறது. இடையே பெளத்த அரசுகளின் ஒரு குறுகிய காலத்தில்தான் இந்துக் கோவில்களும், இந்து வீர மரபுகளும் புறக்கணிக்கப்பட்டதாக அக்கும்பல் கூறுகிறது.

இந்திய வரலாறு குறித்து பல தொகுதி நூல்கள் வெளியிடப் போவதாக ஆர்.எஸ்.எஸ். திட்டமிட்டுள்ளது. ஆனால் பெளத்த காலம் குறித்த தொகுதிக்கான வேலைதான் தொடங்கியுள்ளது. பெளத்தம் இந்துமதத்தின் ஒரு பகுதிதான் என்று அக்கும்பல் கூறிக்கொண்டாலும் பழம் ''இந்து தேசிய''த்தை சீரழித்ததாக பெளத்தகால வரலாறு பற்றி விமர்சிக்கிறது. பார்ப்பனிய ஆதிக்கம், பேரரசுப் பேராசை ஆகியவற்றுக்கு எதிரானது என்பதால் பெளத்தம் மறைமுகமாகக் கண்டிக்கப்பட்டு, நமது நாட்டில் அது அழிந்து போனதை ஆர்.எஸ்.எஸ். கும்



படிப்பகம்

www.padippakam.com

பல் வரவேற்கிறது. யுத்தவெறி - வீராவேசம் இன்றியமையாத, முற்றும் முழுதுமான இந்துப் பண்பு என்று போற்றுவதோடு, அதைமாற்றவோ, கைவிடவோ கூடாதென வாதிடுகிறது.

இந்து தத்துவத்தின் மூலக்கூறு அமைதியும் சகிப்புத் தன்மையும்; உலகின் மற்ற மதங்களில் இருந்து மாறுபாடான பண்புகள் — இவைதாம் எனப் பீற்றிக் கொள்கிறது. அதேசமயம், யுத்த கீர்த்தி - போர்ப் புகழ்தான் இந்து வரலாற்றின் போற்றிப் பின்பற்றுதற்குரிய நற்பண்பென்றும் போதிக்கிறது. காளி முதல் கணேசன் வரை இந்துக் கடவுள்கள் மூர்க்கமாகப் போரிடும் வடிவங்களிலேயே ஆர்.எஸ்.எஸ். சுவரொட்டிகளில் காணப்படுகிறார்கள். ஒருபுறம் சகிப்புத்தன்மையின் அதி உயர் மேன்மைபற்றிப் பெருமையடிப்பது; மறுபுறம் அதன் இன்றைய பயங்கரவாதத் தேவைக்கேற்ப வன்முறை வெறிக்கான தயாரிப்பு — ஆக இரட்டை வேடம் போடுகிறது.

''இரத்தம் சிந்துவதாக இருந்தால் இப்போதே நடக்கட்டும், கடைசியாகவும் இருக்கட்டும்'' என்று ''சாத்வி'' ரிதம்பரா கரசேவையின்போது கூச்சலிட்டார். மீரட், மலியானா, பாகல்பூர், அகமதாபாத், காசி, கான்பூர் என்று மதவெறிப் படுகொலையால் இரத்தம் குடித்தது போதாது என்று கத்துகிறது அந்தக் காவி உடைக் காட்டேரி. ''இந்துவே, வெகுண்டெழு!. ஆம், ஏன் கூடாது? இந்துக்கள் ஏன் பயந்து ஒளிய வேண்டும்!'' என்று தலைப்பில் ஆர்.எஸ்.எஸ். ஒரு புத்தகமே வெளியிட்டுள்ளது. ''இரத்த தாகமெடுத்த யுத்த தேவதை சந்து பொந்துகளில் அலைகிறாள்'' என்று குர்ஜாவில் இருந்து வெளியிடப்பட்ட இந்து போராட்ட முன்னணியின் பிரசுரம் முஸ்லீம் ரத்தம் ''குடிப்பது'' ஒரு தெய்வீகச் செயல் என வெறியூட்டுகிறது.

இவ்வாறு ஆத்திரமும், வெறியும், அராஜகமும் நிரம்பிய இந்துவை உருவாக்கும் நடைமுறை ஒருபுறம் இருக்கும் அதேசமயம் அமைதி, சகிப்புத்தன்மை, ''உண்மையான மதச் சார்பின்மை பற்றி மறுபுறம் இந்துவத்துவ போதனையும் நடக்கிறது. ''ஏன் இந்து ராஷ்டிரம்?'' என்னும் வி.இ.ப. புத்தகத்தில் மற்றபிற மத நம்பிக்கைகளுக்கு இந்து ராஷ்டிரம் அதிகபட்சம் பாதுகாப்பு அளிக்கும் என்கிறார்கள். இந்து ராஷ்டிரம் என்பதற்கான விளக்கத்துள்ளாகவே மதச்சார்பின்மை ஆடங்கி இருக்கிறது என்று விவரிக்கிறார்கள்.

''முஸ்லீம்களிலும் மாண்புடையவர்கள் உள்ளனர்; அவர்களுக்கென சொந்தப் பண்பாடும் உண்டு. ஆகவே அவர்களை நாங்கள் மதிக்கிறோம், நேசிக்கிறோம்'' என்று அவ்வப்போது ஆர்.எஸ்.எஸ். கும்பலில் சிலர் கூறுகின்றனர்; ''யூத - அரபு இன மதங்களைப் போல கடவுள் நமக்கு வெளியே இருப்பதாக நாம் கருதவில்லை; நமக்குள்ளாகவே இருக்கிறார், வெளியே குறுக்கீடு செய்யாது, உள்ளுக்குள்ளேயே உய்த்து உணரும் மெய்ஞ்ஞானத்தையே இந்து மதம் போதிக்கிறது. ஆகவே சகிப்புத் தன்மை இதன் உட்கூறு'' என தத்துவ ரீதியாக வியாக்கியானம் செய்கிறார்கள்.

அன்பும் சகிப்புத் தன்மையும் இந்து மதத்தின் சிறப்பம்சம் என்று பெருமையடித்துக் கொள்ளும் அதே சமயம், அதன் காரணமாகவே மற்ற பிற மதங்களுக்கு மேலே இந்து மதத்தை வைத்து, அவற்றைச் சிறுமைப்படுத்துகின்றனர். ''அம்மதங்களில் அன்பு இல்லையாதலால் அவை சகிப்புத் தன்மையற்றவை, விரிவாக்க மற்றும் வன்முறை தன்மை கொண்டவை'' என்று சித்தரிக்கின்றனர். இதில் இருந்து பல புளுகு மூட்டைகளை அவிழ்த்து விடுகின்றனர். சகிப்புத் தன்மை இல்லாத மதவெறிப் பிடித்தவர் என முஸ்லீம் மதத்தினரைச் சித்தரித்து அதற்கு மாறாக சகிப்புத்தன்மை உள்ள இந்துவை நிறுத்துகின்றனர்; இதை நிருபிப்பதற்காக முஸ்லீம் மதத்தில் இல்லாத, நிருபிக்கப்படாத ஆதாரங்களைத் தான் தோன்றித்தனமாகவும் பொய்யாகவும் புணைந்துரைக்கின்றனர்.

● ○ ●

முஸ்லீம் மதவெறி அரசாக மாறிவிடும்; பிறகு மற்ற பிற மதநம்பிக்கைகளை வேரோடு பிடுங்கி எறிந்துவிடும் என்று பயமுறுத்தலும் எச்சரிக்கையும் விடுகிறது, ஆர்.எஸ்.எஸ். கும்பல்.

இது மூன்று வழிகளில் நடக்கும் என்று அக்கும்பல் கூறுகிறது. அவை, முஸ்லீம்கள் இயல்பிலேயே அடக்க முடியாத, மூர்க்கத்தனமான காமுர்களாக இருப்பதால் இந்துப் பெண்களைக் கற்பழித்து, இந்துக்களின் கருப்பைகளை கட்டாயமாக நிரப்பி, முஸ்லீம்களைப் பிரசவிக்கும்படி செய்வார்கள்; முஸ்லீம்களுக்குப் பலதாரமுறை சட்டபூர்வமாக அனுமதிக்கப்படுவதால், அவர்கள் வதவதவென்று குழந்தைகளைப் பெற்றுத் தள்ளுகிறார்கள்; எனவே இப்போது இருக்கும் இந்துப் பெரும்பான்மை தற்காலிகமானது, இந்நிலைமாறி விரைவில் முஸ்லீம்கள் பெரும்பான்மையாகி விடுவார்கள்; கூடவே வங்கதேச அகதிகள் ஊடுருவலும் நடக்கிறது. அரபு நாடுகளில் இருந்து பணமும், பாகிஸ்தான் ஆக்கிரமிப்பும் சேர்ந்து இந்த நாட்டை இசுலாமிய நாடாக்கி விடுவார்கள். இப்படி ஆர்.எஸ்.எஸ். கும்பல் தொடர்ந்து பிரச்சாரம் செய்கிறது.

ஆர்.எஸ்.எஸ். கும்பலின் மற்றபிற திட்டம், கொள்கைகளை ஏற்காத, படித்த நகர்ப்புற நடுத்தர வர்க்கத்தினர் கூட மேற்



இந்து ராஷ்டிரத்தின் கீழ் எல்லா மதப்பிரிவுகளும் நம்பிக்கைகளும் பாதுகாப்பாக இருக்க முடியும்; ஆனால் முஸ்லீம் பெரும்பான்மையாக உள்ள இந்தியா அல்லது முஸ்லீம் ஆதரவு பெற்ற அரசானது இந்துக்களை மதம் மாறச் செய்யும்; இதனால் இந்திய அரசே

கண்ட புளுகை நம்புகின்றனர். ஆனால் இந்துப் பெண்கள் கும்பல் கற்பழிப்புக்கு உள்ளாவதாகவோ, முஸ்லீம் மக்கள் தொகை மட்டுமே அதிகரிக்கப்படுவதாகவோ, இந்திய அரசப் போரின்றி வங்க தேச அகதிகள் திட்டமிட்டு ஊடுருவுவதாகவே வரலாறு பூர்வமான, அறிவியல்



படிப்பகம்

www.padippakam.com

பூர்வமான ஆதாரங்கள் எதுவுமே கிடையாது. உண்மையில் அக்கும்பலின் நோக்கம், தற்போதைய ''மதச்சார்பற்ற அமைப்பு - அரசு'' ஒரு இந்து ராஷ்டிரமாக மாற வேண்டும் என்பதுதான். மற்ற எல்லா மதத்தினரையும் விரட்டுவது அல்லது அடிமைப்படுத்துவதன் மூலம் இந்து சகிப்புத் தன்மையின் உயர்வை, மேன்மையை நிலைநாட்டுவதுதான்.

இந்துமதம் பன்முகத் தன்மையுடையது என்று பீற்றிக் கொள்வதையே காரணமாக வைத்து இசுலாமிய மதம் சகிப்புத்தன்மையற்றதாக சித்தரித்து அதை ஒழிக்க வேண்டும் என ஆர்.எஸ்.எஸ் கும்பல் போதிக்கிறது. பௌத்த, சீக்கிய மதங்களைப் போல இஸ்லாம் உள்நாட்டில் தோன்றியதல்ல; எனவே முஸ்லீம்கள் அந்நிய விசுவாசம் கொண்ட ஆபத்தானவர்கள்; இந்துமதம் இந்தியாவில் தோன்றி வளர்ந்தது என்பதால் பூகோள ரீதியிலும், வரலாற்று ரீதியிலும், கோமாதா புனிதமான பிராணி என்பதால் விலங்குகள் ரீதியிலும்கூட இது புண்ணிய பூமி என்று ஆர்.எஸ். கும்பல் பிதற்றுகிறது.

இந்தியாவின் ஐக்கியத்துக்கு 'பசுவைத் தெய்வமாக மதிப்பதைப் பொதுப் பண்பாக ஏற்பதுதான் ஒரே அடிப்படை என்றார், ஆர்.எஸ்.எஸ்.-சின் இரண்டாவது 'குருஜி' கோல்வால்கர். பூசை அறைகளும், புனிதச் சின்னங்களும் நிறைந்த இடமே உண்மையான ஒரு இந்து வீடு; முறையாக கோவிலுக்குச் சென்று வழிபடுவதும், வீட்டில் தவறாமல் பூசை செய்வதும், பெயர் வைப்பது, மணம் முடிப்பது, இறுதிச்சடங்கு செய்வது ஆகியவற்றில் குறைந்தபட்ச இந்து சடங்கு - சாத்திரங்களையாவது கடைப்பிடிப்பதும் இவைதான் ஒரு இந்துவின் அடையாளங்கள் என்கிறார், இப்போதைய பொதுச்செயலாளர் சேஷாத்திரி. இதன் மூலம் பல்வேறு வகைப்பட்ட வழிபாடு முறைகள், சடங்குகளைப் பின்பற்றும் 'இந்து'க்களை ஒரு குறிப்பிட்ட வரையறையின்கீழ் திணிக்க முயலுகிறது, ஆர்.எஸ்.எஸ். கும்பல். அதன் வரையறைகளை ஏற்காதவர்கள் இந்தியப் பண்பாட்டிற்கே அப்பாற்பட்டவர்கள், அந்நியர்கள் என்று முத்திரை குத்தித் தாக்குவதற்கான முகாந்திரம்தான் இது.

அதேசமயம் முஸ்லீம்களில் நல்லவர்கள், மோசமானவர்கள் ஆகிய இரு பிரிவுகள் உள்ளதாகக் கூறுகின்றனர். பாபரின் பிள்ளைகள், ரகீமின் பிள்ளைகள் இன்று அப்பிரிவுகளை ரிதம்பரா பாகுபடுத்துகிறார். இதையே, ''முஸ்லீம்களாகவும் கிறித்துவர்களாகவும் நிர்பந்தப்படுத்தி மாற்றப்பட்டவர்கள்; அதாவது யார் தமது மதம் அந்நியர்களின் படையெடுப்பு ஆக்கிரமிப்பின் விளைவே தவிர தமது சொந்த நம்பிக்கை அடிப்படையிலானது அல்ல என்பதை ஏற்கிறார்களோ அவர்கள் இந்து சமூகத்துக்குள் அடங்குவர்'' என்று சாது வாமன் தாஸ் விசுவ இந்து பரிஷத்தின் ''இந்து ராஷ்டிரா''வில் எழுதியுள்ளார். பி.ஜே.பி.யின் துணைத் தலைவராக உள்ள பிழைப்புவாதி சிக்கந்தர் பக்த், அத்வானியின் ''ரதயாத்திரை'' காரை ஓட்டிய முஸ்லீம் போன்றவர்கள் இதற்கு உதராணமாகக் காட்டப்படுகின்றனர். ஆர்.எஸ்.எஸ். கும்பலின் இக்கருத்தை ஏற்காதவர்கள் தேசத் துரோகிகளாகச் சித்தரிக்கப்படுகின்றனர்.



ஆர்.எஸ்.எஸ்.-ன் முதல் குரு சவார்க்கர்

> இசுலாமிய மதம் சகிப்புத் தன்மையற்றதாக சித்தரித்து அதை ஒழிக்க வேண்டும் என ஆர்.எஸ்.எஸ். கும்பல் போதிக்கிறது.

ஆர்.எஸ்.எஸ்.-இன் ''இந்து ராஷ்டிரத்து''க்குள், முஸ்லீம்கள் சுதந்திரமான சமமான குடிமக்களாக இருப்பார்கள் என முதலில் பிரகடனம் செய்தார்கள். பிறகு இந்துக்களால் விதிக்கப்படும் நிபந்தனைகளை ஏற்றால்தான் இங்கு உயிர் வாழவே முடியும் என்கிறார்கள். அவர்களின் தர்க்கம் இதுதான். கோட்பாடு ரீதியில் அரசு வேறு, தேசம் வேறு எனப்பிரிக்கிறார்கள்; தேசம் என்பது உணர்வு, உடல் - உயிர்பூர்வமாக ஒரு மண்ணில் வாழும் ஒரு சமூகத்தின் பண்பாட்டுக் கருத்தாக்கும் என்று விளக்குகிறார்கள். மண்ணின் புனிதத்துவம்தான் மையமானது. இதன்மூலம் தேசியம் பற்றிய உணர்வுகளின் கட்டுமானத்தை எழுப்புகிறார்கள். இந்த புண்ணிய பூமியின் புனிதமான ஒருமைப்பாட்டை சீர்குலைத்துப் பிளவுபடுத்தியவர்கள் முஸ்லீம்கள்தான் என்கிற வெறுப்பைப் பரப்புகிறார்கள். புனிதமான ஒருமைப்பாடு, புண்ணிய பூமியைப் பிளவுப்படுத்துவது என்கிற அவதூறின் அடிப்படையில்தான் ராமஜென்ம பூமி பிரச்சினையும் எழுப்பப்படுகிறது. அதன் நீட்டிப்பாகவும், மிகக் குறுகிய அளவிலும் இந்து - முஸ்லீம் நிலப்பிரச்சினையை பிரதிபலிப்பதாகவும் சித்தரிக்கப்படுகிறது.

வேறு எந்த அடிப்படையிலும் இந்துக்களுக்கான பொது அடையாளச் சின்னம் காட்ட முடியாது என்பதால் ''அவர்களுக்கு (முஸ்லீம்களுக்கு) எதிராக ''நம்மவர்கள்''-ன் நிரந்தரப் போராட்டம் என்கிற நிலையை ஆர்.எஸ்.எஸ். கும்பல் உருவாக்குகிறது. ஒரு எதிரியை உருவகித்துக் கொள்வதுதான் ''இந்துக்கள்'' அனைவருக்குமான ஒரு பொதுத் தன்மையைத் தரமுடியும். ஆதாரபூர்வமான வரலாற்றின்படி வேறு பொதுத்தன்மை (இந்து தர்மம்) என்பதே கிடையாது. அதன் பல்வேறு பிரிவுகளுக்கும் வேறு வேறு தர்மங்களே இருந்தன. அதனால் தான் இந்து தர்மம் என்று எதையுமே பருண்மையாக இந்துத்துவ சித்தாந்தத்தால் வரையறுத்துக் கூறமுடியவில்லை,

★★★

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழுள்ள சோசலிசம் தோல்வி கண்டுவிட்டதாக நிராகரிக்கும் ''இந்து ராஷ்டிரம்'' நாடாளுமன்ற ஜனநாயகம் கூட உள் முரண்பாடுகள் பிரச்சினைகளைக் கொண்டதாக நிராகரித்து விட்டு அர்த்த சாஸ்திரம், மனு தர்மம் அடிப்படையிலான பார்ப்பனியப் பேரரசையே தூக்கிப் பிடிக்கிறது. ஆர்.எஸ்.எஸ்.-இன் பிரச்சாரகரும் பிரபல பத்திரிகையாளருமான கிரிலால் ஜெயின் எழுதிய ''மதச்சார்பின்மைக்கு எதிரான தேசியம்'' என்கிற நூலை அதன் அதிகாரபூர்வ ஏடு வெளியிட்டது. அந்நூல் அந்தக்கால பேரரசர்களைப்போல் ஆஃப்கான், இலங்கை, பர்மா உட்பட ''அகண்ட பாரத'த்தை நிறுவும் வல்லரசு நோக்கத்தை பெருமையோடு பிரகடனம் செய்கிறது. குடிமக்களை எந்நேரமும் வேவுபார்க்கும் உளவு அமைப்பு, முடியாட்சி, அதிகார வர்க்கக் கட்டுப்பாடு, ஏகபோகம் ஆகியவற்றைப் போதிக்கிறது, சாணக்கியனின் அர்த்த சாஸ்திரம். சூத்திரர்களையும் பெண்களையும் எப்படி அடிமையாக அடக்கி ஆள்வது என்று வழிகாட்டுகிறது, மனு தர்மம். இவைதான் ஆர்.எஸ்.எஸ். கும்பலின் அன்றாடப் பிரசங்கங்களில் நிரம்பி வழிகின்றன. அயோத்தி மசூதியைத் தகர்த்தபிறகு இந்திய அரசியல் சட்டம் அர்த்தசாஸ்திரம், மனு தர்மம் அடிப்படையில் திருத்தப்பட வேண்டும் என்று ஆர்.எஸ்.எஸ். சாமியார்களால் பகிரங்கமாக வலியுறுத்தப்பட்டதையும் அறிவோம்.

O ஆர்.கே



படிப்பகம்

www.padippakam.com

# ஆர்.எஸ்.எஸ். காலிகள் அடித்து விரட்டப்பட்டனர்!

திருச்சியில் நகரசுத்தி தொழிலாளர்கள் நிறைந்த பகுதி செங்குளம் காலனியில் 21.12.93 அன்று விவேகானந்தர் பேரவை என்ற பெயரில் ஆண், பெண் உட்பட 40 பேர் ஆர்.எஸ்.எஸ். காரர்கள் நுழைந்து இந்துவெறியூட்டும் பிரச்சாரம் செய்தனர். வீடு வீடாகச் சென்று நம் தெருவில் குத்துவிளக்கு பூஜை நடத்துகிறோம்; திருமணம் ஆகாத பெண்கள் குத்துவிளக்கு ஏற்றினால் திருமணம் ஆகும் எனப் பலவாறாகக் கூறி தாழ்த்தப்பட்டவர்களைத் திரட்டினர். நாம் இந்துக்களாக இருந்தும் உணர்வின்றி இருக்கிறோம்; இதையே விவேகானந்தர் போதித்தார் என இந்துவெறியூட்டிப் பிரச்சாரம் செய்தனர். விவேகானந்தர் பேரவையினர் ஆர்.எஸ்.எஸ். சின்னம் அணிந்திருப்பதைப் பார்த்து அப்பகுதியிலுள்ள புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணித் தோழர் விசாரித்தார். தாங்கள் ஆர்.எஸ்.எஸ்.க்காரர்கள் என்பதை ஒத்துக் கொண்டனர்.

பிறகு பு.மா.இ.மு. தோழர் ''நாம் எல்லோரும் ஒன்று என்றால் நான் உண்ணும் மாட்டுக்கறியை சாப்பிடத் தயாரா?'' எனப் பலவறாக கேள்வி கேட்டார். ''முன்பு சாப்பிட்டதாகவும் கோமாதா கனவில் வந்து மிரட்டியதால் சாப்பிடுவதில்லை'' என்றும் சிறுபிள்ளைத்தனமாக தெரியாமல் மழுப்பினார். அதற்குள் பகுதியிலுள்ள பிற தோழர்கள், தி.க., தி.மு.க. DYFI இளைஞர்கள் திரண்டு ஆளுக்கொரு கேள்வி கேட்க ஆரம்பித்தனர். ''நாம் சமம் என்றால் எங்களுடன் திருமண சம்மந்தம் செய்து கொள்வீர்களா'' என்றெல்லாம் கேட்கவே பிரச்சாரத்தை நிறுத்திக் கொண்டு குத்துவிளக்கு பூஜை செய்ய முற்பட்டனர். பகுதி இளைஞர்கள் பு.மா.இ.மு. தோழருடன் கோஷமிட்டு தடுத்து மைக்கையெல்லாம் பிடுங்கி விரட்டியடித்தனர். பகுதி நாட்டாண்மைகாரர்களும் தலையிட்டு விரட்டவே சிறிது நேரத்திற்குள் காணாமல் போனார்கள்

அவ்வாறு ஓடும்போது பு.மா.இ.மு. தோழர் திராவிடன் என்பவரிடம் ஒருவன் கைகொடுத்து நன்றாக பேசியாதாகப் பாராட்டிச் சென்றான். அவன் மீண்டும் மறுநாள் வந்து தோழரிடம் ஆர்.எஸ்.எஸ். இயக்கம், அதன் கொள்கைப் பற்றியும் செயல்பாடுகளைப் பற்றியும் உயர்வாகப் பேசி குத்துவிளக்கு பூஜை செய்ய அனுமதிக்க வேண்டும் என்று கேட்கவே தோழர்கள் தகுந்த பதில் கொடுத்து எச்சரிக்கவே ஓடிவிட்டான். இப்பிரச்சினையில் பு.மா.இ.மு.வின் செயல்பாட்டையும் இந்துமதவெறியர்களை அம்பலப்படுத்தியதையும் பகுதி



மக்கள் வரவேற்றனர். குறிப்பாக இளைஞர்கள் உற்சாகமடைந்தனர். ஆனால், DYFI யிலுள்ள இளைஞர்களை, அவர்களது தலைமையிலான 'மார்க்சிஸ்டு'கள் அதாவது பூணூல் கம்யூனிஸ்டுகள் கண்டித்துள்ளனர்.

மேலும் திருவரங்கம் பகுதியில் விவேகானந்தர் பேரவை, பஜ்ரங்தள் ஆகிய இரண்டு அமைப்பினர் திருமண மண்டபத்தை வாடகைக்கு எடுத்து தங்கி ஒரு வாரகாலமாகப் பிரச்சாரம் செய்தனர். சங்கராச்சாரிகளின் 'தெய்வ வாக்கு' என பல வண்ண, பலவகைச் சுவரொட்டிகள், தட்டிகள், சுவரெழுத்து முழக்கங்கள் மூலம் இந்துவெறிப் பிரச்சாரம் செய்தனர். இந்துக்களின் நாள், வாராந்திர, மாதாந்திர, வருட கடமைகளை விளக்கி பிரசுரம் ஒன்று விநியோகித்ததோடு காவிக் கொடிகளையும் பறக்கவிட்டனர். 600 பேருக்கும் மேல் வெளியூர்களிலிருந்து வந்து குவிந்து சில பத்தாயிரங்களை செலவழித்து இப்பிரச்சாரத்தை மேற்கொண்டனர். இதில் 90 சதவிகிதம் பேர் பார்ப்பனர்கள். பல சாமியார்கள் ஜோசியம், மந்திரம், வெறுங்கையில் திருநீறு வரவழைப்பது போன்ற புரட்டுகளின் மூலமே மக்களைத் திரட்டினர். ஆனால் மக்களில் பலர் இவர்களைச் சீண்டாததோடு பிரசுரங்களைப் பார்த்து எரிச்சலாகி கசக்கி வீசியெறிந்தனர். திருச்சி நகர பு.மா.இ.மு.வினரும் இந்துவெறியர்களை அம்பலப்படுத்திப் பகுதியில் பிரச்சாரம் மேற்கொண்டு வருகின்றனர்.

## ஆர்.எஸ்.எஸ். பார்த்தீனியம் பரவும் விதம்

இந்து மதவெறியைத் தமிழகத்தில் விதைத்து மக்களை கூறு போட்டு வரும் ஆர்.எஸ்.எஸ்.-குடும்ப அமைப்பான இந்துமுன்னணி, அமைப்பு கட்டும் யோக்கிதையும் ஆள் பிடிக்கும் லட்சணமும் என்ன தெரியுமா? எமக்கு வந்த கடிதம் ஒன்றே தக்க பதில் கொடுக்கிறது பாருங்கள்.

ஆசிரியர் அவர்களுக்கு வணக்கத்துடன் எழுதுவது, எங்கள் பகுதியான சென்னை - சி.ஜி.காலனி, காசிமேட்டில் மத வேற்றுமையின்றி சகோதரர்களாக அமைதியாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எங்கள் பகுதியில் அடகு கடை மற்றும் வட்டிக்கு விடும் தொழில் நடத்தும் பெயர் தெரியாதவர் ஒருவர் இன்னொரு நபருடன் என் வீட்டிற்கு வந்து காசிமேட்டில், இந்து முன்னணி பொதுக்கூட்டத்திற்குத் தலைமை தாங்க வேண்டும் என்று வற்புறுத்தினார். இந்துமுன்னணியின் நோக்கங்களோ, திட்டங்களோ எனக்குத் தெரியாது. இதைப்பற்றி ஒன்றும் சொல்லாமல் என் விருப்பம் இல்லாமல் என் பெயரை இந்து முன்னணி பொதுக்கூட்டத்தின் ''போஸ்டரில்'' அச்சடித்தனர். இதனால் நான் கோபமுற்று இந்துமுன்னணி அமைப்பாளரிடம் முறையிட்டேன்.

மேலும் என்னை வற்புறுத்தி பொதுக்கூட்டத்தில் தலைமை ஏற்க வைத்தனர். நானும் வேண்டா வெறுப்போடு தலைமையேற்றேன். இவர்கள் பேசிய பேச்சுகளைப் பார்த்தவுடன் கீழே இறங்கிவிட்டேன். அந்த அளவிற்கு மத வெறியைத் தூண்டி அருவருக்கத்தக்க முறையில் ஆபாசமாகப் பேசினர். முஸ்லீம் மதத்தவரை எய்ட்ஸ் நோய் என்றும், கிறிஸ்தவரை குஷ்டரோகிகள் என்றும், பெரியாரை டி.பி. நோய்க்கிருமி என்றும், கம்யூனிஸ்டுகளை மூளைக்காய்ச்சல் நோய் என்றும் வசைமாறி பொழிந்தனர். மேலும், இதனால் கலக்கமுற்று தனியாக ஒதுங்கிக் கொண்டேன். இதைப்பார்த்த போலீசு ஒருவர் ''என்ன தலைவரே, கீழே இறங்கிவிட்டீர்?'' என்று கேட்டார். எனக்கு விருப்பமில்லை என்பதை தெரிவித்துவிட்டேன்.

மேலும், பொதுக்கூட்டம் முடிந்தவுடன் அங்கு இருந்த விரல்விட்டு எண்ணக் கூடிய 15 பேரிடம் துண்டுசீட்டுக் கொடுத்து விலாசம் வாங்கிக் கொண்டு, இன்னும் இரண்டு நாட்களில் தலைவர் எஸ். கிருஷ்ணராஜ் வீட்டில் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்படுவர் என்று என்னுடைய கருத்தை அறியாமலேயே தெரிவித்தனர். எனவே மற்ற மதத்தவர்களின் மனதைப் புண்படுத்தும் அமைதியைக் கெடுக்கும் இத்தகைய அமைப்புகளிடமிருந்து இந்த நாட்டு மக்களை விழிப்புணர்வூட்ட இதைப் பத்திரிகையில் பிரசுரிக்கவும் நடவடிக்கை எடுக்கவும் வேண்டுகிறேன்.

தங்கள் உண்மையுள்ள
எஸ். கிருஷ்ணராஜ்
பூங்காபுரம்-மீனவர் பஞ்சாயத்து சபைத் தலைவர்
7, பூங்காபுரம் முதல் தெரு,
சி.ஜி.காலனி, சென்னை-13



படிப்பகம்

www.padippakam.com

# இற்றுவிழும் தேர்தல் முறைக்கு முட்டுக் கொடுக்கும் சேஷன்

யாருக்கு அதிகாரம் என்று மத்திய, மாநில அரசுகளுடன் சர்ச்சையில் ஈடுபட்டு வந்த தலைமைத் தேர்தல் கமிஷனர் சேஷன், கடந்த ஒரு மாத காலமாக சில அதிரடி திட்டங்களை அறிவித்தபடி உள்ளார். "எதிர்காலத்தில் தேர்தலை முறையாக நடத்தி தில்லு முல்லுகளை அடியோடு ஒழிக்க, போட்டோ ஒட்டிய அடையாள அட்டையை இவ்வாண்டுக்குள் எல்லா வாக்காளர்களுக்கும் வழங்க வேண்டும்; இல்லையேல் அடுத்த எந்தவொரு தேர்தலையும் நடத்த அனுமதிக்க மாட்டேன்" என்று மத்திய-மாநில அரசுகளை சேஷன் எச்சரித்துள்ளார்.

தேர்தல் பிரச்சாரத்துக்காக வீட்டுச் சுவர்களில் எழுதப்பட்ட வாசகங்களை வேட்பாளர்கள் தேர்தல் முடிந்ததும் வெள்ளை அடித்து சுத்தம் செய்து தர வேண்டும்; தேர்தலில் வன்முறை - மோதல் ஏற்படுவதைத் தடுக்க அச்சமயத்தில் துப்பாக்கி லைசென்சு தருவதை நிறுத்த வேண்டும்; வேட்பாளர்கள் கார்கள் - வாகனங்களில் பவனி வருவதைத் தடுக்க வேண்டும்; 3 கார்களுக்கு மேலாக பயன்படுத்தக் கூடாது; இவற்றை பின்பற்றத் தவறினால் சம்பந்தப்பட்ட தொகுதிகளில் தேர்தல் உடனடியாக ரத்து செய்யப்படும் என்று அடுக்கடுக்கான உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளார்.

இதுதவிர, மாநில சட்டசபைகள் மூலம் நாடாளுமன்ற மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள், அந்த மாநிலத்தைச் சேர்ந்தவராகவே இருக்க வேண்டும்; பொய்யான முகவரி கொடுத்து வேறு மாநிலங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டால் அந்த உறுப்பினரின் பதவி பறிக்கப்பட்டு தண்டிக்கப்படுவார் என்று எச்சரித்துள்ளார். ஏற்கனவே நிதியமைச்சர் மன்மோகன் சிங்; அசாம் மாநிலத்திலிருந்து இவ்வாறு முறைகேடாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது போன்ற பல மந்திரிகளின் தேர்தலை அவர் ஆட்சேபித்துள்ளார்.

வரம்பற்ற அதிகாரத்தைக் கையிலேந்தி கொட்டமடிப்பதாக இதுநாள் வரை சேஷனைச் சித்தரித்து வந்த பத்திரிகைகள், இப்போது நியாயமான, சுதந்திரமான தேர்தல் நடத்துவதற்காகவே அவர் தனது அதிகாரத்தைப் பிரயோகிக்கிறார் என்று புகழாரம் சூட்டுகின்றன.



தேர்தல் தில்லுமுல்லு மோசடி - வன்முறைகள் காரணமாக, இத்தகைய போலி ஜனநாயகத் தேர்தல் முறையின் மீது மக்களுக்கு அதிருப்தி பெருகி வருகிறது. இந்தியாவில் மனித உரிமைகள், ஜனநாயக உரிமைகள் மீறப்படுவதைக் குற்றம்சாட்டிவரும் அமெரிக்காவிடம், உலகிலேயே மிகப் பெரிய ஜனநாயக நாடாக இந்தியா திகழ்வதாகக் காட்டுவதற்கு தேர்தல் சீர்திருத்தங்களைக் கொண்டு வருவது ஆட்சியாளர்களுக்கு அவசியமாக உள்ளது. பெருகிவரும் விலையேற்றம் முதலான பொருளாதாரத் தாக்குதலுக்கு ஆளாகிவரும் உழைக்கும் மக்கள் ஓட்டுக் கட்சிகள் மீதும் தேர்தல் முறையின் மீதும் வெறுப்பும் ஆத்திரமும் கொண்டுள்ளனர். அவர்கள் இந்தியப் போலி ஜனநாயகத்தை வீழ்த்த ஒரு புரட்சிக்கு அணிதிரளுவதற்கு முன்பாக, அவர்களது அதிருப்திக்கு வடிகால் வெட்டும் நோக்குடன், தேர்தல் சீர்திருத்தங்களைக் கொண்டு வந்து ஜனநாயக மாயையை ஏற்படுத்த வேண்டிய அவசியம் ஆட்சியாளர்களுக்கு அதிகமாகவே உள்ளது. அதை நிறைவேற்றும் வகையில்தான் சேஷன் தேர்தல் சீர்திருத்த அதிரடி உத்திரவுகளைப் பிறப்பித்து வருகிறார். ஆனால், தமிழக இடைத்தேர்தலில் தேர்தல் கமிஷனின் சில கட்டுப்பாடுகளை - கண்காணிப்பை மீறி சாதிபலம், குண்டர் பலம், பணபலம், அதிகார பலத்தைப் பயன்படுத்தி ஜெயலலிதா அட்டூழியம் புரிந்தது போலவே தொடரும்.

## புதிய வகை ஒட்டுண்ணிகள்

நாட்டின் 40%க்கும் மேலான மக்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும்போது, நாடாளுமன்ற உறுப்பினர்களோ மக்கள் வரிப்பணத்திலிருந்து மேலும் சலுகைகளை அனுபவித்துக் கொண்டு கொழுத்துத் திரிகிறார்கள். கடந்த டிசம்பர் இறுதியில் ஒவ்வொரு எம்.பிக்கும் தொகுதி வளர்ச்சி நிதியாக ஒரு கோடி ரூபாயை பிரதமர் ஒதுக்கியுள்ளார். இது தவிர 3 தொலைத் தொடர்பு தொலைபேசி; 3 லட்சம் முறை இலவசமாக "போன்" செய்துகொள்ள சலுகை, கார் வாங்குவதற்கு முன்பணம் - கடனுதவி, டெல்லியில் வீட்டுமனை வாங்க முன்னுரிமைச் சலுகை, இதுதவிர முன்னாள் எம்.பி.க்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டித்தருதல், ஆண்டுக்கு 28 முறை எம்.பி.க்கள் இலவசமாக விமானப் பயணம் செய்ய வசதிகள்; மற்ற விமானப் பயணங்களுக்கு சலுகைக் கட்டணம், குளிர்பதன முதல் வகுப்பு ரயில் பயணச் சலுகை, மரச்சாமான், சோபா, படுக்கை, திரைச்சீலைகளை 3 மாதத்திற்கொரு முறை சுத்தம் செய்ய இலவச சேவை, கழிப்பறை, குளியலறைகளில் பளிங்குகற்கள் பதித்துக் கொள்ள ஏற்பாடுகள், தண்ணீரையும் மின்சாரத்தையும் வரம்பின்றி பயன்படுத்திக் கொள்ள உரிமை — இப்படி அடுக்கடுக்காக சலுகைகளை குவித்துக் கொண்டுள்ளார்கள், நமது நாடாளுமன்றப் பிரதிநிதிகள்.

தொகுதி வளர்ச்சி நிதித்திட்டத்தை போலிக் கம்யூனிஸ்டுகள் தவிர எல்லா ஓட்டுக் கட்சிகளும் வரவேற்று ஆதரித்துள்ளன. மாதச் சம்பளம் ரூ. 1500, தொகுதி "அலவன்சு" ரூ. 3000, தினசரிப்படி ரூ. 200 என தற்போதுள்ள சம்பளம் - படிகளையும் உயர்த்த வேண்டுமென அக்கட்சிகளின் பிரதிநிதிகள் கோரியுள்ளனர்.

இத்தனை சலுகைகளையும் அனுபவிக்கும் நாடாளுமன்றப் பிரதிநிதிகள் தமது தொகுதியின் மிகச் சாதாரண கோரிக்கையைக்கூட நாடாளுமன்றத்தில் முன்வைத்து வாதிடுவது கிடையாது. நாடாளுமன்றத்துக்கு வராமலேயே, கையெழுத்துப் போட்டுவிட்டு சம்பளம், படிகள், சலுகைகளை அனுபவிப்பது தான் நடைமுறையாக உள்ளது. ஏற்கனவே அரசு எந்திரம் பூதாகரமாகப் பெருத்து நமது வரிப்பணத்தை விழுங்கிக் கொண்டிருக்கிறது. இந்நிலையில் புதிய சலுகைகளோடு நமது உதிரத்தை உறிஞ்சும் புதியவகை ஒட்டுண்ணிகளாகி விட்டார்கள் நாடாளுமன்ற பிரதிநிதிகள்.

*Published and owned by A.SHANMUGARAJ, 4, Samiyar Thottam, Alandur Road, Saidapet, Madras - 600 015*
*Printed by him at EZHIL PRINTS, 321, Arcot Road, Madras - 600 024, Editor: A.SHANMUGARAJ*

படிப்பகம்

www.padippakam.com




# இதுதான் இன்றைய இந்தியா

**பா**ம்பின் வாலைப் போல நெளிந்து வளைந்து செல்லும் நீண்ட வரிசை. அருகிலேயே காத்திருப்பவர்களின் எண்ணிக்கையோடு போட்டி போடும் அவர்களது கார்கள், ஸ்கூட்டர்களின் அணிவகுப்பு. பங்குப் பத்திரங்களில் முதலீடு செய்ய விடியற்காலைத் தொடங்கியே கால் கடுக்க நிற்கும் கூட்டமிது. அதுவும் சாதாரண நிறுவனத்தில் அல்ல; பல தடைகளை உச்சநீதி மன்றத்தின் துணையுடன் உடைத்தெறிந்து விட்டு அமெரிக்காவிலிருந்து இந்தியாவில் புதிதாகக் குதித்திருக்கும் ''மார்கன் ஸ்டான்லி'' எனும் பன்னாட்டு நிறுவனத்தின் பங்குகளை வாங்கத் தவமிருக்கிறார்கள், தொழில் முறை தரகர்கள், தொழிலதிபர்களிலிருந்து 'இருப்பதை விட்டு பறப்பதை'ப் பிடிக்கத் துடிக்கும் நடுத்தர வர்க்கத்தினர் வரை பல தரப்பினர் இக்கூட்டத்திலுண்டு. பங்குச் சந்தை ஊழல் சந்தி சிரித்த பின்புகூட மூன்றே நாட்களில் இந்நிறுவனத்தில் 300 கோடி ரூபாயை முதலீடு செய்துள்ளார்கள் இவர்கள்.

இங்கே வேறொரு காட்சி! இது பொங்கலுக்கு அரசு கொடுக்கும் இலவச வேட்டி - சேலையை வாங்கக் காத்திருக்கும் மக்களின் கூட்டம். அரிசிக்கும் பருப்புக்கும் மட்டுமல்ல! மானத்தை மறைக்கும் துணிக்கும் கூட இவர்களில் மிகப் பெரும்பாலோர் அரசை நம்பித்தான் உள்ளனர் என்பதற்கு இக்காட்சி ஓர் உயிரோட்டமான உதாரணம். ஆனாலும் ஜெயா அரசு தனது கஜானாவை நிரப்ப இவர்களின் அடி மடியிலே தான் கை வைக்கிறது. பொது விநியோக முறையின் அரிசி விலையைக் கூட்டியதோடு, குடும்ப அட்டை வழங்குவதற்கே கட்டணம் வசூலித்தது; பேருந்து கட்டண உயர்வு, கல்வி, தேர்வு கட்டண உயர்வு என அடுத்தடுத்துத் தலையில் இடியை இறக்கியது. பெய்த அடைமழையில் இவர்களது அற்ப சொற்ப உடமைகளும் பறி போனபோது, தன்னைச் சந்திக்க வந்தவர்களையும், போராடியவர்களையும் அடித்துத் துரத்தியது. தனது ஆடம்பர - அடக்குமுறை ஆட்சியினால் பெருகிவரும் மக்களின் அதிருப்தியை சமாளிக்க இதுபோன்ற கவர்ச்சித் திட்டங்களை ஏராளமாக அறிவித்து ஏய்க்கப் பார்க்கிறது.

இருப்பதை மேலும் மேலும் எப்படியாவது பெருக்கத் துடிக்கும் பணக்கார கும்பல் ஒருபுறம். ஓய்வின்றி உழைத்தாலும் ஒரு காசு கூடக் கையில் தங்காது ஓட்டாண்டிகளாகும் உழைக்கும் மக்கள் மறுபுறம். புதிய பொருளாதாரக் கொள்கையின் மூலம் அவர்களது கண்களில் வெண்ணெய் வைக்கும் இந்த அரசுகள், இருப்பதையும் தட்டிப் பறித்து உழைப்போரின் கண்களில் சுண்ணாம்பைத் தடவுகின்றன. இந்த ஒட்டுண்ணி கூட்டங்களை இன்னும் எத்தனை நாள்தான் நமது முதுகில் சவாரி ஏறவிடுவது?



படிப்பகம்